பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

கடகம் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 26 சனிக்கிழமை (11-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:291

இலங்கை-இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் அடுத்த மாதத்தில்!

அமைச்சுச் செயலாளர் சிறில் ஹேரத் தகவல்

கொழும்பு,செப்.11

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உத்தேசப் பாதுகாப்பு ஒப்பந்தம் பெரும்பாலும் அடுத்தமாதம் இறுதியளவில் கைச்சாத்தாகும். இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

ஒப்பந்தத்தை மேற்கொள்வது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன என்றும் அவர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான பூர்வாங்க அறிக்கையை இரண்டு நாடுகளின் அதிகாரிகளும் பரிமாறிக்கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இரு நாடுகளுக்கும் இடையில் இராணுவப் பயிற்சி, இரு தரப்புப் புலனாய்வுச் செய்திப் பரிமாற்றம், கடற்பிரதேசத்தில் இருநாட்டுக் கடற்படையினரின் கூட்டுக் கண்காணிப்பு என்பன இந்த ஒப்பந்தத்தில் முக்கியமாக அடங்கியுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

காரைநகர் கடற்படைத் தளத்தில் வெறியாட்டம்

சிப்பாய் மீது சக சிப்பாய் ரி-56 மூலம் சரமாரியாக வேட்டு!

யாழ்ப்பாணம்,செப்.11

காரைநகர் கடற்படைத் தலைமையகத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இவரைச் சுட்டுக்கொன்றவர் எனக் கூறப்படும் சக சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் இருவருக்கும் இடையே நீண்ட நாள்களாக இருந்துவந்த பகைமை நேற்றுக் கொலையில் முடிந்திருக்கிறது.

நேற்றுப் பிற்பகல் 4மணியளவில் இந்த இருசிப்பாய்களும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுக்கொண்டனர் என்றும் -

அப்போது அவர்களில் ஒருவர் ரி-56ரக இயந்திரத் துப்பாக்கியை எடுத்து அடுத்தவரை நோக்கிச் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தார் என்றும் கூறப்படுகிறது.

மிக நெருக்கமாக இருந்து இயந்திரத் துப்பாக்கியால் சுடப்பட்டதில் அந்தச் சிப்பாய் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். அவரது உடலை துப்பாக்கிக் குண்டுகள் சல்லடையாகத் துளைத்திருந்தன.

ஊர்காவற்றுறை பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு கடற்படைமுகாமுக்குச் சென்று இறந்த கடற்படைச் சிப்பாயின் உடலைப் பார்வையிட்டார்.

இறந்தவர் கரந்தன கமரலாகே அஜித் குமார (வயது 22) என அடையாளம் காணப்பட்டார். அவரது சடலத்தை கொழும்புக்கு அனுப்பி சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறு நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலம் கொழும்புக்கு அனுப்புவதற்காக நேற்றிரவு பலாலி விமானத்தளத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

(ஐ)

புல்லுமலைத் தாக்குதல் குறித்துக் கண்காணிப்புக் குழுவுக்குக் கடிதம்

புலிகளை ஆத்திரமூட்டி இராணுவம் சமாதானத்தைக் குடிப்ப முயல்கிறது

தமிழர்களது பொறுமை எல்லை மீறுகிறது என நேரடியாக எச்சரிக்கிறார் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,செப்ரெம்பர்11

புல்லுமலைத்தாக்குதல் போன்ற சம்பவங்களைப் பார்க்கும்போது, யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கைகளின் மூலம் புலிகளை ஆத்திரமூட்டி, முழுச் சமாதான நடவடிக்கைகளையுமே குழப்புவதற்கு இலங்கை இராணுவம் முயல்கிறது என்ற பொதுவான சந்தேகமும் அச்சமும் ஏற்படுகின்றது.

தமிழர்களினதும் அவர்களினது தலைமையினதும் பொறுமையும் எல்லை மீறுகின்றது.

- இவ்வாறு எச்சரிக்கும் தொனியில் தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

புல்லுமலையில் புலிகளின் எல்லை நிலை மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கு எழுதிய கடிதம் ஒன்றிலேயே தமிழ்ச்செல்வன் இப்படித் தெரிவித்திருக்கின்றார். அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சில தமிழ் இளைஞர்களையும் எஞ்சியோர், இலங்கை இராணுவத்தினரையும் கொண்ட சுமார் முப்பதுபேர் அடங்கிய குழு ஒன்று புல்லுமலையில் உள்ள புலிகளின் முன்னணி நிலை மீது செப்ரெம்பர் 7ஆம் திகதி இரவு 10 மணியளவில் வெறியாட்டம் நடத்தித் தாக்குதல் நடத்த முயன்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிலையில் இருந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் அந்தத் தாக்குதலை முறியடித்தனர். அங்கு நடந்த மோதலில் இரண்டு தாக்குதலாளிகள் கொல்லப்பட்டனர் என

(16ஆம் பக்கம் பார்க்க)

கூட்டமைப்பு எம்.பிக்கள் கனடா தூதருடன் சந்திப்பு

கொழும்பு,செப்.11

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று நேற்று கனேடியத் தூதுவர் வலன் ரேமியரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது. இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகத்தில் இடம்பெற்றது.

"இலங்கையில் சமாதான முன்னெடுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும். அது தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் அமையவேண்டும்" - என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தூதுவரிடம் விளக்கிக் கூறினர்.

கூட்டமைப்பின் எம்.பிக்கள் குழுவில் ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

கச்சதீவில் நிர்க்கதியாயிருந்த 28 அகதிகளும் நேற்று மீட்பு!

நெடுந்தீவு,செப்.11

கடந்த ஐந்து நாள்களாக கச்சதீவில் அந்தரித்துக்கொண்டிருந்த 28 அகதிகளும் நேற்று நெடுந்தீவுக்கு அழைத்துவரப்பட்டனர்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்குச் சென்ற 'உதயதாரகை' என்ற படகில் இவர்கள் அனைவரும் ஏற்றிவரப்பட்டனர்.

நேற்றையதினம் இவர்களுக்கு நெடுந்தீவு புனித டொன் பொஸ்கோ இளைஞர் மன்றத்தினரால் மதிய உணவு வழங்கப்பட்டது.

தொடர்ந்து நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் பராமரிப்பில் இருக்கும் இவர்கள் இன்று நண்பகல் யாழ். செயலகத்துக்கு அழைத்துவரப்படவுள்ளனர்.

பின்னர் அவர்களை அங்கிருந்து அந்தந்த இடங்களுக்கு வாகனங்கள் மூலம் அனுப்பிவைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இவர்கள் அனைவரும் கடந்த பல வருடங்களாக தமிழ்நாட்டின் திருச்சி, ஈரோடு, சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலுள்ள அகதிமுகாம்களில் தங்கியிருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரம்

(16ஆம் பக்கம் பார்க்க)

ஈவினையில் சுடப்பட்டவரின் மரண விசாரணை நேற்று

யாழ்ப்பாணம்,செப்.11

பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் புன்னாலைக்கட்டுவன் - ஈவினைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட நபரின் மரணவிசாரணை நேற்று இடம்பெற்றது.

மல்லாகம் பதில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இடம்பெற்ற மரண விசாரணையில் மரணமான அருணாசலம் முத்தையா (வயது-65) என்பவரின் மகன், மகள்

(16ஆம் பக்கம் பார்க்க)

மீனைச் சூடாக்கிச் சாப்பிட்டு ஐந்து நாள்களும் அந்தரித்தோம்!

கச்சதீவிலிருந்து மீட்டுவரப்பட்ட அகதிகள் கண்ணீர் மல்கத் தெரிவிப்பு

நெடுந்தீவு,செப்.11

கச்சதீவில் தங்கியிருந்த ஐந்துநாள்களும் உண்ண உணவின்றி, குடிக்க நீரின்றி தவியாய்த்தவித்தோம்.

குழந்தைகளும் சிறுவர்களும் பசி தாங்காமல் கதறி அழுதனர். என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் கடற்கரையில் இறங்கி அங்கு காணப்பட்ட வலைகளை வீசி மீன்பிடித்து அவற்றை நெருப்பில் வாட்டி உணவாக உண்டோம்.

நேற்று கச்சதீவிலிருந்து நெடுந்தீவுக்கு மீட்டுவரப்பட்ட ஈழ அகதிகள், கச்சதீவில் தங்கியிருந்த ஐந்து நாள்களும் தாம்பட்ட அவலங்களை இவ்வாறு கண்ணீர் மல்கக் கூறினர். அவர்கள் தங்கள் அவலக்கதையை அழுதுகொண்டே விவரித்தனர்.

அப்போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இராமேஸ்வரம் தங்கச்சிமடம் என்ற இடத்திலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்திய

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற மகாகவி பாரதி விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட தமிழ்நாடு, மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழியற் புலம் ஒப்பியல் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் இரா.மோகன் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் மதுரை செந்தமிழ்க் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியை திருமதி நிர்மலா மோகன் உரையாற்றுவதையும் கலாநிதி ஜெபநேசன், தமிழ்மன்றத் தலைவர் நிகேஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள் : கவிதரன்)

யாழ்ப்பாணக் கல்லூரியில் நேற்று சிறப்புற நடைபெற்ற பாரதி விழா

தமிழக அறிஞர்களும் பங்கேற்றனர்

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ் மன்றத்தினர் நடத்திய மகாகவி பாரதி விழா நேற்றுப் பிற்பகல் 3மணியளவில் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் தமிழ்மன்றத் தலைவர் செல்வன் எஸ். நிகேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆசியுரை வழங்கினார். கல்லூரியின் முதல்வர் நோயல் ஏ.விமலேந்திரன் தொடக்க வுரையாற்றினார்.

தொடர்ந்து தமிழ்நாடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலம் ஒப்பியல் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் இரா. மோகன் 'நல்லதோர் வீணை செய்தே' என்ற தலைப்பிலும் -

மதுரைச் செந்தமிழ்க் கல்லூரி தமிழ்த் துறைப் பேராசிரியை நிர்மலா மோகன் 'பாரதி கண்ட புதுமைப்பெண்' என்ற தலைப்பிலும் சிறப்புச்சொற்பொழிவாற்றினார்கள்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (4-13)

நல்லையில் இன்று மாம்பழத் திருவிழா

யாழ்ப்பாணம்,செப்.11

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு மாம்பழத் திருவிழா நடைபெறவுள்ளது. நாளை மாலை சப்பரத் திருவிழா இடம்பெறும். (10)

நல்லூர்த் தேரை முன்னிட்டு வர்த்தக நிலையங்களின் ஊழியர்களுக்கு விடுமுறை

யாழ்ப்பாணம்,செப்.11

நல்லூர்த் தேர்த்திருவிழாவை ஒட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி, ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கும்படி யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது.

வர்த்தகப் பெருமக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கழகம் கோரியுள்ளது. (எ-3)

தமிழ் இலக்கியவிழா கலந்துரையாடல்

வடக்கு - கிழக்கு மாகாணசபை, யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ள தமிழ் இலக்கிய விழா தொடர்பான கலந்துரையாடல் நாளைமறுதினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் சா.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் எஸ்.சிறிதேவி, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் கலாசார உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-9-6)

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியருக்கான அவசர கூட்டம்

வட்டக்கச்சி,செப்.11

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பான சகல விவரங்களும் அன்றைய தினம் திரட்டப்படவேண்டியுள்ளதால் 01.09.2004 இல் கடமைபுரிந்து கொண்டிருந்த சகல தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது அனுப்பி வைக்குமாறும் - -

வருகை தராதவர்கள் பாடசாலைகளில் கற்பித்தல் பணியில் இல்லாதவர்களாகவே கருதப்படுவார்கள் எனவும், அதன் பின்னர் தொண்டர் ஆசிரியர் பற்றிய எவ்விவரமும் பெறப்படமாட்டாது எனவும் சகல பாடசாலை அதிபர்களுக்கும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்திற்கு வருகைதரும் போது சகலரும் முதல் நியமனத் திகதியை உறுதிப்படுத்திய அதிபரின் கடிதத்தினையும் ஜி.சீ.ஈ. சாதாரண, உயர்தர சான்றிதழ்களின் பிரதிகளையும் கொண்டுவருமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (4-405)

சீனாவில் அடுத்தமாதம் நடைபெறும்

சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் பார்வையாளர்களாக யாழ். வர்த்தகர்கள்

யாழ்ப்பாணம்,செப்.11

சீனாவில் அடுத்தமாதம் 12ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் யாழ்ப்பாண வர்த்தகர்களும் பங்கேற்கவிருக்கின்றனர்.

இக்கண்காட்சியில் பார்வையாளராக யாழ். வர்த்தகர்கள் பங்குபற்றி பொருள்களை இறக்குமதி செய்யும் வாய்ப்புக்கள் குறித்து. சீன முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடவிருக்கின்றனர்.

இக்கண்காட்சியைப் பார்வையிடச் செல்வதற்கு 15 வர்த்தகர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் -

மேலும் வர்த்தகர்கள் செல்லவிரும்பினால் தமது விவரங்களை யாழ். வணிகர் கழகத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமைக்குள் பதிவு செய்யலாம் என்றும் - கழகத் தலைவர் இ.ஜெயராசா தெரிவித்தார்.

பலதரப்பட்ட பொருள்கள் 12ஆயிரம் காட்சிச்சாலையில் பார்வைக்கு வைக்கப்படவிருக்கின்றன. (எ-3)

16ஆம் திகதி தமிழ்ச்செல்வனை சந்திக்கிறார் எரிக் சொல்ஹெய்ம்

கொழும்பு,செப்.11

அடுத்த வாரம் இலங்கைக்கு வரும் நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் 16ஆம் திகதி கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

நாளைமறுதினம் திங்கட்கிழமை இலங்கைக்கு வரும் சொல்ஹெய்ம் ஐந்து தினங்கள் இங்கு தங்கியிருந்து சமாதான முயற்சிகளில் ஈடுபடுவார்.

"இது அவரது வழமையான விஜயங்களில் ஒன்று" - என்று கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் நேற்று விடுத்த அறிக்கையில் கூறியுள்ளது.

இந்த விஜயத்தின்போது அவர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அரசின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார் என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரைச் சந்திப்பதற்கு சொல்ஹெய்முடன் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸகரும் கூடச் செல்வார். (ஐ-7-9)

கடற்பயிற்சியின்போது சாவடைந்த மேஜர் சுதர்சனாவின் வித்துடல் விதைப்பு

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த 8ஆம் திகதி கடற்பயிற்சியின் போது வீரச்சாவடைந்த கடற்புலி மேஜர் சுதர்சனாவின் (துரைசிங்கம் - சதாநந்தினி, யாழ்ப்பாணம்) வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை விதைக்கப்பட்டது.

இம்மாவீரரது வித்துடல் அவரது இல்லத்தல் இருந்து எடுத்துவரப்பட்டு பிற்பகல் 1 மணியளவில் நவாலி மகாவித்தியாலய மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி தலைமையில் வீர வணக்கக் கூட்டமும் இடம்பெற்றது.

ஈகச் சுடரினை மாவீரரின் பெற்றோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட கடற்புலிகளின அரசியல் பிரிவைச் சேர்ந்த அருணன், கடற்புலிகளின் மகளிர் துணைத் தளபதி நாகதர்சினி, யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செமமணன், கடற்புலிகளின் நளாயினி படைத் தளபதி தமிழவள் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

வீரவணக்க உரையினை நவாலி மகாவித்தியாலய உப அதிபர், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த கிருஷ்ணா, கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணி ஆகியோர் ஆற்றினர்.

அதனைத் தொடர்ந்து மாவீரரது வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துவரப்பட்டு அணிவகுப்பு மரியாதையுடன் பிற்பகல் 4 மணிக்கு புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது. (4-7)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.11

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக, உயர் தேசிய முகாமைத்துவப் பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு(புதிய நேரம்) உயர் தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பட்டியலில் பெயர் இடம்பெற்றவர்களும், பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு ஒன்றியச் செயலாளர் வி.தயாபரன் கேட்டுக்கொள்கின்றார்.

வட இந்து மகளிர் கல்லூரியில் மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்

நெதர்லாந்து தூதர் திங்களன்று நடுவார்

யாழ்ப்பாணம்,செப்.11

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிக்கான புதிய இரண்டு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் சுசான்த பிளாங்கட் அம்மையார் அடிக்கல்லினை நட்டுவைப்பார்,

'நிக்கொட்' திட்டத்தின் கீழ் 60 லட்சம் ரூபா செலவில் இந்த புதிய இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை -

இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் கட்டடப் பணிகளையும் பார்வையிடவுள்ளார்.

'நிக்கொட்' திட்டங்களுக்கு நெதர்லாந்து பெரும் நிதியுதவிகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-7)

வாக்கு எண்ணும் நிலையங்களிலும் தேர்தலின்போது மோசடி நடக்கின்றது

அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்

கொழும்பு,செப்.11

தேர்தலில் வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களிலும் மோசடிகள் இடம்பெறுகின்றன என்பதை அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே நேற்று நாடாளுமன்றில் பகிரங்கமாகவே ஒப்புக்கொண்டார்.

தேர்தல் வாக்களிப்பில் இலத்திரனியல் இயந்திரங்களைப் பயன்படுத்தும் முறையை அறிமுகப்படுத்தும் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இதனை ஒப்புக்கொண்டார்.

இதற்கு முன் உதாரணமாக இரத்தினபுரி மாவட்ட எம்.பியாக இருந்த மகிந்த ரத்னாயக்க தன்னுடைய வாக்குகள் களவாடப்பட்டிருப்பதாக வழக்குத் தாக்கல் செய்தார். வழக்குத் தீர்ப்பின்படி வாக்குகள் திரும்ப எண்ணப்பட்டபோது ஐந்தாம் இடத்தில் இருந்தவர் நான்காம் இடத்திற்குத் தெரிவானார் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

வாக்குகள் எண்ணப்படும் முறையில் மாற்றம் செய்யப்படவேண்டும்.

ஒரு தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை பல நிலையங்களில் இடம்பெறுகின்றன. இந்த நிலையங்களில் வெளியான விவரத்தின் அடிப்படையில் இடம்பெறுகின்றன. இந்த நிலையங்களில் வெளியான விவரத்தின் அடிப்படையில் ஓர் உறுப்பினர் வெற்றிபெற்றார் எனக் கூறுகின்

(க)

ஆட்கொணர்வு மனு விசாரணை ஒத்திவைப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் 1995-1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற் போனோர் தொடர்பான 15ஆள்கொணர்வு மனுக்கள் நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

மனுதாரர்கள் நீதிமன்றில் சமுகமளித்திருந்தனர். மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி றெமீடியஸும், எதிர்மனுதாரர் சார்பில் சட்டத்தரணி கப்டன் குறூப்பும் ஆஜரானார்கள்.

இவ்வழக்குகள் ஒக்ரோபர் 14ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (ஐ-9-31-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் -2004

மினி உலகக்கிண்ணக் கிரிக்கெட் இங்கிலாந்தில் நேற்று ஆரம்பம்

கிரிக்கெட் ரசிகர்களால் ஆவலுடன் எதிர் பார்க்கப்பட்ட மினி உலகக்கிண்ணக் கிரிக் கெட் போட்டி இங்கிலாந்தில் நேற்று ஆரம்பமா கியுள்ளது. இந்தப் போட்டியில் ஆட்ட விதி முறையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள் ளன.

இந்தப் போட்டியில் எல்லா ஆட்டங்களும் 3 மைதானங்களில் மட்டும் நடைபெற போட்டி அமைப்பாளர்கள் ஏற்பாடுசெய்து இருக்கிறார் கள். ஓய்வு நாள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதாவது மழையால் ஆட்டம் பாதிக்கப்படுமா னால் அந்த ஆட்டம் அப்படியே ஓய்வு நாளில் தொடர்ந்து நடைபெறும். அதாவது மைதானங் களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. மழை யால் தடைப்படும் போட்டி மறுநாள் அதே மைதானத்தில் நடைபெறும்.

இங்கிலாந்தில் தற்போது கோடைகாலம் முடிவடையவுள்ளதால் மழை பெய்ய அதிக வாய்ப்புள்ளதால் ஓய்வு நாள் ஒதுக்கி இருப் பது நல்ல முடிவாகும். மழையால் பாதிக்கப் படும் ஆட்டம் ஓய்வு நாளில் நடத்தப்படுவதால் மழையால் பாதிக்கப்படும் ஆட்டத்தில் கடைப் பிடிக்கப்படும் ட்க்வேர்த்லூயிஸ் முறை இந்தப் போட்டியில் பயன்படுத்தப்படப்போவதில்லை. நீண்ட நாள்களுக்குப் பிறகு மாற்றப்பட்டுள்ள இந்த விதிமுறையால் ஏற்படும் விளைவு போட்டி முடிந்தபிறகுதான் தெரியும்.

இந்தப்போட்டியில் பங்கேற்கும் அணிகள் நான்கு பரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் 3 அணிகள் இடம்பெற்றுள்ளன. ஒவ் வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பெறும் அணி அரை இறுதிக்கு தகுதிபெறும். வழக் கமாக டெஸ்ட் போட்டியில் ஆடும் நாடுகளு டன் கென்யா, அமெரிக்கா ஆகிய அணிகளும் இதில் கலந்துகொள்கின்றன.

கிரிக்கெட்டை உலக அளவில் பிரபலப் படுத்துவதில் ஐ.சி.சி. தீவிரமாக இருக்கிறது. அதன் பலனாகத்தான் அமெரிக்கா இந்தப் போட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது. அமெரிக்க அணியில் அந்த நாட்டில் குடியேறியவர்களே அதிகமாக உள்ளனர். உலக சம்பியன் ஆஸ்தி ரேலிய அணியுடன் 'ஏ'பிரிவில் விளையாடும் அமெரிக்க அணிக்கு இந்தப்போட்டி புதுவித மான அனுபவமாக இருக்கும்.

இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியா வெல் லும் என்று பலரும் கருத்து தெரிவித்து இருக் கின்றார்கள். ஐ.சி.சி. போட்டியின் கடந்த கால முடிவுகள் ஆச்சரியம் அளிக்கும் வகையில் இருந்து உள்ளது. அரை இறுதிக்குள் தகுதி பெறும் அணிகளில் ஒன்றாகக் கருதப்படுவது தென்னாபிரிக்கா. ஆனால் தற்போது அந்த அணி யின் ஆட்டம் சுமாராகவே இருக்கிறது. சி மற்றும் டி பிரிவுகளில் கடும் போட்டி நிலவும் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் ஒரே பிரிவில் உள்ளன. டி பிரிவில் உள்ள இங்கிலாந்து சமீப காலங்களில் சிறப்பாக விளையாடி வருகிறது. சொந்த நாட்டில் நடைபெறும் இந்தப் போட்டியில இங்கிலாந்து அணிக்கு நல்ல வாய்ப்பு உள் ளது. சமீபத்திய வெற்றி மனோபலத்துடன் இங்கிலாந்து உள்ளது. அந்தப் பிரிவில் உள்ள இலங்கை அணி கடும் போட்டியைக் கொடுக்க லாம்.

இந்தப் போட்டியில் அதிக ரசிகர்கள் கூடும் ஆட்டமாக இந்தியா - பாகிஸ்தான் போட்டி இருக் கும். ஏனெனில் ஆசியக் கண்டத்தை சேர்ந்த பலர் இங்கிலாந்தில் வசிக்கின்றனர். இந்த இரு அணிகளும் மோதும் ஆட்டத்துக்கு எதிர் பார்ப்பு குறைவில்லாமல் இருக்கும். இந்தியா- பாகிஸ்தான் அணிகள் ஒரே பிரிவில் இருப்ப தால் அரை இறுதி வாய்ப்பை நிர்ணயிக்கும் ஆட்டத்தில் மோதவேண்டும். இது அதிக பர பரப்பை உருவாக்கும். சமீப காலங்களில் இந தியா, பாகிஸ்தான் அணிகள் பல ஆட்டங்களில் மோதி உள்ளன. பாகிஸ்தான் அணி நிதான மாக முன்னேறி வருகிறது. இந்திய அணியின் நிலை மோசமாக உள்ளது

அதாவது 2002 ஆம் ஆண்டு நியூஸிலாநது பயணத்தின்போது இருந்த பரிதாபமான நிலை யில் தற்போது உள்ளது.

இந்திய அணிக்கு நெருக்கடி இருக்கிறது. இங்கிலாந்துக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் வெற்றி பெற்றது. இந்திய வீரர்களின் நம்பிக் கையை அதிகரிக்க உதவும். இந்திய அணி யின் துடுப்பாட்டம் பலவீனமாகவுள்ளது. இந் திய அணி மீண்டும் நல்ல நிலைக்குத் திரும்ப வசதியாக பலவீனமான கென்யாவை இன்று எதிர்கொள்கிறது.

இந்திய அணி ஒவ்வெரு ஆட்டத்திலும் வேகத்தைக் காட்டிலும் விவேகத்துக்கு முன் னுரிமை கொடுத்து ஆடவேண்டும். இங் கிலாந்துக்கு எதிரான கடைசி ஆட்டத்தைப் போல் அளவுக்கு அதி கமான ஆர்வமின்றி ஆடினால் வெற்றி தானாகக் கைக்கு வரும் இதனை உணா வில் நிறுத்தி விளை யாட வேண்டும்.

ஒரு போட்டியைப் பொறுத் தமட்டில் முதல் ஆட்டம் நல்ல தொடக்கமாக அமைய வேண்டும். கென்யா வுக்கு எதிரான ஆட் டம் இந்திய அணிக்கு நம்பிக்கை கொடுப்ப தாக அமையும் என்று நம்புவோம். (10)

இன்றைய போட்டி

இந்தியா எதிர் கென்யா

இந்திய அணியுடனான டெஸ்ட் தொடர் ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு

முதற்போட்டி அடுத்தமாதம் 6ஆம்திகதி

சிட்னி,செப்.11

மினி உலகக் கிண்ணப் போட்டிகள் எதிர் வரும் 25 ஆம் திகதி நிறைவடைந்தவுடன் ஆஸ் திரேலிய அணி இந்தியாவுக்குச் சென்று 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க வுள்ளது.

இத்தொடரின் முதலாவது போட்டி அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொட ருக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட் டுள்ளது.

இந்திய மண்ணில் டெஸ்ட் தொடர் ஒன்றை வெற்றியீட்ட வேண்டும் என்பதே ஆஸ்திரேலிய அணியின் நீண்டகாலக கனவாகும் அதற்கு அமை வாக மிகவும் பலம் வாய்ந்த அணியாக இந்தி யாவுக்குச் செல்லவுள்ளது. ஆஸ்திரேலிய அணி. நான்கு வேகப்பந்து வீச்சாளர்களுடனும் உலகப் புகழ்பெற்ற சுழல் பந்து வீச்சாளரு டனும் செல்லும் ஆஸ்திரேலிய அணி தனது கனவை நிறைவேற்றிக்கொள்ளுமா?

அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ்வோ சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து தான ஓய்வு பெறுவதற்கு முன்பு இந்திய மண்ணில் டெஸ்ட் தொடர் ஒன்றை வெல்லவேண்டும் என்று கங்கணம் கட்டியிருந்தபோதும் அது நிறை வேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீவ்வோவின் கனவை பொண்டிங் தலைமை யிலான அணி நிறைவேற்றுமா?

ஆஸ்திரேலியஅணி விவரம்:

ரிக்கிபொண்டிங், அடம்கில்கிறிஸ்ட், மைக்கல் கிளார்க், ஜேசன் கிலெஸ்பி, மத் தியூ ஹைடன், நதன் ஹாரிட்ஸ் சைமன் கடிச மைக்கல் கஸ்பரோவிச், டேமியன் மாட்டின், கிளென் மக்ராத், ஜஸ் ரின் லாங்கர், பிரெட்லீ, ட்ரன் லீமன், ஷேன் வோர்ண், ஷேன் வட் சன், கமிரோன்வைற்.

மினி உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெறும் மைதானங்கள்



பிரிட் ஓவல் மைதானம்
(பார்வையாளர் எண்ணிக்கை - 18,500)



எஜ்பொஸ்ரன் மைதானம்
(பார்வையாளர் எண்ணிக்கை - 17,500)

றோஸ்போல் மைதானம்
(பார்வையாளர் எண்ணிக்கை - 10,500)

ஒருநாள் போட்டிகளின் தரவரிசையில் இலங்கை அணி இரண்டாம் இடத்தில்

லண்டன்,செப்.11

மினி உலகக் கிண்ணப் போட்டிகள் நேற்று இங்கிலாந்தில் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஐ.சி.சியினால் ஒருநாள் கிரிக்கெட் போட்டிக ளுக்கான அணிகளின் தரவரிசைப் பட்டியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி ஆஸ்திரேலிய அணி தொடர்ந்தும் முதலிடத்திலேயே உள்ளது. இரண்டாம் இடத் தில் இருந்த நியூஸிலாந்து அணியை பின் தள்ளிவிட்டு இலங்கை அணி இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

ஆசியக் கிண்ணத்தை வென்றமை, தென்னா பிரிக்க அணியுடனான தொடர் வெற்றி ஆகிய வையே இலங்கை அணி தரவரிசையில் இரண் டாம் இடத்தைப் பிடிப்பதற்கு காரணமாக அமைந் துள்ளன.

தென்னாபிரிக்க அணி ஆறாம் இடத்துக் குப் பின் தள்ளப்பட்டுள்ளது. கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக இரண்டாம் இடத்தில் இருந்த தென்னாபிரிக்க அணி இவ்வாறு பின் தள்ளப்பட்டமை இதுவே முதற்றடவையாகும்.

அணிகளின் தரவரிசை வருமாறு:

ஆஸ்திரேலியா (138 புள்ளிகள்), இலங்கை (123 புள்ளிகள்), நியூஸிலாந்து (117 புள் ளிகள்), பாகிஸ்தான் (105 புள்ளிகள்), இந் தியா (103 புள்ளிகள்), தென்னாபிரிக்கா (102 புள்ளிகள்) -

இங்கிலாந்து (102 புள்ளிகள்), மேற்கிந்தியத தீவுகள் (101 புள்ளிகள்), சிம்பாப்பே (61 புள் ளிகள்), கென்யா (28 புள்ளிகள்),

மினி உலகக்கிண்ணப் போட்டிகள் நிறை வுற்றதும் இந்தத் தரவரிசையில் மாற்றங்கள் ஏற்படும் என்பது நிச்சயம். (10)

மீள் பார்வை

கஜனி

1998, 2000, 2002 ஆகிய ஆண்டு களில் நடைபெற்ற மினி உலகக் கிண் ணப் போட்டிகளில் அணிகள் பெற்ற அதி கூடிய ஓட்டங்கள் வருமாறு

- கென்ய அணிக்கு எதிராக தென்னா பிரிக்க அணி 316/5
- ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இந்திய அணி 307/8
- சிம்பாப்பே அணிக்கு எதிராக இங்கி லாந்து அணி 298/8
- நியூஸிலாந்து அணிக்கு எதிராக ஆஸ்திரேலிய அணி 296/7
- தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இந்திய அணி 295/6
- நெதர்லாந்து அணிக்கு எதிராக இலங்கை அணி 292/6
- பாகிஸ்தான் அணிக்கு எதிராக மேற்கிந்தியத் தீவுகள் அணி 289/9
- மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக இலங்கை அணி 287/6
- [illegible] எதிராக தென்னாபிரிக்க அணி 283/4
- தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இங்கிலாந்து அணி 281/7

டென்னிஸ் எல்போ நோயினால் அவதியுறும் சச்சின் டெண்டுல்கர்

லண்டன்,செப்.11

'டென்னிஸ் எல்போ' என்னும் நோயினால் பாதிக்கப்பட்டுள் ளார் நட்சத்திர துடுப்பாட்டவீரர் சச்சின் டெண்டுல்கர்.

இதன் காரணமாகத் தற் பொழுது நடைபெற்றுவரும் மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் மட்டுமன்றி அடுத்த மாதம் 6ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள ஆஸ்திரேலிய அணியுடனான 4 போட் டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் இவர் ஆடமுடியாத நிலை ஏற்பட் டுள்ளது.

கை மூட்டுப்பகுதியை அதிக மாக பயன்படுத்துவோருக்கு ஏற் படும் இந்த நோயானது முழங்கை மூட்டுப்பகுதியை சுற்றியுள்ள தசை நார்களில் ஏற்படும் காயத்தின் காரண மாக ஏற்படும் வலியினாலேயே ஏற்படுவதாக வைத்தியர்கள் தெரி வித்துள்ளனர்.

கைகளுக்கு ஓய்வு கொடுப்பது தான் இந்த நோய்க்கான நிவார ணம் எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

பாவித்த AFT-Davidson Whitin Suiile - Mass (U.S.A) Perfector 702 P ஒவ்செட் மெசின், சைனா கட்டர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 021 222 2731. (36254)

வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியில் 2பரப்பு 1குழி காணியுடன் கூடிய வீடும், ஏழாலை மத்தி, பசுபதி கடையடியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: குகுமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு, ஏழாலை. T.P.: 077 6125140. (36226)

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில், பழைய பூங்கா வீதியில் 2½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: M.ராஜன் J.P. 70/6, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (36257)

நாய்க்குட்டி விற்பனைக்கு

Dashhund x Dobermann Pincher அழகான நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை முத திரைச்சந்தையடி, நல்லூர். (36266)

கோழிக்குஞ்சு விநியோகம்

Prima புறொயிலர் குஞ்சுகளும், சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும், 13.09.04 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. 3529, ரஞ்சித், 517, ஸ்ரான்லி றோட், தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை, P.ரவி, தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி, ராதா, மாவடி, வட்டுக்கோட்டை, ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. (36182)

தரமான Prima, Broiler 35/= மற்றும் Prima Layer Brown/White குஞ்சுகள் 50/= 13.09.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித் துறைக் கிளையிலும் Suddi farm வட்டுக் கோட்டை, நியூ R.S.K Farm, உடுவில், சாவகச்சேரி முருகனிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (36057)

35 நாளில் 2Kg இற்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 11-09-04 இன்று மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, ரஞ்சித், 517, ஸ்ரான்லி றோட், ஸ்ரீராம, பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக, ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ராதா, மாவடி, வட்டுக்கோட்டை. (36181)

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுடைய பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் ரோகினி நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்றவர் - கிரக பாவம் 06 உடையவர் தொடர்பு: விளம்பர இல.2372 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (36297)

இந்து கௌரவ 1970 Dental Surgeon கிரகபாவம் 35 மணமகனுக்கு கனடா, லண்டன், ஆஸ்திரேலியா நாடுகளுக்கு Sponcer பண்ணக் கூடிய செவ்வாய்த்தோஷமற்ற அழகான Doctor மணப்பெண் மட்டும் தேவை. தொடர்பு: 0776140273. (36293)

மணமகன் தேவை

எம்மிடம் விரிவுரையாளர்கள், பயிற்சி அளிக்கப்பட்ட மற்றும் பட்டதாரி ஆசிரியைகள், கால் நடை வைத்தியர்கள், M.B.B.S டாக்டர்கள், அரச, தனியார்துறை சார்ந்தவர்கள், வெளிநாடுகளில் P.R உள்ள மணமகள்களின் ஜெனன ஜாதகங்கள் உள்ளன. தொடர்பு: திரு.S.K. சிவகரன், DFT, சிவாலயா சர்வதேச திருமண நிலையம், ஸ்ரீ வைகுந்த ஆச்சிரமம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர். T.P. 021 222 7844.(36292)

சதய நட்சத்திரம், 1974 ஆம் ஆண்டு பிறந்த 28 பாவமுள்ள (B.Sc. Science) படித்த மணமகளுக்கு மணமகன் தேவை. என்ஜினியர், எக்கவுண்டர் விரும்பத்தக்கது. தொடர்பு: செ.விஜயரதினம், நவாலி கிழக்கு, மானிப்பாய் குறிப்பு: உள்நாடு, வெளிநாட்டில் உள்ளவர்களின் குறிப்புகள எம்மிடம் உண்டு. T.P.012 222 3257. (36196)

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1968 இல் பிறந்த அத்தம் நட்சத்திர ஆசிரியைக்கு B.A (Dip.in Ed.) அரசாங்க/அரச கூட்டுத் தாபனத்தில் வேலைசெய்யும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் 2370 C/o உதயன், யாழ்ப்பாணம். (36243)

திருமண சேவை

ஆசிரியர்கள், பட்டதாரிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், தனியார் ஸ்தாபனங்களில் கடமையாற்றுவோர், வர்த்தகர்கள் போன்ற பலரின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களை நாடுவோர் நாடவேண்டிய இடம்: த.சிவானந்தன், பிரபல சோதிடர், 264, பலாலி வீதி, கந்தர்மடம் (பேபி ஸ்ரூடியோ முன்பாக) (36241)

மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ அரச நற்பதவி, பாவம் 3, 1968இல் பிறந்த மணமகனுக்கு 5 வயது குறைவான மணமகளும் அரச நற்பதவி பட்டதாரி பாவம் 40 கொண்ட மணமகளுக்கு 34-38 வயதுடைய மணமகனும் தேவை. தொடர்பு: 0777288822. (36227)

மணப்பெண்கள் தேவை

1975, கிரகபாவம் 50, சைவ போசன காப்புறுதி ஸ்தாபன உத்தியோகத்தருக்கும், 1977 CTB நடத்துநருக்கும் அழகான அரசதொழில் புரியும் செவ்வாய்த்தோஷமற்ற இந்து கௌரவ குடும்பத்து மணப்பெண்கள் தேவை. தொடர்பு: 077 6140273. (36294)

அடுக்கடைகள் வந்தன

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நடமாடும் செயலக சேவையில் தேஅ அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினருக்குரிய அடையாள அட்டைகள் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு கிடைத்துள்ளன. இந்த அடையாள அட்டைகள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (8-117)

நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் நடமாட

அருந்துங்கள்...!

அண்ணா கோப்பி

நல்லூர் ஆலய - சிவன் கோயிலுக்கு

அருகிலுள்ள "அண்ணா"

வியாபார நிலையத்தில்

அண்ணா உற்பத்திப் பொருள்களான

❋ தோசை மா ❋ அப்பம் மா ❋ ஜீவாகாரம் ❋ அரிசிமா ❋ சரக்குத் தூள் ❋ சொட்டுநீலம்

அடங்கிய பொதியை 100/= ரூபா கொடுத்து வாங்கி நாம் வழங்குகின்ற இனாம் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

(சி-37580)(34-21-12-15)

சபிண்டீகரண கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 1940 - 05 - 28

மறைவு 2004 - 08 - 14

அமரர் **நல்லதம்பி சுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற காணி அலுவலர்)

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (11. 09. 2004) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நிகழும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'வள்ளிமனை', மீசாலை கிழக்கு, மீசாலை. - குடும்பத்தினர்.

(36278)(34-21-12-15)

இணையத் தளம் ஊடாக

24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

WORLD TAMILAR

உலகத் தமிழர் வானொலி

T W R

இணைய முகவரி: WWW.Wtrfm.com

அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க

நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு

26 உற்சவ நாள்களிலும்

(ஓகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)

உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).

உலகத் தமிழர் வானொலியுடன்

நேரடியாக இணைய

MSN messenger chat மூலம்: live @ wtrtm.com

தொலைபேசி மூலம்: 2673969

(சி-36863)

உலகத் தமிழர் உறவுப் பாலமாக உலகத் தமிழர் வானொலி

ஊடக அனுசரணை:- 'உதயன்'

தேவை

Coral draw, Page Maker, Photo Shopதில் வேலை அனுபவமுள்ளவர்களும் Off set மெசின் இயக்கும் வேலை பழக ஆர்வமுள்ளவர்களும் உடன் தேவை.

தொடர்பு: திருக்கணித பதிப்பகம், டச்சு வீதி, சாவகச்சேரி. (36296)

வேலையாள்கள் தேவை

படம் பிறேம் போடவும், கண்ணாடிகள் வெட்டவும் ஆள்கள் (ஆண்கள்) தேவை. பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

64, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொ. பே.:- 021 222 7821.

(36297)(42-12-15)

இணையம், இணையத்தள சேவை

.com .net .org .info

Doman Registration Rs.400/= per Year

Hosting upto Rs.2000/= per year

Limited time offer

SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.

T.P.: 0773 068968 (சி-37510)

ACBF, CBF

மாணவர் கவனத்திற்கு

Bank Marketing, Marketing

வகுப்புகளுக்கான விசேட விரிவுரைகள் கொழும்பில் இருந்து வரும் வங்கி உயர் அதிகாரிகளினால் நடத்தப்படும்.

காலம்: 12.09.2004 (ஞாயிறு)

நேரம்: காலை 9.00 மணி

Jaffna College Undergraduate Dept.

464, Hospital Road,

(Near Commercial Bank)

(சி37574) Jaffna.

COMPUTER REPAIRS

நெல்லியடியில்

MICRO PC SYSTEMS

நெல்லியடி பிரதான வீதி, புலோலி வீதி சந்தி

யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 6893

TENDER INVITATION
OPEN TENDER PROCEDURE

MOVIMONDO ITALIAN INGO CARRYING OUT HUMANITARIAN ACTIVITIES IN SRILANKA

For the implementation of an emergency project in Jaffna funded by ECHO, Movimondo INGO i inviting competent companies and individuals to participate in an open tender procedure presenting their bids for supplying the fishing nets following item:

NET KIND	QUANTITY	TECHNICAL DETAILS
Arakoddiyan net	865	4x2.25x150x1500*
Soodai net	940	2x1.125x330x1500*
Prawn net	477	6x5/8x100x2000*
Prawn net	477	4x11x100x1500*
Maya net	700	2x2.25x125x1500*
Total nets	3459	

* (plies, size of thread) x (inches, eye size) x (width of the net) x (length of the net)

Terms and conditions:

a) Companies and individuals must comply with nationality rules as specified by Art. 168 of Financial Regulations.
b) Goods must originate in the European Community or in Srilanka. Bidders are required to produce "Certificate of Origin"
c) Movimondo needs all regular technical certification of quality of the goods
d) Samples of ıch net must be provided to one of Movimondo's offices (Jaffna or Colombo) by the 20 th of September 2004 at 12.00 noon.
e) The result of tender will be communicated in writing within 27 th of September 2004.
f) Bidders are requested to certify not to be in any of the following situations

1) Bankrupt or wound up, having their affairs administered by courts, have entered in to an arrangement with creditors, have suspended business activities, being subject of proceedings concerning those matters
2) Been convicted of an offence concerning their professional conduct by a judgment which has the force of res judicata;
3) Been guilty of grave professional misconduct

Offers must be presented in a sealed plain envelope addressed to:

MOVIMONDO # 5/5, POLICE PARK TERRACE, COLOMBO - 05
MOVIMONDO # 28, CATHEDRAL ROAD, JAFFNA.

and marked **"Tender for fishing net"**

Offers must specify unit price, for the requested items, in local currency or Euro. The quoted prices will be valid until the end of December 2004.

Delivery: The goods should be delivered at ware house places in Jaffna area before 15 October 2004.

Selection criteria: price, terms of delivery, terms of payment, quality standard, reliability of the supplier (to this end see Terms and condition (f))

By giving this notice Movimondo is not obliged to award the contract.

(36291)(42)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

ஜப்பானின் போக்கிலும் திடீர் மாற்றமா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு அடிப்படையான நான்கு அம்சங்களைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஈழத்தமிழர்களின் அதிகாரபூர்வ - ஏக - பிரதிநிதிகளான புலிகளோடு மட்டுமே அமைதிப் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்பது அவற்றில் ஒன்று.

புலிகளோடு அமைதிப் பேச்சுக்களை நடத்தும் அதே சமயம், வேறு முனைகளில் சர்வகட்சிக் கலந்தாலோசனை, அனைத்துக் கட்சிக் கூட்டம், வட்டமேசை மாநாடு என்று பல தரப்புகளோடும் பேச்சு நடத்துவதாக ஆரவாரம், ஆர்ப்பாட்டங்கள் செய்து, புலிகளுடன் நடத்தும் பேச்சுக்களின் முக்கியத்துவத்தையும் கவனத்தையும் திசை திருப்ப அரசு முயலக்கூடாது என்றும் -

அதற்காகவே புலிகளோடு பேச்சு நடத்தும் சமயத்தில் வேறு தரப்புகளோடு இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசக் கூடாது என்றும் -

ஏற்கனவே விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் விளக்கமளித்திருந்தார்.

ஆனால், புலிகளின் கருத்துக்கு மாறாக - அடிப்படையில் வேறுபட்டு நின்று - செயற்படுவதற்கு ஜனாதிபதி திட்டம் தீட்டியிருக்கிறார் போலத் தெரிகின்றது. இதன் மூலம் அமைதி முயற்சிகள் முன்நகர்வதற்கான வாய்ப்பை மேலும் அருகச் செய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராகிவிட்டார்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண்பதற்கு சகல கட்சிகளுடனும் பேச்சு -

அமைதி முயற்சிகள் குறித்து கலந்தாலோசனை நடத்துவதற்காகக் கட்சிகள், மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புகள் ஆகிய பல தரப்பினரையும் உள்ளடக்கியதாக சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் ஸ்தாபிதம் - இப்படி எல்லாம் ஜனாதிபதி தரப்பிலிருந்து விடுக்கப்படும் அறிவிப்புகள் இதனையே காட்டுகின்றன.

அமைதி நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும் முயற்சிகளில் அரசுத் தரப்பும், ஜனாதிபதித்தரப்பும் குளறுபடி செய்யத் தொடங்கிவிட்டன என்றால் அதற்குப் பின்னணியில் சர்வதேச சமூகப் பக்கபலமும் உள்ளதோ என்ற சந்தேகம் தமிழர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு உதவும் நாடுகள் கூட்டத்தின் இணைத் தலைமையை நான்கு நாடுகள் வகிக்கின்றன.

அவற்றுள் ஒன்று அமைதி முயற்சிகளில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வே. மற்றது சமாதான முயற்சிகளை ஒட்டி நாட்டின் அபிவிருத்திக்குத் தாராளமாக உதவத் தயாராக இருக்கும் ஜப்பான். மற்றவை ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் ஆகும்.

இவற்றுள் ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் தமிழர் தரப்பான புலிகளைக் கடுமையாக விமர்சிக்கும் அறிக்கை ஒன்றை வெளியிட்டதும் -

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்தவரும் பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்க செயற்பாடுகளுக்குப் பொறுப்பான தூதுவருமான ஜே.கோர்ப்ளெக் இவ்வாரம் கொழும்பில் புலிகளுக்கு எதிராகக் கடும் வார்த்தைப் பிரயோகங்கள் அடங்கிய கருத்துக்களை வெளியிட்டுச் சென்றதும்-

தெரிந்த சங்கதிகள் தாம்.

உதவும் நாடுகளின் கூட்டத்தின் இணைத் தலைமையை வகிக்கும் நான்கு தரப்புகளில் இரண்டு - ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் - இப்படிப் புலிகளுக்கு எதிராகக் காட்டமான கருத்தை வெளிப்படுத்தியதுடன், அந்தத் தலைமையில் இடம்பெற்றுள்ள மற்றைய இரண்டு நாடுகளுள் ஒன்றான ஜப்பானும் தனது நிலைப்பாட்டிலிருந்து குத்துக்கரணம் அடித்துவிட்டதோ என்ற சந்தேகம் தமிழர் தரப்புக்கு ஏற்பட்டுள்ளது.

அமைதி முயற்சிகளில் ஆக்கபூர்வமான முன்நகர்வைக் காட்டினால் மட்டுமே சர்வதேச உதவி என்று சர்வதேச சமூகத்துடன் சேர்ந்து அடித்துக் கூறிவந்த ஜப்பான் இப்போது திடீர் பல்டிஅடித்து சமாதான முயற்சிகள் முன்நகராத போதிலும் இலங்கைக்குக் கணிசமான நிதியுதவிகளை வழங்கத் தயாராகிவிட்டது.

ஜப்பான் சென்றிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், ஜப்பான் இலங்கைக்கு 2 ஆயிரத்து 640 கோடி ரூபா பெறுமதியான - மிக முக்கியமான - கடன் உதவியை வழங்க முன்வந்திருப்பதாகத் திடீர் அறிவிப்பை விடுத்திருக்கின்றார்.

உதவும் நாடுகளின் கூட்டத்தின் இணைத் தலைமையின் போக்கில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதையே இன்றைய நிலைமைகள் காட்டுகின்றன.

தமிழர் தரப்பு மிகுந்த எச்சரிக்கை அடையவேண்டிய விவகாரம் இது.

அவதானம் மிக்க காய்நகர்த்தல்களும் நடவடிக்கைகளும் இன்றைய அவசியத் தேவைகளாகும்.

சர்வதேச சமூகம் தமிழர்களுக்கு மாறான திசையில் - பிழையான மார்க்கத்தில் - வழிநடத்தப்படுவதற்கு எதிராக மாற்று நடவடிக்கைகளை (Counter Actions) ஒன்றிணைந்து எடுக்கும் முக்கிய பொறுப்பு தமிழர்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கும் உள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

வீதி விபத்துத் தொடர்பாக விளக்கமளிக்க கொழும்பிலிருந்து பொலீஸ் குழு யாழ்.வருகிறது

யாழ்ப்பாணம்,செப்.11

வீதிவிபத்துக்களைத் தடுப்பதற்கும், அது தொடர்பாகக் கலைநிகழ்வு நடத்தி மக்களுக்கு விளக்கமளிக்கவும் என பொலீஸ் போக்குவரத்துப் பிரிவின் கொழும்புத் தலைமையகத்தில் இருந்து குழு ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி செவாய்க்கிழமை வருகைதரவுள்ளது.

கொழும்பு போக்குவரத்துப் பிரிவின் 'சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி லக்கிபீரிஸ் தலைமையில் வருகைதரும் இந்தக் குழுவில் 25 பேர் இடம்பெறுவர்.

குடாநாட்டின் பல்வேறு பாகத்திலும் தற்போது அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தவும் -

வீதிப்பயணம் பற்றிய விதிமுறைகளை அறிந்து கொள்ளாத பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவருக்கும் அது பற்றிய விளக்கங்களை நாடகம் மூலம் தெளிவுபடுத்திக் கூறவுமே இந்தக் குழு வருகைதரவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வருகைதரும் இந்தக் குழுவினர் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் முறையே சுன்னாகம், நெல்லியடி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் முழுநாள் நிகழ்வுகளை நடத்துவர்.

எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள வீதி நடைமுறைபற்றிய நிகழ்வு காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.நகரப்பகுதி மற்றும் பஸ்தரிப்பிடம் ஆகிய இடங்களில் இந்த நிகழ்வுகள் நடைபெறும்.

வீதி நடைமுறை பற்றி நடத்தப்படவுள்ள இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், சாரதிகள் அனைவரும் கலந்து பயன்பெறலாம் என யாழ். பொலீஸ்நிலையப் போக்குவரத்துப்பிரிவுப் பொறுப்பதிகாரி ஜி.டி.ரி.கே. செனவிரத்தின அறிவித்துள்ளார். (எ-6)

நல்லூர்ப்பகுதி உணவகங்களில் சுகாதாரம்பேண அறிவுறுத்து

நல்லூர் ஆலயச்சூழலில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக உணவகங்களில் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளைத் தவிர்த்துக்கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் குணாளன் கேட்டுள்ளார்.

கடந்தவாரம் நல்லூர்ச் சூழலில் உள்ள உணவகங்களை தமிழீழ சுகாதார சேவையினரும், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து சோதனையிட்டபோது அந்த உணவகங்களில் பெருமளவிலான மனித பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட உணவகங்களின் உரிமையாளர்களுக்கான சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடத்தப்பட்டுள்ளது. நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் தேர்த்திருவிழா அன்று அடியார்கள் நாலாதிசைகளிலும் இருந்து வருகைதரவுள்ளதால் அவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு உணவகங்களில் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும்-

இதனைக் கருத்திற்கொள்ளாது சுகாதாரமற்றமுறையில் செயற்படும் உணவகங்கள் திடீர் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டால் சட்டப்படி உரிய நடவடிக்கையெடுக்கப்படுவதோடு, அபராதமும் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-13)

நல்லூர் சிவன் ஆலயமண்டபத்தில் சுவாமி தந்திரதேவாவின் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,செப்.11

நல்லூர்க்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவில் விசேட சொற்பொழிவு நடத்தவென அமெரிக்கத்துறவியான சுவாமி தந்திரதேவா யாழ்ப்பாணம் வருகின்றார்.

நல்லூர்சிவன் கோயிலில் நளைமுதல் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை அவரது தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இந்துமதம் என்ற சொல்லின் அர்த்தம் என்ன' என்ற தலைப்பில் இத்தொடர் சொற்பொழிவு இடம்பெறவிருக்கின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயஞ்செய்து சமய சொற்பொழிவுகளை நிகழ்த்துவதுடன் பசுக்களைப் பேணுவது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் சுவாமி தந்திரதேவா மும்முரமாக ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையை மையமாகக்கொண்டு சமய ஆத்மீகப் பணிகளை மேற்கொண்டுவரும் இவர் ஏற்கனவே பலதடவைகள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து சமய சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருந்தார். (எ-3)

தமிழீழ மீட்புநிதி மீளளிப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம்,செப்.11

தமிழீழ மீட்புநிதி மீளளிக்கும் பணி எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் இடம்பெறவிருக்கின்றது என்று நிதித்துறை அறிவித்துள்ளது.

மீளளிப்பு நிலையங்களும், மீளளிப்பு இடம்பெறும் திகதிகளும் வருமாறு:-

வன்னி

17.09.2004 (வெள்ளி)			
கிளி. மத்திய கல்லூரி	கிளிநொச்சி	பி.ப.	3.30 மணி
18.09.2004 (சனி)			
பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்	நல்லூர் - பூநகரி	காலை	8.30 மணி
முழங்காவில் மகா வித்தியாலயம்	முழங்காவில்	மு.ப.	9.45 மணி
விடத்தல்தீவு றோ.க. பாடசாலை	விடத்தல்தீவு	மு.ப.	11.00 மணி
கறுக்காய்க்குளம் அ.த.க.பாடசாலை	கறுக்காய்க்குளம்	ந.ப.	12.00 மணி
மல்லாவி மத்திய கல்லூரி	மல்லாவி	பி.ப.	4.00 மணி
அக்கராயன் மகா வித்தியாலயம்	அக்கராயன்	மாலை	5.30 மணி
19.09.2004 (ஞாயிறு)			
மாங்குளம் மகா வித்தியாலயம்	மாங்குளம்	காலை	8.00 மணி
வருவாய்ப் பகுதிச் செயலகம்	புளியங்குளம்	காலை	8.30 மணி
நெடுங்கேணி மகா வித்தியாலயம்	நெடுங்கேணி	மு.ப.	11.00 மணி
ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்	ஒட்டுசுட்டான்	மு.ப.	11.45 மணி
வித்தியானந்தாக் கல்லூரி	தண்ணீரூற்று	மு.ப.	12.30 மணி
ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்	புதுக்குடியிருப்பு	பி.ப.	2.30 மணி
விசுவமடு மகா வித்தியாலயம்	விசுவமடு	பி.ப.	4.00 மணி

யாழ். மாவட்டம்

இடம்: முகமாலை நுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்.
நேரம்: காலை 8.00 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணிவரை

21.09.2004 (செவ்வாய்)	22.09.2004 (புதன்)	23.09.2004 (வியாழன்)	24.09.2004 (வெள்ளி)
நல்லூர்	யாழ்ப்பாணம்	மானிப்பாய்	கரவெட்டி
உடுவில்	கோப்பாய்	சங்கானை	பருத்தித்துறை
	தெல்லிப்பழை	காரைநகர்	சாவகச்சேரி.
		வேலணை	
		வடமராட்சி கிழக்கு	
		பச்சிலைப்பள்ளி	

சைவப்புலவர் பட்டப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.11

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பட்டப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இளஞ் சைவப் புலவர், சைவப்புலவர் பட்டப் பரீட்சைகளில் சித்திபெற்றவர்களின் பெயர் விவரம் சித்திபெற்ற தரம் முதலியன வருமாறு:-

இளஞ்சைவப்புலவர்

இரண்டாம் பிரிவில் சித்தியடைந்தோர்:- துரைசிங்கம் குமரநாதன் (கொடிகாமம்), சுகாசினி கிருஷ்ணபிள்ளை (சாவகச்சேரி), வைத்தியலிங்கம் இரகுநாதமுதலியார் (யாழ்ப்பாணம்), தவராசாகுமரன் (சுன்னாகம்), புஷ்பலதா இராமலிங்கம் (கிளி நொச்சி). சந்திரிகா இராமநாதன் (வவுனியா), வசந்தி நமசிவாயம (வவுனியா), வீரபாகு ஐங்கரன் (வவுனியா), பவானி மகேஸ்வரன் (வவுனியா), பவளமலர் ஜேசுதாசன் (வவுனியா), ஆனந்தரூபி ஆனந்தராசா (மன்னார்), எதிர்மன்னசிங்கம் ஜெயரஞ்சித் (புதுக்குடியிருப்பு).

மூன்றாம் பிரிவில் சித்தியடைந்தோர்:- கந்தையா சுகதீஸ் (சண்டிலிப்பாய்), குமுதினி சரவணமுத்து (வரணி), இராசேந்திரமலர் இராசையா (வவுனியா).

சைவப்புலவர்

இரண்டாம் பிரிவில் சித்தியடைந்தோர்:- சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் (இணுவில்), சசிலேகா கனகசுந்தரம்பிள்ளை (அச்சுவேலி), குமாரசாமி சுமுகலிங்கம் (சாவகச்சேரி).

மூன்றாம் பிரிவில் சித்தியடைந்தோர்:- குஞ்சித பாதம் சுரேஷ் குமார் (யாழ்ப்பாணம்), துரைராசசிங்கம் சடாச்சரசிங்கம் (கிளிநொச்சி).

பெறுபேறுகள் அனைத்தும் சம்பந்தப்பட்டவர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என சைவப்புலவர் சங்கத்தின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

நாளை

வைகாசி 27
ஞாயிற்றுக்கிழமை
(12.09.2004)
திதி: திரயோதசி
முன்னிரவு: 7.51 வரை.
நட்சத்திரம் : ஆயிலியம்
பிற்பகல் 4.22 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 9.03 - 10.33
ராகுகாலம்: 4.31 - 6.00
(வெளிநாட்டு நேரப்படி)

உதயவாக்கு

கனவுலகில் வாழநினைத்தால் பாவம் கனவாகவே கழிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கர்களால் மறக்க முடியாத

அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டு இன்றுடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

தீவிர தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை (The 9/11 Commission Report) அண்மையில் வெளியானது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சிபார்சுகள் குறித்து அமெரிக்க அதிபர் புஷ் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இதனால் அமெரிக்க மக்கள் விசனமடைந்துள்ளனர். அது தொடர்பான விவரங்களை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அமெரிக்காவின் 'டெல்லாஸ்' விமான நிலையத்துள் முஸ்லிம் பயணிகள் நால்வர் பிரவேசிக்கின்றனர். விமானத்துள் ஏறுவதற்கு முன்னர் பயணிகள் மீது மேற்கொள்ளப்படும் வழமையான பரிசோதனைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டதை விமான நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த வீடியோ கமராக்கள் பதிவு செய்து கொண்டன.

குறிப்பிட்ட அப்பயணிகள் உலோகத்தால் உருவாக்கப்பட்ட பொருள்கள் எதனையாவது தம்முடன் எடுத்துச் செல்கின்றனரா என்பதைக் கண்டறியும் 'மெட்டல் டிரெக்ரேஸ்' என்ற சாதனம், அவர்கள் வசம் உலோகத்தால் உருவாக்கப்பட்ட பொருள்கள் இருப்பதாகச் சமிக்ஞை காட்டியது. இதனால் மீண்டுமொரு தடவை அதிகாரிகளால் அவர்களை பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும், அவர்களிடம் அவ்வித பொருள்கள் எதனையும் அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, அவர்கள் தொடர்ந்து தமது பிரயாணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

இந்நான்கு முஸ்லிம் பயணிகளும் அவ்

தாக்குதல் நடந்த அந்தக் கணங்கள்...

விதம் தமது பிரயாணத்தை மேற்கொண்டது அமெரிக்க விமான சேவைக்குச் சொந்தமான 'பிளைட் 77' என்ற இலக்கம் கொண்ட விமான மூலமாகும். இந்த விமானத்தை இடைநடுவில் திசை திருப்பிச் சென்று அன்றைய தினம் வாஷிங்ரன் நகரில் அமைந்திருக்கும் அமெரிக்க அரசின் பாதுகாப்புத் தலைமையகமான 'பென்டகன்' கட்டடத்தின் மீது மோதச்செய்து நாசம் விளைவிக்கும் திட்டத்துடனேயே அந்த நால்வரும் விமானத்தில் இடம்பிடித்துக்கொண்டனர். அப்பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக 'பென்டகன்' கட்டடத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 125 ஊழியர்கள் உயிரிழக்க நேர்ந்தது. விமானத்தில் பயணம் செய்த நான்கு தீவிரவாதிகள் உட்பட்ட 44 பயணிகளும் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழக்க நேர்ந்தது.

இப்பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொண்ட நால்வரும் ஒசாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பின் உறுப்பினர்களேயென அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் நம்பினர். அவர்கள் குறிப்பிட்ட அப்பயணத்தின் போது தம்முடன் உலோகத்தினாலான கத்திகளை மறைத்து எடுத்துச் சென்று, விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த வேளையில் கத்திகளைக் காட்டி விமானிகளை மிரட்டி விமானத்தைத் திசை திருப்பச் செய்வித்து 'பென்டகன்' கட்டடத்தின் மீது மோதச்செய்து நாசம் ஏற்படுத்தியமை தற்போது விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்புப் பிரிவினரின் இந்த அசண்டையீனத்துக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் எவரென்பது தற்போது உலகமக்களுக்குக் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில், இச்சம்பவத்துக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்களாக இருவரின்பெயர் குறிப்பிடப்படுகின்றன. அவர்கள் வேறு யாருமல்லர். அவர்களில் முதலாமவர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் மற்றையவர் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆகியோராவர்.

இவ்விதம் இவர்கள் மீது குற்றஞ்சாட்டுபவர்கள் வேறு யாருமல்லர். இவ்விரு ஜனாதிபதிகளதும் ஒட்டுமொத்த நிர்வாகம் காரணமாகவே செப்ரெம்பர் 11 ஆம் திகதித் தாக்குதல்கள் இடம்பெற்றன எனவும் எனவே, அந்த இரு ஜனாதிபதிகளும் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான 'பென்டகன்' கட்டடம், மற்றும் நியூயோர்க் நகரில அமைந்திருந்த உலக வர்த்தக மையக்கட்டடம் என்பனவற்றின் மீது வானில் பயணித்துக் கொண்டிருந்த நான்கு பயணிகள் விமானங்களை இடை நடுவில் திசைதிருப்பிச் சென்று மோதவைத்ததன் மூலம் மூவாயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கப் பொதுமக்களின் உயிரிழப்புக்குக் காரணமான பயங்கரவாதச் செயலுக்கு இடமளிக்கும் விதத்தில் அமெரிக்கப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கான காரணம் தான் என்ன?

இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையான - 9/11 கடந்த ஜூலை மாதம் 22 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது அது நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு நியமிக்கப்பட்ட குழுவில் அங்கம் வகித்த பத்து உறுப்பினர்களில் ஐந்து பேர் குடியரசுக்கட்சியைச் சேர்ந்தவர்களாவர். மீதமுள்ள ஐந்து உறுப்பினர்களும் ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவர்கள் ஆவர். "நியூயோர்சி" நகரத்தின் முன்னாள் கவர்னரும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவருமான தோமஸ்கீன் என்பவர் இவ்விசாரணைக்குழுவின் தலைவராகச் செயற்பட்டார். ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த லீ ஹமில்டன் என்பவர் இக்குழுவின் உப தலைவராகச் செயற்பட்டார்.

பக்கச்சார்பற்ற வகையில் செயற்பட்ட இக்குழுவின் பத்து உறுப்பினர்களும் பத்து நாடுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரம் பொதுமக்களின வாக்கு மூலங்களைப் பதிவு செய்துகொண்டனர். அது மட்டுமன்றி முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி 'பில் கிளின்ரன்" மற்றும் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆகியோரும் இவ்விசாரணைச் சபை முன சாட்சியமளித்தனர். உப ஜனாதிபதி டிக்வெனி, முன்னாள் ராஜாங்கச் செயலர் மடெலின் ஒல்பிறெட், முன்னாள் பாதுகாப்புச் செயலர் வில்லியம் ஹோகேன், முன்னாள் சி.ஐ.ஏ. உளவுத் துறைப் பணிப்பாளர் ஜோர்ஜ் ரேன்ட் தற்போதைய ராஜாங்கச் செயலர் கொலின் பவல் மற்றும் தற்போதைய பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பேர்ட் ஆகியோரின் சாட்சியங்களையும் இவ்விசாரணைக்குழு பதிவு செய்துகொண்டது.

இவ்விதம் சாட்சிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்து கொண்ட இவ்விசாரணைக் குழு, இக்குழுவுக்கு உதவும் வகையில் முழுநேரக் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட சுமார் எணபது ஊழியர்களுடன் இணைந்து 20 இலட்சம் வரையிலான பல தரப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்தது. இவ்விதம் 20 மாதங்கள் தொடர்ச்சியாக விசாரணைகளில் ஈடுபட்ட இக்குழு கடைசியில் தனது அறிக்கையை வெளியிடடது மட்டுமல்லாது, எதிர்காலத்தில் இவ்வித பயங்கரவாதச் சம்பவங்கள் இடம்பெறாது தவிர்க்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய இறுக்கமான நடவடிக்கைகளையும் தனது சிபார்சுகளையும் சமர்ப்பித்திருந்தது.

அந்த வகையில் அரசின் புலனாய்வுத் துறையில் மீளமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமென அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அமெரிக்காவில் இயங்கும் சகல புலனாய்வு நிறுவனங்களையும் ஒன்றிணைத்து தேசிய புலனாய்வு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர் ஒருவரின் கீழ் இயங்க வைக்கப்படல் வேண்டுமென அவ்விசாரணைக் குழு அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. இவரின் கீழ் பிரதிப் பணிப்பாளர்களாக செயற்படும் வகையிலேயே சீ.ஐ.ஏ. எனப்படும் மத்திய புலனாய்வுத் துறை, பென்ரகன் எனப்படும் அமெரிக்க பாதுகாப்பு தலைமையகம் மற்றும் எப்பீஐ.சீ ஆகிய நிறுவனங்களுக்கான தலைவர்கள் நியமிக்கப்படல் வேண்டுமென அவ்அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இவை மட்டுமின்றி தேசிய பயங்கரவாத தடுப்புக்கான தலைமையகம் ஒன்றும் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளுக்கான தலைமையகங்கள் ஐந்தும் உருவாக்கப்பட வேண்டுமென அவ்வறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இயங்கிவந்த இரகசிய புலனாய்வு அமைப்புக்களிடையே எவ்வித தொடர்புகளும் இடம்பெறாதிருந்தமையே இவ்வித செப்ரெம்பர் 11 ஆம் திகதி நடந்த பாரிய தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறக் காரணமாய் அமைந்ததெனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது காணப்படுவது போன்ற தொடர்புகள் புலனாய்வுப் பிரிவுகளில் முன்னர் நிலவியிருந்தால் செப்ரெம்பர் 11 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக முன்கூட்டியே தெரிந்துகொண்டிருக்க முடியுமென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில், இத்தாக்குதல் சம்பவம் தொடர்பான திட்டங்கள் குறித்து வெவ்வேறு புலனாய்வு நிறுவனங்கள் ஒரு சில தகவல்களை முன்னரேயே தெரிந்து கொண்டிருந்த போதிலும் இந் நிறுவனங்களிடையே ஓர் தொடர்பு நிலவாத காரணத்தால் கிடைத்த சிறு தகவல்களை அலசி ஆராய முடியாது போய்விட்டதாக கொள்ளவேண்டியுள்ளது.

இவ்விதம் ஒரு சில புலனாய்வு நிறுவனங்களுக்கு எட்டியிருந்த சிறு தகவல்களை மற்றைய நிறுவனங்களுடன் பகிர்ந்து கொண்டு அது பற்றி ஆழமாக, விரிவாக ஆராய்ந்து பார்க்க இயலாது போய்விட்ட நிலையே காணப்பட்டது எனக் கருத்து வெளியிட்டிருந்த இவ் விசாரணைக்குழுவின் தலைவர் தோமஸ்கீன் கிடைத்த சிறு தகவல்களைக்கூட முறைப்படி கருத்தில் கொள்ளாது அசட்டையாக நடந்த கொண்டமை கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். திட்டமிடல் நடவடிக்கை போன்றே கிடைக்கும் தகவல்களை விரிவுபடுத்தி ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளத் தவறியமையே இவ்வித பயங்கர பேரழிவுச் சம்பவம் இடம்பெற வழிவகுத்தது. இவ்விதம் பாதுகாப்புக் குறித்து அமெரிக்க உளவு நிறுவன அதிகாரிகள் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்காத காரணமாகவே இஸ்லாமிய கடுங்கோட்பாளர்கள் தொடர்பாக அவர்களால் சரியாக மதிப்பீடு செய்ய இயலாது போய்விட்டதெனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



வீசாரணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக ஜனாதிபதி புஷ் கருத்து வெளியிடும் காட்சி.



'செப்ரெம்பர் - 11'

விசாரணைக்குழு அறிக்கை

நலிவடைந்து போய்விட்ட பொதுவுடமை வாதத்தை தமது பரம எதிரி என்ற கருத்துடன் அது குறித்து மிகுந்த விழிப்புடன் செயற்பட்டு வந்த அமெரிக்க உளவு நிறுவனமான சீ.ஐ.ஏ இஸ்லாமிய கடுங்கோட்பாடு இவ்விதம் தலை தூக்கி முனைப்புடன் செயற்படுமென நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

இச் செம்ரெம்பர் 11 ஆம் திகதிய தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு தனது அறிக்கையைப் பகிரங்கப்படுத்தியதுடன் அதை அமெரிக்க ஜனாதிபதியிடம் கைய



செப்ரெம்பர் - 11 தாக்குதல் தொடர்பான விசாரணைக்குழுவின் உபதலைவர் லீ ஹமில்டன்.

ளித்த வேளையில் அதன் தலைவரான தோமஸ்கீன் இவ்விதம் மேற்கூறிய கருத்தை வெளியிட்டிருந்தார்.

இவ் விசாரணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்ட நிலையிலும் அவ்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் எவ்வித மீளமைப்பு நடவடிக்கைகளையும் ஆரம்பிக்க அமெரிக்க அரசு அக்கறை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இது குறித்து ஜனாதிபதி புஷ் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாதது குறித்து அமெரிக்கப் பொதுமக்களும் ஊடகங்களும் தமது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர். இன்று வரை அமெரிக்க உளவு நிறுவனனமான சீ.ஐ.ஏ.யில் எதுவித மாறுதல்களும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தோன்றுகிறது.

- வியெஸ்ரி -

இது மட்டுமின்றி அமெரிக்க உளவு நிறுவனங்கள் மத்தியில் இப்போது கூட ஒரு கூட்டு மனப்பாங்குடன் செயற்படும் நிலை உருவானதாகத் தெரியவில்லை. அதாவது, இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான காரணங்களையும் நோக்கங்களையும் இவ்விசாரணைக் குழு கண்டறிந்து வெளிக்கொணர்ந்தது மட்டுமன்றி எதிர்காலத்தில் இவை குறித்து மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விரிவான வகையில் தனது பரிந்துரைகளைச் சமர்பித்திருந்தது. ஆயினும், இஸ்லாமிய கடுங்கோட்பாளர்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இவ்வித தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் ஆரம்பிக்காது அமெரிக்க நிர்வாகம் தற்போதும் தனது பழைய அணுகுமுறைகளையே கடைப்பிடித்து வருதை அவதானிக்கமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம் - 2004

யாழ்ப்பாணம், செப்.11

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளப்பெறுவோரில் கோப்பாய் (ஒரு தொகுதி), உடுவில் உதவி அரச அதிபர் பிரிவுகளில் தெரிவானோர் விவரம் வருமாறு:-

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

கோ/ 8212 திரு. மாப்பாணர் கணேசு
கோ/ 8215 திரு. முருகேசு செல்லத்துரை
கோ/ 8272 திரு. சின்னக்குட்டி மார்க்கண்டு
கோ/ 8275 திரு. நாராயணப்பிள்ளை அருணகிரிநாதன்
கோ/ 8347 திரு. சின்னையா இளையதம்பி
கோ/ 8411 திருமதி. நாகம்மா சின்னத்தம்பி
கோ/ 8413 திருமதி. பாறி இராமன்
கோ/ 8415 திருமதி. மனோன்மணி செல்லப்பா
கோ/ 8439 திரு. கந்தன் கோவிந்தன்
கோ/ 8456 திரு. விஸ்வலிங்கம் சிவநேசன்
கோ/ 8486 திரு. தோரையன் வல்லி
கோ/ 8492 திரு. அழகரத்தினம் இலட்சுமணன்
கோ/ 8541 திரு. தில்லையர் கந்தையா
கோ/ 8576 திரு. கணவதிப்பிள்ளை இராமநாதன்
கோ/ 8596 திரு. சின்னத்தம்பி கந்தையா
கோ/ 8605 திரு. சிதம்பரி வைத்திலிங்கம்
கோ/ 8607 திருமதி. இரத்தினம் வீரசிங்கம்
கோ/ 8652 திரு. வேலுப்பிள்ளை செல்லையா
கோ/ 8656 திரு. சின்னையா இராமலிங்கம்
கோ/ 8666 திருமதி. கோகிலாம்பாள் திருச்செல்வம்
கோ/ 8671 திரு. வேலாயுதம் சுப்பிரமணியம்
கோ/ 8681 திரு. சின்னத்தம்பி முருகேசு
கோ/ 8691 திரு. வல்லிபுரம் நடராசா
கோ/ 8693 திரு. பூதப்பிள்ளை ஆறுமுகம்
கோ/ 8695 திரு. சின்னப்பு சின்னத்தம்பி
கோ/ 8698 திருமதி. மரகதவல்லி சிவஞானம்
கோ/ 8719 திரு. கந்தப்பிள்ளை செல்லத்துரை
கோ/ 8740 திருமதி. அம்மிணிப்பிள்ளை இராசையா
கோ/ 8782 திருமதி. இந்திராணி சிவானந்தராசா
கோ/ 8810 திருமதி. இந்திராதேவி கோபாலரத்தினம்
கோ/ 8831 திருமதி. கனகமணி ஜெயராசா
கோ/ 8846 திரு. கதிரவேலு சுப்பிரமணியம்
கோ/ 8858 திரு. வல்லிப்புரம் சின்னையா
கோ/ 8882 திரு. மயில்வாகனம் இரத்தினம்
கோ/ 8897 திரு. அப்பர் விநாசித்தம்பி
கோ/ 8947 திரு. முத்துத்தம்பி தேவராசா
கோ/ 8960 செல்வி. மணிமேகலை செல்லையா
கோ/ 8961 திரு. நமசிவாயம். இராமலிங்கம்
கோ/ 8964 திரு. சீவரட்ணம் பாலகிருஷ்ணன்
கோ/ 8972 திரு. ஆறுமுகம் சின்னத்துரை
கோ/ 8992 திரு. ஆண்டி சிவலை
கோ/ 8994 திரு. வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளைஐயர்
கோ/ 9025 திரு. ஆறுமுகத்தான் சின்னத்துரை
கோ/ 9080 திருமதி. பொன்னம்மா கந்தையா
கோ/ 9098 திரு. செல்லையா வன்னியசிங்கம்
கோ/ 9100 திருமதி. நாகரத்தினம் பொன்னம்பலம்
கோ/ 9102 திரு. குமாரசாமி நவரத்தினசாமி
கோ/ 9120 திரு. குமாரசாமி நவரத்தினசாமி
கோ/ 9131 திரு. இலகுப்பிள்ளை கனகரத்தினம்
கோ/ 9161 திருமதி. சோதிமலர் அரியநாயகம்
கோ/ 9197 திரு. வயிரமுத்து ஐயாத்துரை
கோ/ 9218 திரு. கந்தையா யோகரத்தினம்
கோ/ 9240 திரு. ஆழ்வான் இளையவன்
கோ/ 9300 திருமதி. ஜோயீஸ் இராசமாணிக்கம் நவரத்தினம்
கோ/ 9331 திருமதி. வள்ளிப்பிள்ளை பொன்னையா
கோ/ 9339 திருமதி. ஆச்சிப்பிள்ளை சண்முகலிங்கம்
கோ/ 9362 திருமதி. சின்னம்மா செல்லத்துரை
கோ/ 9396 திரு. பொன்னம்பலம் கனகரத்தினம்
கோ/ 9482 திருமதி. தங்கம்மா கதிரவேலு
கோ/ 9516 செல்வி. இராசமலர் பாலசிங்கம்
கோ/ 9549 செல்வி. சிவசுகிர்தமலர் சிவசங்கரநாதன்
கோ/ 9569 திரு. சின்னப்பு மயில்வாகனம்
கோ/ 9595 திருமதி. தங்கச்சிப்பிள்ளை ஆசை
கோ/ 9608 திரு. கந்தையா சின்னத்துரை
கோ/ 9617 திரு. பாட்டாப்பிள்ளை இராசையா
கோ/ 9674 திருமதி. திரவியம் கந்தசாமி
கோ/ 9739 திரு. வைரமுத்து பொன்னுச்சாமி
கோ/ 9841 திருமதி. சிவபாக்கியம் ஏகாம்பரநாதன்
கோ/ 9855 திரு. கனகன் இராசரத்தினம்
கோ/ 9893 திருமதி. சிவக்கொழுந்து பொன்னையா
கோ/ 9911 திரு. முருகேசு துரைசிங்கம்
கோ/ 9945 திருமதி. கமலாதேவி மகேந்திரன்
கோ/ 9967 திரு. செல்லன் பண்டாரி
கோ/ 10014 திருமதி. சரஸ்வதி நடராசா
கோ/ 10102 திரு. இளையதம்பி கனகசபாபதி
கோ/ 10115 திரு. ஆறுமுகம் சின்னத்துரை
கோ/ 10159 திருமதி. சுஜாதா சிவமூர்த்தி
கோ/ 10206 திருமதி. அருந்தவராணி குணநாயகம்
கோ/ 10298 திரு. வயித்திலிங்கம் முத்தையா
கோ/ 10331 திருமதி. இராசம்மா பொன்னம்பலம்
கோ/ 10388 திருமதி. சிவக்கொழுந்து ஆறுமுகம்
கோ/ 10397 திரு. மூத்தாம்பி சின்னத்துரை
கோ/ 10398 திரு. கந்தையா வேலுப்பிள்ளை
கோ/ 10447 திரு. நாகலிங்கம் பொன்னுத்துரை

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு

உ/ 62 திருமதி. பாரததேவி அம்பலவாணர்
உ/ 104 திரு. தம்பு சரவணமுத்து
உ/ 137 திரு. சின்னத்தம்பி ஆறுமுகசாமி
உ/ 151 திரு. ஆறுமுகம் பொன்னையா
உ/ 221 திரு. வேலுப்பிள்ளை நாகலிங்கம்
உ/ 249 திரு. இராமலிங்கம் சர்வானந்தன்
உ/ 268 திரு. இளையதம்பி செல்லத்துரை
உ/ 269 திரு. சூசைப்பிள்ளை அன்ரனிதாஸ்
உ/ 289 திரு. கணவதிபிள்ளை மாணிக்கம்
உ/ 345 திரு. சரவணைமுத்து சுப்பிரமணியம்
உ/ 351 திரு. தம்பையா வல்லிபுரம்
உ/ 354 திரு. செல்லப்பாஅல்பேட் பாலசிங்கம்
உ/ 407 திரு. கந்தன் சின்னத்தம்பி
உ/ 469 திருமதி. ஆச்சிப்பிள்ளை வேலுப்பிள்ளை
உ/ 477 திரு. சிதம்பரநாதர் பொன்னம்பலம்
உ/ 495 திரு. செல்லத்துரை சண்முகானந்தன்
உ/ 554 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
உ/ 562 திரு. கணபதிப்பிள்ளை நாகமணி
உ/ 563 திரு. சின்னத்தம்பி நவரத்தினம்
உ/ 581 திரு. கந்தையா சிவஞானம்
உ/ 606 திரு. குமாரு ஆறுமுகம்
உ/ 626 திரு. செல்லப்பா கனகலிங்கம்
உ/ 643 திரு. சபாபதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி
உ/ 648 திரு. பெரியதம்பி கந்தையா
உ/ 691 திரு. மார்க்கண்டு நவரத்தினம்
உ/ 698 திரு. கணேசு பாக்கியநாதன்
உ/ 714 திருமதி. இரத்தினம்மா கணபதிப்பிள்ளை
உ/ 721 திரு. வல்லிபுரம் இராசதுரை
உ/ 738 திரு. வேலாயுதர் சின்னத்தம்பி
உ/ 786 திரு. வல்லிபுரம் சுப்பையா
உ/ 874 திரு. நன்னித்தம்பி கந்தையா
உ/ 928 திருமதி. இரதிமதி செல்வரத்தினம்
உ/ 976 திரு. நல்லதம்பி தாமோதரம்பிள்ளை
உ/ 1007 திருமதி. லோகேஸ்வரி கதிரமலை
உ/ 1041 திரு. செல்லையா நிச்சேட் இராசதுரை
உ/ 1118 திரு. செல்லையா ஆனந்தகுமாரதாஸ்
உ/ 1176 திரு. நன்னியர் வேலுப்பிள்ளை
உ/ 1193 திரு. மூத்ததம்பி கந்தசாமி
உ/ 1239 திருமதி. டெய்சி அருளம்மா துரைரத்தினம்
உ/ 1263 திரு. ஐயாத்துரை பஞ்சலிங்கம்
உ/ 1342 திரு. சுப்பிரமணியம் சிவரத்தினம்
உ/ 1347 திரு. கனகசபை செல்லத்துரை
உ/ 1374 திருமதி. அன்னமேரி ஸ்ரோணர் தம்பிமுத்து
உ/ 1389 திரு. நாகலிங்கம் கந்தையா
உ/ 1463 திரு. செல்லப்பா இரத்தினம்
உ/ 1524 செல்வி. சுபத்திராதேவி நடராசா
உ/ 1550 திரு. கதிர்காமர் வயிரமுத்து
உ/ 1563 திரு. மாணிக்கத்தியாகராசா ஆனந்தர்
உ/ 1567 திரு. கந்தையா பாலசுப்பிரமணியம்
உ/ 1576 திரு. கார்த்திகேசு ஐயாத்துரை
உ/ 1586 திரு. மயில்வாகனம் கந்தசாமி
உ/ 1624 திரு. கந்தர் பொன்னுத்துரை
உ/ 1666 திரு. அருணாசலம் சதானந்தம்
உ/ 1700 திருமதி. அகிலேஸ்வரி செல்லத்துரை
உ/ 1713 திரு. பூதப்பிள்ளை இளையதம்பி மகேஸ்வரன்
உ/ 1721 திரு. முருகுப்பிள்ளை கணேசபிள்ளை
உ/ 1722 திரு. துரையப்பா குமாரசாமி
உ/ 1765 திரு. குமாரு இரத்தினம்
உ/ 1767 திருமதி. இராசமுத்து தில்லையம்பலம்
உ/ 1772 திரு. கந்தையா சோமசுந்தரம்
உ/ 1798 திருமதி. சின்னம்மா ஆறுமுகம்
உ/ 1815 திரு. வெள்ளையர் தம்பு
உ/ 1869 திரு. இளையதம்பி குமாரசுவாமி
உ/ 1901 திரு. சின்னத்தம்பி மாரிமுத்து
உ/ 1921 திரு. செல்லத்துரை நவரத்தினம்
உ/ 1966 திருமதி. இராசாம்பாள் குழந்தைவேலு
உ/ 2082 திரு. அழகக்கோன் பாலசிங்கம் வல்லிபுரம்
உ/ 2092 திரு. சுப்பையா ஏகாம்பரம்
உ/ 2237 திரு. இளையதம்பி வைத்திலிங்கம்
உ/ 2255 திரு. முருகேசு ஞானப்பிரகாசம்
உ/ 2257 திரு. முருகேசு கந்தப்பசேகரம்
உ/ 2258 திரு. மாரிமுத்து கார்த்திகேசு
உ/ 2431 திரு. நாகமணி இரத்தினம்
உ/ 2446 திரு. நல்லதம்பி சீனித்தம்பி
உ/ 2551 திரு. ஆறுமுகம் இராசா
உ/ 2563 திரு. சொக்கலிங்கம் தியாகராசா
உ/ 2582 திருமதி. சிவபாக்கியம் சின்னத்துரை
உ/ 2583 திரு. வல்லிபுரம் சுப்பையா
உ/ 2587 திரு. சண்முகம் கணேசு
உ/ 2608 திருமதி. கயிலேஸ்வரி வேலாயுதபிள்ளை
உ/ 2614 செல்வி. கமலாதேவி காசிநாதன்
உ/ 2643 திரு. மாரிமுத்து கணபதிப்பிள்ளை
உ/ 2712 திரு. கதிர்காமு இராசதுரை
உ/ 2732 திரு. தம்பிப்பிள்ளை தம்பிஐயா
உ/ 2768 திரு. கந்தையா நவரட்ணம்
உ/ 2808 திரு. தம்பிஐயா இராமநாதன்
உ/ 2811 செல்வி. ஜெகதாம்பிகை நல்லையா
உ/ 2861 திரு. செல்லப்பா எட்வேட் ராஜசிங்கம்
உ/ 2888 திரு. கந்தையா இயேசுரத்தினம்
உ/ 2899 திரு. கந்தையா அமரக்கோன்
உ/ 3009 திரு. கணபதி சீனி
உ/ 3034 திருமதி. அழகம்மா பொன்னம்பலம்
உ/ 3047 திரு. கந்தையா சண்முகநாதன்
உ/ 3059 திரு. யோன்சின்னட்டியர் சாமுவேல்
உ/ 3070 திரு. சுப்பையா சின்னத்துரை
உ/ 3072 திரு. சிதம்பரப்பிள்ளை தம்பு கந்தையா
உ/ 3073 திரு. இளையதம்பி கந்தையா
உ/ 3077 திருமதி. பேபி கணேசலிங்கம்
உ/ 3157 திரு. சுப்பையா இராசா
உ/ 3158 திரு. இளையதம்பி வல்லிபுரம்
உ/ 3183 திரு. தம்பு பேரம்பலம்
உ/ 3195 திருமதி. இராசமணி இராசலிங்கம்
உ/ 3219 திரு. சரவணை மகாலிங்கம்
உ/ 3224 திரு. அரியகுட்டி சண்முகநாதன்
உ/ 3238 திரு. நடராசா சத்தியசீலன்
உ/ 3245 திரு. கந்தையா சண்முகம்
உ/ 3314 திருமதி. இராசகுணமணி இராசதுரை
உ/ 3411 திரு. பொன்னம்பலம் சுப்பிரமணியம்
உ/ 3414 திரு. வயித்திலிங்கம் சதாசிவம்
உ/ 3466 திருமதி. வசந்தராணி ஞானப்பிரகாசம்
உ/ 3519 திரு. கனகசபை சுப்பிரமணியம்
உ/ 3521 திரு. தம்பு சின்னத்துரை
உ/ 3545 திரு. கணபதிப்பிள்ளை ஸ்ரீதரன்
உ/ 3599 திரு. பொன்னையா ஐயாத்துரை
உ/ 3600 திருமதி. செல்வராணி குமாரவேலு
உ/ 3632 திரு. கந்தப்பிள்ளை இராமநாதன்
உ/ 3689 திரு. கதிரேசு சாந்தகுமார்
உ/ 3733 திரு. செல்வமாணிக்கம் குலேந்திரம்
உ/ 3785 திரு. துரையப்பா பாலசுப்பிரமணியம்
உ/ 3805 திரு. வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை
உ/ 3923 திரு. கிருஷ்ணபிள்ளை கணேசலிங்கம்
உ/ 4005 திரு. மரியாம்பிள்ளை தாவீதுராஜா
உ/ 4058 திரு. சின்னத்தம்பி தங்கராசா
உ/ 4073 திரு. முருகுப்பிள்ளை கனகசபை
உ/ 4100 திரு. சுப்பிரமணியம் குமாரசிங்கம்
உ/ 4222 திரு. நாகமுத்து தம்பிராசா
உ/ 4224 திரு. சின்னத்துரை திருவைகுந்தநாதன்
உ/ 4244 திரு. சீரங்கம் பாலசிங்கம்
உ/ 4247 திரு. குழந்தையன் சங்கரப்பிள்ளை
உ/ 4251 திருமதி. புனிதவதி கணேசமூர்த்தி
உ/ 4327 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
உ/ 4329 திரு. சரவணமுத்து கனகசுந்தரம்
உ/ 4472 திருமதி. செல்லம்மா தம்பிஐயா
உ/ 4550 திரு. வைரவப்பிள்ளை சிவகுமாரன்
உ/ 4583 திரு. கந்தையா செல்லத்துரை
உ/ 4586 திருமதி. தவமலர் தணிகாசலம்
உ/ 4614 திரு. செல்லத்துரை இரத்தினசபாபதி
உ/ 4615 திரு. நாகேந்திரம் சந்திரகாந்தன்
உ/ 4628 திருமதி. சத்தியபாமா சிவகுமார்
உ/ 4724 திரு. சீனிக்குட்டி பரமானந்தம்
உ/ 4734 திருமதி. இராசமலர் நவரட்ணம்
உ/ 4809 திரு. நாராயணன் செல்லத்துரை
உ/ 4824 திருமதி. அருட்சோதி சீவரத்தினம்
உ/ 4847 திருமதி. மனோன்மணி ஞானமுத்து
உ/ 4903 திரு. கனகசபை கார்த்திகேசு
உ/ 4904 திரு. வயித்திலிங்கம் இந்திரன்
உ/ 4911 திரு. சடையன் அப்புத்துரை
உ/ 4970 திரு. இரத்தினம் குமாரதாசன்
உ/ 5015 திரு. சின்னையா மயில்வாகனம்
உ/ 5095 திரு. வீரசிங்கம் ரவீந்திரன்
உ/ 5111 திரு. கந்தையா சோமநாதன்
உ/ 5121 திரு. முத்துத்தம்பி இராசரத்தினம்
உ/ 5123 திரு. சபாபதி ஆனந்தர்
உ/ 5144 திருமதி. பதஞ்சலி சிவபாக்கியம்
உ/ 5146 திரு. வினாசித்தம்பி ஐயாத்துரை
உ/ 5176 திரு. சிதம்பரப்பிள்ளை கந்தையா
உ/ 5217 திருமதி. சின்னத்துரை கனகம்மா
உ/ 5218 திரு. சிவக்கொழுந்து இராசநாயகம்
உ/ 5254 திருமதி. சிவபாக்கியம் பாலு
உ/ 5278 திருமதி. அமிர்தம்மா நவரத்தினம்
உ/ 5313 திரு. சின்னப்பு கந்தையா
உ/ 5317 திருமதி. பொன்னம்மா இரத்தினம்
உ/ 5355 திரு. இளையதம்பி தயாளன்
உ/ 5386 திரு. எள்ளுப்போலை அப்புத்துரை
உ/ 5401 திருமதி. சின்னம்மா சின்னத்துரை
உ/ 5416 திரு. சீனி சபாபதி
உ/ 5459 திருமதி. வில்வரத்தினம் தம்பிப்பிள்ளை
உ/ 5554 திரு. சேகரம்பிள்ளை தில்லைநாதன்
உ/ 5597 திரு. முருகேசுகந்தையா எமிலியானஸ்பிள்ளை
உ/ 5605 திரு. சிவப்பிரகாசம் கந்தசாமி
உ/ 5622 திருமதி. திலகவதி சண்முகநாதன்
உ/ 5677 திருமதி. சிவமலர் சின்னையா
உ/ 5679 திரு. கார்த்திகேசு தம்பிராசா
உ/ 5699 திருமதி. பராசத்தி கனகசபை
உ/ 5729 திருமதி. அருளம்மா சூசைப்பிள்ளை
உ/ 5752 திரு. அம்பலவி இராமலிங்கம்
உ/ 5771 செல்வி. செபமணி பீற்றர்
உ/ 5791 செல்வி. சேளிசாந்தினி ஹேஸ்டிங்ஸ்
உ/ 5796 திருமதி. புவனேசராணி சின்னப்பு
உ/ 5810 திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி
உ/ 5820 திரு. வைத்திலிங்கம் கதிர்காமநாதன்
உ/ 5844 திரு. சிதம்பரப்பிள்ளை முருகேசு
உ/ 5849 திரு. முருகர் துரையப்பா
உ/ 5887 திருமதி. டொறதி தங்கரத்தினம் நவரட்ணம்
உ/ 5913 திரு. சின்னப்பா செல்லையா
உ/ 5933 திருமதி. இராசம்மா பொன்னம்பலம்
உ/ 5945 திருமதி. சதாரூபி பாலசிங்கம்
உ/ 5999 திருமதி. லூமினா யேசுதாசன்
உ/ 6000 திருமதி. பிலோமினா ஜெனமியாஸ்
உ/ 6011 திருமதி. விக்கினேஸ்வரி லோகநாதன்
உ/ 6012 திரு. சிவப்பிரகாசம் ஜெயக்குமார்
உ/ 6119 திரு. செல்லத்துரை அருளம்பலம்
உ/ 6122 திரு. பெரியண்ணன் தெய்வேந்திரன்
உ/ 6187 திருமதி. தனலட்சுமி குலசிங்கம்
உ/ 6293 திருமதி. தவமணி செல்லத்துரை
உ/ 6298 திருமதி. அலிஸ் தவமணி செல்வநாயகம் ஜோன் சமரன்
உ/ 6312 திரு. நிற்சிங்கம் லோகநாதன்
உ/ 6323 திருமதி. மல்லிகாதேவி செல்வவேல்
உ/ 6334 திரு. கந்தையா தர்மலிங்கம்
உ/ 6339 திருமதி. இரஞ்சிதமலர் தில்லையம்பலம்
உ/ 6375 திருமதி. நமசிவாயம் தனலட்சுமி
உ/ 6416 திரு. கனகசபை இராசரத்தினம்
உ/ 6448 திருமதி. அன்னலட்சுமி நவரத்தினம்
உ/ 6493 திருமதி. செல்லம்மா தம்பிராசா
உ/ 6602 திரு. இராமபிள்ளை சுப்பையா
உ/ 6662 செல்வி. கவிதா மாணிக்கராசா
உ/ 6667 திரு. கந்தையா சின்னத்துரை
உ/ 6670 திரு. முருகேசு சண்முகநாதன்
உ/6720 திரு. காசியர் இளையதம்பி
உ/ 6733 திரு. பொன்னுத்துரை ஜெகநாதன்
உ/ 6769 திரு. சின்னட்டியார் சீனி
உ/ 6795 திரு. விஸ்வலிங்கம் சிவசுப்ரமணியம்
உ/ 6798 திருமதி. நேசமலர் சிதம்பரநாதன்
உ/ 6832 திரு. கந்தையா கந்தசாமி
உ/ 6886 திரு. குமாரு கந்தையா
உ/ 6947 திரு. யோக்கின் யோசெப்
உ/ 6958 திரு. முத்தர் கந்தையா
உ/ 6960 திரு. தம்பாப்பிள்ளை தம்பிராசா
உ/ 7003 திரு. இனையதம்பி நன்னித்தம்பி
உ/ 7105 திருமதி. செல்லம்மா வீரசிங்கம்
உ/ 7137 திருமதி. பூமலர் நடராசா
உ/ 7185 திரு. பென்சமின் அரசரத்தினம் மான்

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Organ / Violin Notes

நீங்களாகவே புதிய பாடல்களை இசைக் கருவிகளில் வாசிக்க வேண்டுமா? உங்கள் ஆசை நிறைவேற "The Home Feeling" என்னும் புத்தகம் வழிசெய்யும். இந்த நூலானது மேற்கத்தேய கர்நாடக சங்கீத முறைகளில் தமிழில் விளக்கமளிக்கப்பட்டுள்ள நூலாகும். எமது மாதாந்த வெளியீடான இசைக்குறிப்புகள் பாகம் - 31 வெளிவந்துள்ளது.

S.S.Rajeendran
Karaweena Isai Manram
75, Temple Road, Nallur, Jaffna.
T.P.: 0777031293
(தபாலில் பெறுவதற்கு ரூபா 250/-
Money Order அனுப்பவேண்டும்)

(35111) (24)

நாகர்கோவிலில் பாதுகாப்பு எல்லை படையினர் - புலிகள் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், நாகர்கோவில் பகுதியில் படையினரும், புலிகளும் தங்களது பாதுகாப்பு எல்லைகளை விஸ்தரித்துள்ளனர் என இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இப்பிரச்சினை சம்பந்தமாகக் கண்காணிப்புக் குழு இருதரப்பினருக்கும் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் குழுவின் பிரிவுத்தலைவர் தெரிவித்தார். இதன்படி இரு தரப்பினரும் தங்களது பாதுகாப்பு எல்லைகளை புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் இருந்த எல்லைக்கு மட்டுப்படுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். எதிர்த்தரப்பினர் பாதுகாப்பு எல்லையை விஸ்தரிக்கின்றனர் என்று விடுதலைப்புலிகளும் - இராணுவத்தினரும் மாறிமாறிக் குற்றஞ்சாட்டி வந்தனர். இதுகுறித்து இரு தரப்பினரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டிருந்தனர்.(எ-க)

தேவை

தொலைத்தொடர்பு நிலையமொன்றிற்கும் இணைந்த நிறுவனமொன்றிற்கும் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் தேவை.
தொலைபேசி இயக்குநர்கள் - 02
கணனி இயக்குநர்கள் - 04
தகுதியுடையவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை 12.09.2004 தவறின் 19.09.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

சிற்றி தொலைத் தொடர்பு
இல. 11, இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
(36282)

மூதூரில் மூவர் கைது

விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் எனத் தெரிவிக்கப்படும் இருவரும், நடேசன் சுதாகரன் என்ற மற்றொருவரும் மூதூர் இருதயபுரத்தில் உள்ள இராணுவக்காவல் அரணுக்கு அண்மையில் வைத்து கடந்த புதனன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூவரும் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யபபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சுதாகரன் விடுதலைப்புலிகளின் காவற்றுறையினரால் கைது செய்யப்பட்டு புலிகளின் பாதுகாப்பில் இருந்தவர் என்றும் -

அங்கிருந்து தப்பி ஓட முனைந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் எனக்கருதப்படும் இருவரைத் தடுத்து நிறுத்தியுள்ளனர் என்றும்-

அதன்போது, தகராறு இடம்பெற்றது. இதனை அறிந்த இராணுவத்தினர் மூவரையும் கைது செய்து மூதூர் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் - என்றும் கூறப்படுகின்றது. (எ-க)

வீடமைப்புக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு

தென்மராட்சி, செப்.11

உலக வங்கியின் உதவியுடன் கோவிலாக்கண்டி, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்திற்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு நேற்று முன்தினம் முதல் வழங்கப்பட்டு வருகிறது.

பயனாளிகளுக்கு தலா 35ஆயிரம் ரூபா வீதம் இக்கொடுப்பனவாக கைதடி பல நோக்குக கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் வழங்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் சி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படும் வீடமைப்புத் திட்டத்திற்கு இப் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு ஏற்கனவே முதல் கட்டக் கொடுப்பனவாக 15ஆயிரம் ரூபா வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-117)

தேர்தல் கொடுப்பனவு

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கடமையாற்றிய தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் கடமை பயண செலவுக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் கடமையில் ஈடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார ஊழியர்கள் வலய நிதிக் கிளையிலபெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (117)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 27 - 06 - 1944



கண் நெகிழ 24 - 08 - 2003

அமரர் **தம்பு சிவவடிவேல்**
(ஓய்வுபெற்ற சிறைக்காவலர்)
திதி: 11.09.2004

விழிக்கு ஒளி போல்
கரைதேடும் படகிற்கு கலங்கரை விளக்கம் போல்
எமது வாழ்க்கைக்கு வழிகாட்டிய
அன்புத் தெய்வமே! ஆண்டுகள்
எத்தனை சென்றாலும் உங்கள் அன்பு முகம்
எமது நெஞ்சை விட்டகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(36264)(34-19-21)

சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 11 - 05 - 1926

உதிர்வு 08 - 08 - 2004

திருமதி **அன்னம்மா குணரத்தினம்**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

இன்று (11.09.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் சபிண்டீகரண வைபவத்திலும் கலந்துகொள்வதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்- அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

179/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(36236)(34-21-19)

முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு 01 - 06 - 1918

உதிர்வு 24 - 08 - 2003

அமரர் **சரவணமுத்து இராசரத்தினம்**
(இரத்தினம்)

பாசமும் நேசமும் கொண்ட பண்புமிக்க தந்தையே!
வாசமலர் தூவி நாம் வணங்கியே துதிக்கின்றோம்.
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு மறையவே மறையாது.
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அச்செழு,
நீர்வேலி.
(36259)(34-21-19)

BOC
இலங்கை வங்கி

பகிரங்க ஏலவிற்பனை பற்றிய அறிவித்தல்

இலங்கை வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.06.2003 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத நகைகள் யாவும் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ்ப்பாணம் மேற்தரக் கிளையில் இம்மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறியத்தருகின்றோம்.

* யாழ்ப்பாணம் மேற்தரக் கிளை
* யாழ். இரண்டாம் கிளை (ஸ்ரான்லி வீதி)
* பருத்தித்துறை
* மானிப்பாய்
* சுன்னாகம்

இந்நகைகள் மீட்கப்படவேண்டிய கடைசித் திகதி: 24.09.2004
அறிவித்தலின்றி ஏலவிற்பனைத் திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

11.09.2004 உதவிப் பொது முகாமையாளர்
(வட பிராந்தியம் - யாழ்ப்பாணம்)
(சி37575)(34-21-19)

நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு



மாரிமுத்து இராஜரெட்ணம்
தோற்றம் 20-08-1912 மறைவு 24-08-2003

இராஜரெட்ணம் பகவதி அம்மா
தோற்றம் 20-02-1923 மறைவு 25-08-1999

நெஞ்ச நினைவலையில் நித்தம் குடியிருக்கும் அப்பாவும் அம்மாவும் ஆண்டுகள் பல கடந்தாலும் துஞ்சாமல் ஈரவிழிகள் கலங்கித் துடிக்கிறதே!

தேவாலய வீதி,
சங்கானை.

பிள்ளைகள்,
மருமக்கள்.

(36263)(34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனிவென்சர் சர்வதேச நிறுவனம் மூலம் 2½ வருடங்களில் பட்டதாரியாகலாம்

பெற்றோரும் உற்றாரும் என்ன செய்வது அடுத்து என்ற சிந்தனையில் இருக்கிறார்கள். ஜி.சி.ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகளை கையில் ஏந்தியபடி அடுத்த காலடியை எத்திசையில் வைப்பது என்று தெரியாமல் தவிக்கும் மாணவ உலகம். இதுவே இன்றைய சமுதாயம்.

இப்படியான சமுதாயம் யாழ். குடாவில் உருவாவதற்குப் பல காரணிகளை மேற்கோள் காட்டலாம். முக்கியமாகக் கடந்த இருபது ஆண்டுகள் தொடர்ந்த போர்ச்சூழல் ஒரு காரணி. இடப் பெயர்வுகளின் காரணமாக மக்கள் அடைந்த இன்னல்கள் இளம்தலைமுறையினரை அதிகமாகத் தாக்கியுள்ளது.

இதைத்தவிர வசதிபடைத்தவர்கள் பாதுகாப்பிற்காக வெளிநாடுகளை நோக்கி ஓடியபோது, வெளிநாடு செல்ல வசதியற்றவர்கள் அடைந்த மனத்தாக்கங்கள் மறுகாரணியாக அமைந்தது. இவற்றைத் தொடர்ந்து நாட்டின் தொழில் நிறுவனங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் யாவும் நிர்மூலமாக்கப்பட்டநிலை. இவை யாவும் ஒன்றுசேர மாணவர்களின் கல்விநிலை பாதிக்கப்பட்டது. உயர்கல்வி நிலையங்களும், தொழில நுட்பக் கல்விநிலையங்களும் மூடப்பட்டநிலை.

இந்நிலையிலே ஜூலை 2001 இல் யுத்த நிறுத்த செய்தி, உடைந்து போயிருந்த மக்களுக்கு ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கியுள்ளது. பாடசாலைகள், வீடுகள், வைத்தியசாலைகள், புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. விற்பனைக்களங்கள் புதிது புதிதாக உருவாகின. தென்பகுதி மக்களும், வெளிநாட்டவர்களும் தொடர்ந்து யாழ்நகருக்கு விஜயம்செய்தவாறு இருந்தனர். எமது அழகிய கடற்கரைகள், அலைகரம் நீட்டி உல்லாசப்பயணிகளை வரவேற்கத் தொடங்கியது.

தொடர்ந்து வெளிநாட்டவர்கள் யாழ்.மண்ணில் தம் பணத்தை முதலீடுசெய்ய ஆயத்தமாகினர். அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும், அகதிகளுக்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடத்தொடங்கின. தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவப்பட்டன.

ஆனாலும், பின்தள்ளப்பட்ட நிலையில் உள்ள ஆங்கிலக்கல்வியும் பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே உரித்தான வெளிநாட்டுக் கல்வியும் கொழும்பு மாநகர உயர்கட்டண கல்வி வசதிகளும் இன்னும் எமது மாணவர்களுக்கு எட்டாத நிலையிலேயே இருக்கிறது.

இந்நிலையில் அண்மையில் 'இல 55, மாடின்றோட், யாழ்ப்பாணம்' என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட யுனிவென்சர் நிறுவனம், முக்கியமாக அண்மையில் வெளிவந்த உயர்தரப்பரீட்சையில் பல் கலைக்கழகத்தில் அனுமதி கிடைக்காது வரண்ட உள்ளங்களுடன் உள்ள மாணவர்களுக்கு ஓர் நீரோடைபோல் உருவாகியுள்ளது.

யுனிவென்சர் நிறுவனம் இங்கிலாந்து வணிக மேலாண்மைக் குழுவில் பதிவு செய்யப்பட்டு சர்வதேச சான்றிதழ்களை வழங்கும் நிறுவனமாகும். இது 13 வெளிநாடுகளிலுள்ள 72 பல கலைக்கழகங்களுடன் தொடர்புடையது. இங்கே வணிகநிர்வாகம், வணிகத்தகவல் ஆகிய கற்கை நெறிகள் (Business Administration, Business Information) வழங்கப்படுகின்றன. இதைவிட சர்வதேச ஆங்கில மொழிப்பரீட்சை முறைகள் மற்றும் ஆங்கிலப் பேச்சு ஜி.சீ.ஈ. (சாதாரணதர) மாணவர்களின் ஆங்கிலப்பரீட்சை போன்ற மற்றைய ஆங்கில நெறிகளையும் வழங்குகின்றது.

இந்த ABE நெறி மிகக் குறைந்த வயதில் அதாவது 20 வயதில் பட்டதாரியாகும் வாய்ப்பைத்தருகிறது. முழுநேர, பகுதிநேர வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. ABE வகுப்புகள் ஆங்கில மொழியிலேயே கற்பிக்கப்படுவதால் ஆங்கில அறிவு மாணவர்களுக்கு மேம்பாடடைகிறது. அது மாத்திரமன்றி இரண்டரை வருடங்களில் ஒரு பட்டதாரியாகும் வாய்ப்புக் கிடைக்கிறது. கீழே காணப்படும் வரைபடம் ABE மூலம் BUSINESS Administration, Business Information Systems என்பவற்றில் பட்டதாரியாகும் முறையைக் காட்டுகிறது.

Diploma Part I → Diploma Part II → Advanced Diploma

6 மாதங்கள் 6 மாதங்கள் 6 மாதங்கள

CIM:- .இந்த வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. CIM இங்கே கற்பது ஒரு Marketing Sales officer இற்கு சிறந்த வாய்ப்பைததருகிறது. இதில் Professional Qualified Lecturers வகுப்புக்களை நடத்துகின்றார்கள். உலகளாவிய ரீதியிலே இந்தப் பயிற்றப்பட்ட CIM பட்டதாரிகளுக்கு வரவேற்புக் காணப்படுகிறது.

ACCA:- (Association of Charteted certified Accounts) கடந்த நூறு ஆண்டுகளாக இது உலக நாடுகளில் வரவேற்புப் பெற்ற ஒரு கலவி நெறியாகும். தற்போது மூன்று லட்சம் மாணவர்களும் அங்கத்தவர்களும் 160 நாடுகளில் உள்ளனர்.

16 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த (C.A.T) Certified Accountancy Techician நெறியை கற்று அதன்பின் A.C.C.A Part II செய்யும் தகுதியுடையவர்களாகிறார்கள். இந்த A.C.C.A, Oxford Brookes University யுடன் தொடர்புடையது. Part II முடிந்தவுடன் B.S.C (Honors Degree) செய்வதற்கு U.K அனுமதிக்கிறது. CIMA கற்கை நெறியிலும் பார்க்க A.C.C.A உள்ளடக்கியதாக இருக்கிறது.

British Qualified Lecturelrs உடன் யாழ். நகரிலுள்ள சிறந்த விரிவுரையாளர்களாலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஆகவே யாழ் மாணவ சமுதாயம் இந்த நன்மைகளைப் பெற்றுக்கொள்ள பெற்றோர் வழிகாட்டவேண்டியது அவசியம்.

திருமதி ஏ.சி.பத்மபாலன்

மெற்றோ பொலிற்றனின் நடமாடும் சேவை

மெற்றோ பொலிற்றன் நிறுவனத்தின் முகவரான 'நவகலா' மூலம் விற்பனைசெய்யப் பட்ட அலுவலக உபகரணங்களுக்கு இலவச தொழில் நுட்பச் சேவையை வழங்க நடமாடும் சேவை ஒன்று நடத்தப்பட்டுள்ளது.



'கனன் போட்டோ கொப்பியர், 'கனன்' டுப்ளிகேட்டர்ஸ் தொலைபேசி அமைப்பு உட்படப் பல்வேறு அலுவலக உபகரணங்களை இந்த நிறுவனம் விற்பனைசெய்து வருகின்றது. அந்த உபகரணங்களுக்கு தொழில்நுட்பக் கவனிப்பும் சேவையும் வழங்கும் இந்த நடமாடும்சேவை நடத்தப்பட்டது.

நிறுவனத்தின் சிரேஷ்ட சந்தைப்படுத்தல் அலுவலர் ஸ்ரீகரன், தொழில்நுட்பவியலாளர்களான கேதீஸ்வரன், கைலாதிஸவீரசிங்க ஆகியோர் இந்த நடமாடும் சேவையை நடத்தினர்.

முதியவர்களுக்கு விசேட கணக்கு கொமர்ஷல் வங்கி அறிமுகம்

55 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதை அடைந்த மூத்த பிரஜைகளுக்கு பல்வேறு அனுகூலங்களை வரப்பிரசாதமாக வழங்கும் புதிய விஷேட கணக்கொன்றை கொமர்ஷல் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

'உதார' மூத்தோர் கணக்கைத் தொடங்குவதற்கு குறைந்தபட்ச ஆரம்ப வைப்புப்பணமாக ரூபா 5 ஆயிரம் செலுத்த வேண்டும்.

இதற்குச் சாதாரண சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படும் வட்டியைப்பார்க்கிலும் ஒரு சதவீதம் கூடுதலாக அளிக்கப்படும். கணக்கு வைத்திருப்பவர்கள் 70 வயதடையும்போது மேலதிக வட்டி இரு சதவீதமாக அதிகரிக்கப்படும். வங்கி தனது சமூகநலப் பொறுப்பின் நிமித்தம் இப் புதிய திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

'உதார' மூத்த பிரஜைகள் கணக்கை வைத்திருப்பவர்களுக்கு பல்வேறு சலுகைகளும் நன்மைகளும் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. உதாரணமாக கொழும்பு ரீட் அவனியூவில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியின் மருந்தகத்தில் இவர்கள் தங்களுக்குரிய அட்டைகளைக் காண்பித்து கொள்வனவு செய்யும் மருந்துவகையின் பெறுமதியில் 7.5% விலைக்கழிவு பெற முடியும். இந்தச்சலுகை நாடளாவிய ரீதியில் குறிப்பிட்ட சில மருந்தகங்களில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'உதார' மூத்தோர் கணக்கை வைத்திருப்பவர்களுக்கு 70 வயதுவரை ஒரு சதவீத மேலதிக வட்டி வழங்கப்படுவதுடன், அதை மாதாந்தம் பெற்றுகொள்ள வசதி செய்யப்படும். எழுபது வயதையும் அதைத் தாண்டிய வயதுடையவர்கள் 'உதார' கணக்கைத் திறந்தவுடன் 2% மேலதிக வட்டி கிடைக்கும்.

இத்திட்டத்தின் கீழ் ஒரு வருட நிலையான வைப்புகளுக்கு ஒரு சதவீதம் மேலதிக வட்டியுமுண்டு.

கொமர்ஷல் வங்கியின் சகல கிளைகளிலும் மூத்தோர் கணக்கை வைத்திருப்போருக்கு விஷேட அடையாள அட்டை வழங்கப்பட்டு முன்னுரிமைச் சேவை அளிக்கப்படும். கொழும்பு ரீட் அவனியுவில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கியில் 'உதார' மூத்த பிரஜைகளுக்கென நவீன வசதிகள் அடங்கிய பிரத்தியேகமான பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. குளிரூட்டப்பட்ட இப்பிரிவில் இதனுள் தொலைக்காட்சி பார்த்தல், நூல்களை வாசித்தல் உட்பட பொழுது போக்கலாம் சக்கர நாற்காலியில் சென்றும் தமது அலுவல்களைச் சிரமமின்றி நிறைவேற்றலாம்.

இலவசஅட்டை, நிறுவனத்தில் கொள்வனவு செய்யும் செயற்கை உறுப்புகளுக்கு விலைக் கழிவு ஆகிய அனுகூலமும் உண்டு. குறிப்பிட்ட சில மருத்துவமனையில் 'உதார' மூத்த பிரஜைகளுக்கு வைத்திய சிகிச்சை கட்டணச் சலுகை கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

'உதார' விஷேட கணக்குத் திட்டம் ஆரம்பக் கட்டத்திலிருந்து அமோக ஆதரவுகிடைத்து வருகின்றது. மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடிக் கிளைகளுடன் தொடர்பு கொண்டு கணக்கின் நன்மைகளைப் பெறலாம்.

இணையத்தளம் ஊடாக உலகத் தமிழர் வானொலி

சாதாரணமாகப் பண்பலை வரிசையில் (FM) ஒலிபரப்பாகிவரும் வானொலிகளைப் போன்று இணையத்தளத்தில் (WWW.WtrFm.Com OR WWW.World tamilar Wab.Com) உலகத் தமிழர் வானொலி என்ற இணைய வானொலி 24 மணி நேரமும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பாகி வருகின்றது.

இந்த இணைய வானொலியில் நிகழ்ச்சிகளை மக்கள் விரும்பிக் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகளில் இளைஞர், யுவதிகளைக் கவரும் Fun நிகழ்ச்சிகளும் அதே வேளையில் தாயக மக்களது உணர்வுகள் சமய, கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் தாயகத்தின் உணர்வுகளை மீட்டிப்பார்க்கும் விதமான நிகழ்ச்சிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் இலங்கை வானொலிகளின் தனித்துவத்தைக் காப்பாற்றும் விதமாக கவிச்சமர் விவாத அரங்கம், வழக்காடுமன்றம் போன்ற நிகழ்ச்சிகளும் அதன் நிகழ்ச்சிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த இணையத் தளத்தில் நீங்கள் ஆங்கில மொழிமூலம் இலங்கை இந்திய உலகச் செய்திகளையும் மற்றும் விளையாட்டுச் செய்திகளையும் படிக்கலாம். இந்தச் செய்திகள் அனைத்தும் விரைவில் டைனமிக் .ஃபான்ட்ஸ் (Dyanamic Fonts) கள் மூலம் தமிழில் வரவுள்ளன. இந்தச் செய்திகள் அனைத்தும் தினந்தோறும் புதுப்பிக்கப்படுகின்றன.

இணையத்தளத்தில் மேலும் பொழுதுபோக்கு அம்சமாக பப்லிக் செட் (Public Chat) பொது இணையத்தள அரட்டைப்பகுதியும் இருக்கிறது.

இந்த இணையத்தளத்தில் ஒலிபரப்பாகும் உலகத்தமிழர் வானொலியை எங்கிருந்தும் இணையத்தினூடாக எந்தவித கட்டணமும் இன்றி கேட்கலாம். இந்த வானொலியில் பாடல்களை விரும்பிக் கேட்க Live @WtrFM.Com என்ற வானொலியில் மின்னஞ்சல் முகவரியை msn இல் இணைத்து (Add பண்ணி) Chat செய்து பாடல்களை விரும்பிக்கேட்கலாம்.

அதேபோல் 00112673969 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பாடல்களை நேரடியாக விரும்பிக்கேட்கலாம். மொத்தத்தில் தாயகத்தில் இருந்து உலகின் பல நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு WWW.Wtr FM.Com மற்றும் WWW.Wold tamilar Web.Com ஆகிய இணையத்தள முகவரிகளினூடாக ஒலிபரப்பாகிவரும் உலகத்தமிழர் வானொலி தாயகத்துடனான ஒரு உறவுப்பாலமாகத் திகழ்கின்றது.

ரி.வி.எஸ். பாவனையாளர்களின் நன்மதிப்பைப் பெறும் சேர்விஸ் சேவை

யாழ்.குடாநாட்டில் ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களின் நன்மதிப்பைப் பெறுவதற்காகவே இந்தச் சேவையை இங்கு மேற்கொள்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவன தொடர்பாடல் முகாமையாளர் எஸ் திஹான் தமித்.

ரி.வி.எஸ். நிறுவனம் அண்மையில் சேவிஸ மற்றும் பழுதுபார்க்கும் பயிற்சிமுகாம் ஒன்றை அணமையில் யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்தில் நடத்தியது. அது தொடர்பாக கேட்டபோதே அவர் மேற்கண்டதகவலை வெளியிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது விற்பனை நிலையங்கள் இலங்கையில் 6 பகுதிகளில் இருக்கின்றன. அந்த 6 நிலையங்களிலும் இந்தச் சேவையை நாங்கள் செய்யத் திட்டமிட்டுள்ளோம். அதன் முதற்கட்டமாக யாழ்.குடாநாட்டுக்கான சேவையை வழங்குகின்றோம். ஏனைய பிரதேசங்களில் பின்னர் செய்யவுள்ளோம்.

நாங்கள் வாடிக்கையாளருக்கு எமது சைக்கிளை விற்பனை செய்துவிட்டு இப்போது அவற்றுக்கான சேவையை வழங்குகின்றோம். இது எமது முக்கிய பணியாகும்.

ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிள் விற்பனை வடக்கு - கிழக்கு மாகாணத்தில், குடாநாட்டில் தான் அதிகம் இடம்பெறுகின்றது. மேலும் இந்த விற்பனையை அதிகரிப்பதற்கான ஆயவுகளை தற்போது மேற்கொண்டு வருகின்றோம். அதன்மூலம் விற்பனையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் - என்றார். (ஜ-5)

பங்குச் சந்தை முதலீடும் வியாபாரமும் தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்தவாரம் கரவெட்டிப் பிரதேசசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிறைவேற்றுநர் செல்வி ஷிவானி திருஞானசம்பந்தன், எச்.என்.பி.பங்கு இடைத்தரகர் நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.வசந்தகுமார், சிரேஷ்ட முகாமையாளர் வி.தேவதாஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் பங்கு கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சகலாத நினைவஞ்சலி

பத்தொன்பதாவது ஆண்டு — முதலாம் ஆண்டு

அமரர் K.S. சுப்பிரமணியம் — திருமதி பூமணி சுப்பிரமணியம்

1903-03-21 ← மலர்வு → 1915-12-15
1985-04-18 ← உதிர்வு → 2003-08-24

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் ஆறவில்லை
எம் துயரம் உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சை விட்டு அகலவில்லை
உங்கள் அன்பும் பண்பும் மறக்கவே முடியாது!

சுதுமலை மதவடி,
சுதுமலை மத்தி, மானிப்பாய்.

உங்கள் நினைவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(36184) (26-11)

31ஆம் நாள் நினைவும் சபிண்டீகரண அழைப்பும்

தவப்பேறு 09-08-1937 — சிவப்பேறு 13-08-2004



நிலையில்லா வாழ்வினிலே நீங்காத நினைவுகளைத் தந்துவிட்டு நிலையான வாழ்வு தேடிச்சென்ற தெய்வத் தாய்

அமரர் தெய்வானை கிருஷ்ணபிள்ளை

அன்புடையீர்,

கடந்த 13.08.2004 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப ஒளிவிளக்கின் அந்தியேட்டி, சபிண்டீகரணக்கிரியைகள் நாளை (12.09.2004) ஞாயிறு காலை 6.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம். எமது சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் எவருக்காவது தனிப்பட்ட அழைப்பிதழ் தரத் தவறியிருப்பின் அதை பெருமனதுடன் மன்னித்து இந்த அழைப்பினை ஏற்குமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

"கிருஷ்ண வாசா",
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

குடும்பத்தவர்கள்.

(C/37412)(42-11-26)

கராத்தே பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம்,செப்.11

மேஜர் ஈழப்பிரியா நினைவாக நடத்தப்படும் 3ஆவது தமிழீழத் தேசிய கராத்தேப் போட்டி இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளதாகத் தமிழீழ விளையாட்டுத் துறையின் இணைபபாளர் அ.இன்பன் தெரிவித்துள்ளார்.

இப்போட்டி தொடர்பான கலந்துரையாடலும் பயிற்சிப் பாசறையும் எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விளையாட்டுத்துறையின் நடுவப் பணியகத்தில காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

இலங்கை கராத்தே கலையின் தந்தை ஷிகான்பொனி றொபேட்டினால் 18ஆம் திகதி மாவட்ட கராத்தே சங்க நிர்வாகிகளுக்கும் 19ஆம் திகதி கறுப்புப்பட்டி மற்றும் மண்நிறப் பட்டி வீர்களுக்கும் கலந்துரையாடலும் பயிற்சிப் பாசறையும் நடத்தப்படவுள்ளன.

கலந்துரையாடலிலும் பயிற்சிப் பாசறையிலும் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10)

முக்கிய அறிவித்தல்

வட்டுக்கோட்டை பரஸ்பர சகாயநிதிச் சங்கம்

மேற்படி சங்கத்தின் நிகழ்கால, எதிர்கால செயற்பாடுகள் பற்றி அங்கத்தவர்களாகிய நாம், ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டியிருப்பதால், அங்கத்தவர்கள் அனைவரையும் நாளை (12-09-2004) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலய மண்டபத்தில் தவறாது சமுகந்தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

இ.சச்சிதானந்தம் அங்.இல.7067
ப.சிவசூரியர் அங்.இல.6991.

(36229) - இணை அமைப்பாளர்.

தேவை

யாழ்.நகரில் இயங்கும் தனியார் மருத்துவமனைக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்.

1. தாதிகள்
2. மருத்துவ தாதிகள் (MIDWIFE)
3. பயிலுநர் தாதிகள்
4. மருந்தாளர்
5. ஆய்வுகூடப் பயிலுநர்

வருவோர் தங்கள் சுயவிவரக் கோவையுடன் நாளை (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிமுதல் 3.00மணி வரையில் நேரில் சமுகமளிக்கவும்.

தொடர்பு: டேடன்ஸ் சம்பந்தர் ஆய்வுகூடம்

(யாழ். இலங்கை வங்கிக்கு அருகில்)

547/1, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

தேவையேற்படின் ஊதியத்துடன் கூடிய பயிற்சி கொழும்பில் பெறமுடியும்.

(36191) (26-11)

JAFFNA COLLEGE, VADDUKODDAI
ADMISSION - 2005

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள்ளன.
   தரம் 1, தரம் 6
2. அ) விண்ணப்பப் படிவங்களை 15-09-2004 முதல் 15-10-2004 வரை பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ) எக்காரணம் கொண்டும் 10-10-2004 இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
   இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
   ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதிநாள் 15-10-2004 அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.
3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.
4. தரம் ஒன்றுக்கான விண்ணப்ப படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரட்கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 300.00
7. வயதெல்லைகள்:
   அ) தரம் 1 விண்ணப்பதாரி 01-02-1999 இற்கும் 31-01-2000 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) தரம் 6 விண்ணப்பதாரி 01-02-1994 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
8. பிரவேசப் பரீட்சை:
   30-10-2004 காலை 9.00 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும்.
9. மிகச்சிறந்த கல்விப் பெறுபேறுகளை உடைய மாணவர் - மாணவிகளுக்கு அனைத்து வசதி வாய்ப்புக்களுடனும் கூடிய விடுதி, நூலகப் பாவனை மற்றும் சிறப்புப் புலமைப் பரிசில்கள் எம்மால் வழங்கப்படும்.

(சி-37538) (26-11) - அதிபர்.

நெஞ்சம் மறவாத இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
கிருஷ்ணபிள்ளை கணேசமூர்த்தி
(ஓடி கணேஷ்)
(வைரவர் கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி)

தோற்றம் 27-07-1944 — மறைவு 03-09-2002

அன்பான அப்பாவே!
நீங்கள் எமைப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறாது எம் துயரம்!
ஊரவர் உம்மை உலகறியப்
புகழ்நாட்டி "ஓடி கணேஸ்" எனும்
சுட்டிப் பெயரை நிலைநாட்டி
ஊர் மதிக்க வாழ்ந்தீரே!
கொடிய அரக்கர்கள் உங்களை
மனங்கொண்டு அழித்தனரோ?
கமலராணியின் பாசமிகு கணவராய் வாழ்ந்து
பூத்த மலர் ஏழும் வாடி வதங்குகின்றன
அதற்கு ஓர் ஆறுதல் வார்த்தை
சொல்வீரோ! அப்பா!

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(36192) (26-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39 ஆண்டுகள் மட்டும் வாழ்ந்து தமிழில் உலக சாதனை படைத்த பாரதி

- சிலர் சிறப்புடையவர்களாகவே பிறக்கின்றார்கள்.
- சிலர் சிறப்பினைத் தேடிக்கொள்கிறார்கள்.
- சிலர்மீது சிறப்பியல்பு திணிக்கப்படுகின்றது.

உலக் மகா கவி ஷேக்ஸ்பியரின் இந்தக் (மொழியாக்கம் செய்யப்பட்ட) கருத்தை சிறிது மாற்றி வாசிப்போமானால்

- சிலர் கவிஞர்களாகவே பிறக்கிறார்கள்
- சிலர் கவித்துவத்தைத் தேடிக்கொள்கிறார்கள்.
- சிலர்மீது கவித்துவம் திணிக்கப்படுகின்றது என்றவாறு அமையும்.

தமிழ் மகாகவி சுப்பிரமணிய பாரதி கவிஞராகப் பிறந்தாரா, கவித்துவத்தைத் தேடிக்கொண்டாரா அல்லது கவித்துவம் அவர்மீது திணிக்கப்பட்டதா? என்று பார்த்தால் அவர் பிறவியிலேயே கவிஞராகப் பிறந்திருந்தார் என்ற முடிவுக்குத்தான் வரத்தோன்றுகின்றது.

'ஆம் பாரதி ஒரு பிறவிக் கவிஞன்'.

பாரதியாரின் வாழ்வியலைச் சற்றுக் கவனித்தோமானால் அவர் மிகக் குறுகியகாலமே - ஆக 39 வருடங்களே இவ்வுலகில் வாழ்ந்துள்ளார். பதினோராம் வயதில் எட்டையபுரத்துப் புலவர்களுடன் வாதம்புரிந்து அறிஞர்களின் பாராட்டைப் பெற்று 'பாரதி' என்ற பட்டத்தையும் வரித்துக்கொண்டார்.

15 வயதில் 7 வயதுச் செல்லம்மாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். அதற்குமுன்பே (அவரது பாடல் வரிகளின்படி, - 10 வயதில் காதல்வயப்பட்டு தன்னை மறந்து கனவுலகில் சஞ்சரித்துள்ளார். தாம் காதலித்த பெண்ணின் வயது 9 என்று பாரதி குறிப்பிடுகின்றார்

19 வயதளவில் எட்டையபுரத்து சமஸ்தானத்தில் உத்தியோகம் பார்த்திருக்கிறார். 20 வயதில் மதுரை சேதுபதி உயர்தரப் பாடசாலையில் தமிழ்ப்பண்டிதராக உத்தியோகம் பார்த்திருக்கிறார்.

இதன்பின் தீவிர அரசியல் பிரவேசமும் சூரத் காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டு லோகமான்ய திலகரின் தீவிரப் போக்கை ஆதரிப்பதும் நடக்கிறது. இந்தக் காலத்தில்தான் அவரது தேசியக் கவிதைகளும் தத்துவக் கவிதைகளும் பிறக்கின்றன. 'இந்திய' பத்திரிகையில் சண்டமாருதமாக அரசியல் கட்டுரைகளைத் தீட்டியதன் வாயிலாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கோபத்துக்குள்ளாகிய வேளையில் 1908 இல் புதுச்சேரியில் அஞ்ஞாதவாசம். பின் முதலாவது உலகயுத்தம் முடிவுற்றதோடு, தமிழ்நாட்டுக்கு வருகிறார் - இந்திய எல்லையில் வைத்தே கைதாகிச் சிறைசெல்கிறார்.

- இவ்வாறு 39 வயதிற்குள்ளேயே அவரது வாழ்க்கைச் சுழற்சி முற்றுப்பெற்றுவிடுகின்றது.

இந்தக் குறுகிய காலத்துக்குள் அவர் தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டுக்கும் இந்திய தேசத்துக்கும் சாதாரண மக்களால் எண்ணியும் பார்க்கமுடியாத அளவுக்கு இலக்கியத்துறையில் எண்ணிறந்த பணிகளைச் செய்துமுடித்துவிடுகின்றார்.

தமிழ்மொழி உள்ளவரை...

100 வயதுவரை வாழ்வதற்குப் பராசக்தியிடம் வரம்வேண்டியவர் அவர். ஆனால், தமிழ்நாடு உள்ள அளவும், தமிழ்மொழி உள்ள அளவும் அவர் உலகத்தில் வாழ்வதற்கான வரத்தைத் தமிழ்த்தாய் அவருக்கு வழங்கிவிட்டாள்.

அள்ள அள்ளக் குறையாத கவிச்செல்வத்தை - சுரங்கத்தை அவருக்கு வழங்கியிருந்த தமிழ் அன்னை சகிக்கமுடியாத வறுமையையும் சேர்த்தல்லவா வழங்கியிருந்தாள்.

'கொடிது கொடிது இளமையில் வறுமை' என்பார் ஔவையார். இந்தக் கொடுமையைப் பாரதி இளமையில் மட்டுமன்றி வாழ்நாள் முழுவதுமே அனுபவித்தார். ஆனால், இந்த வறுமை தன்னை அடிமைப்படுத்திவிட முடியாதபடி அவர் வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்.

வறுமையோ நோயோ வேறு பொதுவாழ்வின் எந்தவிதத் தடைகளோ தமிழ்த்தாய் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதில் இருந்து தடுத்துவிட முடியாதபடி அவர் செயற்பட்டார்.

இந்திய நாட்டின் வறுமை நிலையும் அடிமை வாழ்வும் அவரை வீறுகொண்ட கவிஞனாக முகிழ்த்துவிட்டது என்பது பொருத்தமாகும்.

நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்பதைத் தனது தாரக மந்திரமாக ஆக்கிக்கொண்டார்.

தரித்திரத்துக்கு நிந்தனை

புதுச்சேரியில் கவிஞர் அஞ்ஞாதவாசம் செய்தகாலத்திலும் கூட வறுமை அவரை வாட்டி எடுத்தது. வீட்டு வாடகையைக் கூட வழங்கமுடியாமல் இருந்தநிலையில் அக்காலத்தில் பாரதியார் அவைகளை எல்லாம் எவ்வாறு எதிர்கொண்டார் என்பதை அவருடன் அச்சமயத்தில் உடன் இருந்தவரான எழுத்தாளர் வ.ராமசாமி ஐயங்கார் (வ.ரா.) பின்வருமாறு தமது 'மகாகவி பாரதியார்' என்ற நூலில் வர்ணிக்கிறார்.

பல் தேய்த்துக்கொண்டிருந்த நேரத்தில் ஒரு கிழவர் வந்தார். "வாரும் விளக்கெண்ணெய்ச் செட்டியாரே" என்றார் பாரதியார். எவ்வளவு வரவேற்பு அளித்தாலும் செட்டியாரின் உடம்பு பட்டபாட்டை நான் எவ்வாறு வர்ணிப்பது? செட்டியார் யார் தெரியுமா? பாரதியார் குடியிருந்த வீட்டுக்கு உரியவர். அவர் வாடகைப்பணம் கேட்க வந்திருக்கிறார். நான்குமாத வாடகைப்பணம் பாக்கி. எனினும் கேட்பதற்கு நடுக்கம். விளக்கெண்ணைய்ச் செட்டியார் என்பது பாரதியார் கொடுத்த செல்லப்பெயர்.

"செட்டியாரே! என்ன அவசரம்! நல்ல பதவிக்காக ஜென்மம் ஜென்மமாகப் பிறக்கலாம் என்ற இந்துப் பரம்பரையில் பிறந்து வளர்ந்த உமக்கு ஏன் வாடகைக்கு அவசரம்? இன்னும் பத்து வருஷத்துக்குள் சுயராஜ்யம் வரப்போகிறது. அந்த ராஜாங்க கஜானாவுக்கு ஒரு செக் கொடுக்கிறேன். வாங்கிக் கொள்ளுமே" என்று சொல்லிவிட்டு வெண்கலத்தை இடைவிடாமல் தட்டியது போலக் கலகலவென்று சிரித்தார். தரித்திரத்தை நிந்தனைசெய்யும் நகைப்பு!

செட்டியார் என்ன செய்கிறார். என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். "மகான்! உங்கள் உண்டியல் ஏன் செல்லாது, கூசாமல் கொடுங்கள் வாங்கிக்கொள்கிறேன்" என்று செட்டியார் முணுமுணுத்தார்.

"செடியாரே! உமக்கு நூறுவயசு. போம் பணம் வந்தவுடன் ஒருவிண்டி கூடத் தாமதியாமல் அனுப்பிவைக்கிறேன்" என்றார். செட்டியார் வணக்கத்துடன் மறைந்தார்.



- பிறப்பிலேயே கவிஞர்
- பால்யத்தில் காதல்
- அறிவு முதிருமுன் திருமணம்
- வாழ்நாள் முழுமையும் வறுமை

இளமைக் காதல்

பாரதியாரின் பால்ய காதல் கவிஞர்கள் பலரும் காண்கின்ற கற்பனைக் காதலன்று. அது உண்மையில் அவரது வாழ்வில் குறுக்கிட்டுப் பெரும் சோகத்தை விளைவித்திருக்கின்றது.

"அன்ன போழ்தினி லுற்ற கனவினை
அந்தமிழ்ச் சொலி லெவ் வணஞ் சொல்லுகேன்
சொன்ன தீங்கனவங்கு துயிலிடைத்
தோய்ந்த தன்று. நனவிடைத் தோய்ந்ததால்

துயிலிடைத் தோய்ந்த தன்று நனவிடைத் தோய்ந்ததால் எவ்வாறு எடுத்துரைப்பேன் என்று ஏங்குவதைப் பார்க்கின்றோம்.

பாரதியின் கனவில் பாரதத் தேவியே பல தடவைகளிலும் தோன்றி அவனைப் புதுமைக் கவிதைகளை ஆக்கும்படி செய்திருக்கிறாள்.

மங்கியதோர் நிலவினிலே அவன் கண்ட காட்சி அற்புதமான ஒரு கவிதையாக எமக்குக் கிடைத்திருக்கின்றது.

இந்தப் பெண்ணுக்குப் பதினாறு வயது தானிருக்கும். ஆனால், அவன் இன்றைய இளைஞர்கள் போலன்றி பிள்ளைப் பராயத்திலேயே (ஒரு பெண்ணைக் காதலித்து) காதலின் அழகை அதன் உன்னதமான பாதிப்பை அனுபவித்திருக்கிறான். அப்பெண்ணைப் பாரதி வர்ணிக்கும் விதமே அழகுதான்.

மென்னடைக் கனியின் சொற் கருவிழி
மேனியெங்கும் நறுமலர் வீசிய
கன்னியென்றுறு தெய்வத மொன்றனைக்
கண்டு காதல் வெறியிற் கலந்தனன்
ஒன்பதாய பிராயத்த ளென்விழிக்
கோது காதைச் சகுந்தலையொத்தனள.

- இவ்வாறு செல்கின்றது பாரதியின் வர்ணனை.

இளம்பராயத்தில் காதல் என்பது எந்த ஒரு மனிதன் வாழ்விலும் இடறிவிட்டுப் போகாதிருப்பதில்லை.

பாரதிக்கு திருமணமாவதற்கு முன் ஏற்பட்ட இக்காதல் சரியானதுதானா என்ற கேள்வி எழுவது இயற்கையல்லவா? அதற்கு பாரதியே பதில் தருகின்றார்.

அன்பெனும் பெரு வெள்ளமிழுக்குமேல்
அதனை யாவர் பிழைத்திட வல்லரே?
முன்பு மா முனிவோர் தமை வென்ற வில்
முன்னரேழைக் குழந்தையென் செய்வனே!

வெள்ளம் வந்து இழுக்கும்போது அதுவும் அன்பு என்ற வெள்ளம் வந்து இழுக்கும் போது அதில் சிக்காமல் தப்புவது எவராலய்யா முடியும்? புராணகாலத்தில் மாமுனிவர்களையெல்லாம் இந்த வில்போன்ற புருவத்தையுடைய விழிகள் வெற்றிகொள்ளவில்லையா? அந்த வேல்விழிகளின் முன்னால் நான் ஒரு வெகுளியான குழந்தை என்ன செய்யமுடியும்? என்று கேட்கிறார். திருமணத்துக்கு முன்னமேயே இக்காதல் முடிவுற்றதால் அப்பெண்ணும் ஒன்பது வயதுடையவளாகவே இருந்தாள்.

எத்தனை வயது!

பாரதிக்கு திருமணம் நடந்தபோது அவருக்கு எத்தனை வயது என்பதில் குழப்பமிருப்பது போல் தோன்றுகின்றது. 14 அல்லது 15 வயது என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால், பாரதியின் கூற்றுப்படி அவருக்கு 12 வயது.

ஆங்கோர் கன்னியைப் பத்துப் பிராயத்தில்
ஆழ நெஞ்சிடை யூன்றி வணங்கினன்
ஈங்கோர் கன்னியைப் பன்னிரண்டாண்டினுள்
எந்தை வந்து மணம்புரிவித்தனன

என்று பாடுகின்றார். பாரதியின் கணக்குத் தவறா அல்லது புள்ளிவிவரத்தில் தவறா? பாரதிக்கு கணக்கென்றாலே வெறுப்பு அதனால், இதிலும் ஞாபக மறதியால் வயதைத் தவறாகக் குறிப்பிட்டிருப்பாரோ எதுவானாலும் இவை பிள்ளைப்பராயத்திலேயே நடந்தேறியுள்ளன.

காதல் நிறைவேறாதுபோனமை அவருக்கு வருத்தமே. அதேபோல், திருமணத்திலும் நாட்டமிருக்கவில்லை. தந்தையின் பிடிவாதம் குலிக்க [illegible] அவரைத் திருமண வாழ்வுக்குள் தள்ளிவிட்டுள்ளது. பாரதி 'ஸ்வசரிதை' தொகுதியின் 36 ஆவது செய்யுள் அவரது மனநிலை இருந்த விதத்தைப் புலப்படுத்தும். அதன் கடைசிவரி வருமாறு:-

கற்றுங் கேட்டு மறிவு முதிருமுன்
காதலொன்று கடமையொன்றாயின.

பத்திரிகைத் தொழில்

பாரதியார் கவிஞர், எழுத்தாளர், சிந்தனையாளர், ஞானி என்பது மட்டுமல்ல ஒரு பத்திரிகையாளரும் கூட. சுதேசமித்திரன் பத்திரிகையில் அவர் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தையும் அனுபவித்த அவஸ்தையையும் வ.ரா. பின் வருமாறு விவரிக்கின்றார்.

"நயமாய் என்னை ஏய்த்து வேலைவாங்குவதில் அய்யர் (சுப்பிரமணிய அய்யர்) ரொம்ப 'கொம்பன்', என்றாலும் பத்திரிகைத்தொழிலில் எனக்குப் பழக்கமும் தேர்ச்சியும் விளங்கும்படி செய்தவர் அவர்தான். அவரை ஒருவகையில் பரம குருவாக மதிக்கிறேன்" என்பார் பாரதியார்.

"சாயங்காலம் ஆபீசிலிருந்து வீட்டுக்குப் போகலாம் என்று யோசித்துக்கொண்டு இருப்பேன். பணமுடையால் அய்யரைப் பணம் கேட்கலாமா வேண்டாமா என்று யோசனை செய்து கொண்டிருக்கிற சமயத்தில் 'அய்யர் உங்களுக்குக் கொடுக்கச் சொன்னார்' என்று ஒருவன் திடீரென்று ஒரு டம்ளர் காப்பி கொண்டுவந்து கொடுப்பான். அய்யருடைய அன்பைப்பற்றி நினைத்து பிரம்மானந்தப்பட்டுக் கொண்டிருப்பேன். இந்தச் சமயத்தில் அய்யர் வந்து தோன்றுவார். பணம்கேட்க வேண்டும் என்று நினைத்த நினைப்பே போய்விடும்.

"பாரதி, சேர்.ஹென்றிகாட்டன் இந்தியாவைப் பற்றி சீமையிலே பேசியிருக்கிறாரே பார்த்தாயோ" என்பார்.

"ஆமாம், பார்த்தேன் நன்றாகப் பேசியிருக்கிறார்" என்பேன். "அதை நாளைக்கே நம்ம பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டாமா" என்பார் "கட்டாயம் பிரசுரிக்கவேண்டும்" என்பேன்.

"அந்த பிரசங்கத்தின் ரஸம்கெடாமல் தமிழில் மொழிபெயர்க்க உன்னைத் தவிர யாரால் முடியும்" என்பார். தலைகுனிந்து நிற்பேன்.

"நீ ஆபீசிலே மொழிபெயர்க்க வேண்டாம். வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோய் செய்து நாளைக்கு வரும்போது கொண்டு வா போதும். வீட்டிலே விளையாட்டுப் போல் மொழிபெயர்த்து

- பேனா -

விடலாம். அரை மணிநேரம் கூட உனக்கு பிடிக்காது" என்பார் அய்யர்.

".....ஆபிசில் மட்டுமா வேலை வீட்டிலேயும் வேலை, கூலிக்கு உழைக்கிறவர்களின் கதி இதுதான்".

- இவ்வாறு கூறிய பாரதியார் "அய்யர் என்னை அன்பைக் கொண்டு ஏய்த்தது உண்மை என்றாலும் இந்தமொழி பெயர்ப்பு வேலை எனக்கு எவ்வளவு ஒத்தாசை செய்தது தெரியுமா?

"இங்கிலீஷ் ரொம்ப நயமான பாஷையானதால் இங்கிலீஷ் எழுத்தின் கருத்துச் சிதைந்து போகாமல் தமிழருக்கு அதை சுவாரசியமாகச் சொல்லும் பொருட்டு நேரான தமிழ்ச்சொற்களை நான் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. தமிழ்ப்பாஷையின் கம்பீரமும் ரஸமும் அப்பொழுது எனக்கு இன்னும் தெளிவாய்த் தெரிந்தன" என்பார். ★

பாரதியைப் போல் கவிதைத்
தமிழில் பாட
பலர் பெரிதும் பாடுபட்டு
முயன்று பார்த்தார்
பாரதியைப் போல் தமிழில்
உயிரும் மூச்சும்
பாய்ச்சிக் கவியாக்குவது
அரிதாம் கண்டீர்,
பாரதியே மீண்டுலகில்
வந்தால் தானும் - அப்
பாரதிபோல் பாடுவனோ?
இயலா தென்பான்
பாரதியின் பாட்டுத்திறன்
உலகினோர்க்கு
பலவாறும் தேவையெனக்
கண்டதாலே
பாரதியே பாரதியாய்ப்
பிறந்து வந்து
பாரதத்தில் வீற்றிருந்தான்
பகர்க மாதோ!

என்றும் உனை மறவோம்

தமிழினம்	உறங்கத்	தான்	விழித்தெழுந்து
அமிழ்தினும்	இனிய	அருங்கவி	ஆக்கி
வெள்ளையன்	ஆட்சி	வேருடன்	சாய
அள்ளிக்	கவிதை	ஆறென	ஊற்றினான்
அடிமை	விலங்கினை	அன்னைக்கு	மாட்டிட
இடியென	முழங்கிட	இடிந்தனர்	வெள்ளையர்
செம்மொழி	படைத்த	சிறப்புறு	சாதி
மும்முடி	சூடியோர்	முடங்கிடார்	என்றான்
பாரதி	என்ற	பாவலன்	இல்லையேல்
சாரதி	அற்ற	சகடையைப்	போல
அசைவது	மின்றி	நகர்வது	மற்று
திசை	அறியாது	செத்தொழிந்திருப்போம்	
பார்	அதிர்ந்திட	பாரதி	பாடிய
சீர்பெறு	கவிதையை	சிந்தையில்	இருத்துவாம்.

- விகடகவி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.11

குடும்பப் பெண் ஒருவரைக் காணவில்லை எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை 4ஆம் கட்டைப் பகுதியில் வசிக்கும் செல்வேஸ்வரன் பிறேமினி (வயது 29) என்பவர் கடந்த 30ஆம் திகதி காலை வீட்டில் இருந்து வெளியில் சென்றார் என்றும் பின்னர் வீடு திரும்பவில்லையெனறும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-7)

மரண அறிவித்தல்

இராசதுரை கனகலிங்கம் (சிட்டு)

(படப்பிடிப்பாளரும், யாழ். மத்தியகல்லூரி பழைய மாணவனும், சிறந்த குடுப்பாட்ட வீரரும், நடுவரும், சமாதான நீதிவானும்)

யாழ்ப்பாணம், இல.15 மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும் நாவற்கட்டை லேன், கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை கனகலிங்கம் (06.09.2004) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அனனார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - இராசரத்தினம் அவர்களின் அன்பு மகனும் பரமேஸ்வரி (பிரான்ஸ்) அவர்களின் அருமைக் கணவரும் சுரேஸ்குமார் (பிரான்ஸ்), சதீஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பபியோன் (பிரான்ஸ்), ஜெனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சபின், சர்மி, ஜெகன், ஜெசியா ஆகியோரின் பேரனும் அமரசிங்கம், காலஞ்சென்ற பரமேஸவரி (கனடா) மற்றும் கமலேஸ்வரி, யோகேஸ்வரி (லண்டன்), சண்முகலிங்கம், காலஞ்சென்ற மகேஸ்வரி ரெட்ணசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் விஜயகுமார், செல்வராணி, ஜெயக்குமார், றோசி (ஜேர்மனி), பிறேம்குமார், வரலக்ஷ்மி (பிரான்ஸ்) ராஜ்குமார், பாமினி (பிரான்ஸ்), குமுதா, ரவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சிறியதந்தையும் இலட்சுமியின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சுரேஸ்குமார்,
(பிரான்ஸ்).

நாவற்கட்டை லேன்,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (36304)(42-13)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி மாணிக்கம் செல்வராசா

எமது சபையில் வேலைசெய்யும் *திரு.செ.உமாபதி* அவர்களின் அன்புத்தாயார் 12.08.2004 அன்று காலமான செய்திகேட்டு ஆழ்ந்த அனுதாபத்தை வடபிராந்திய தொழிற்சங்கம் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

வடபிராந்திய தொழிற்சங்கம்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
யாழ்ப்பாணம்.

(36306)(32-42-13)

கணனிப் பயிற்சி நிலையத் திறப்புவிழா

ஆஸ்திரேலியா தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனம் சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றின் அனுசரணையுடன் தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தால் ஆரம்பிக்கப்படும் கணனிப் பயிற்சி நிலையத் திறப்புவிழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி நவீனசந்தை மேல் மாடியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறை தலைவர் கலாநிதி சி.மகேசனும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா நகரசபை செயலாளர் மு.செ.ரவணவ, தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் ஆகியோரும் கலந்து கொள்வர். (8-31)

விளையாட்டு விழா

வடமராட்சி,செப்.11

தம்பசிட்டி சர் வோதயா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை பெற்றோர் சங்கத் தலைவர் திருமதி ஏ.ரஞ்சனாமதி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.வசந்தகுமார் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (10-173)

நாட்டுக் கூத்து

கொழும்புத்துறை,செப்.11

சுண்டுக்குளி சனசமூக நிலையத்தின் 76 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி இன்று இரவு நிலைய மைதானத்தில் நாட்டுக் கூத்து இடம்பெறவுள்ளது.

அண்ணாவியார் எ.வரப்பிரகாசத்தின் நெறியாள்கையில் உருவான 'செனபோன்' என்னும் நாட்டுக்கூத்து மேடையேற்றப்படவுள்ளது. மாநகர ஆணையாளர் த.குணராசா அரசியற்றுறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் இதில் விருந்தினராகக் கலந்து கொண்டனர்.(10-30)

உள்ளூராட்சி சபைகளுக்கான முகாமைத்துவப் போட்டி

தென்மராட்சி,செப்.11

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டிகள் நாளை மறுதினம் 13ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளன.

உள்ளூராட்சி நடவடிக்கைகளை மேம்படுத்தல் தொடர்பாக மாகாண மட்டத்தில் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (8-117-31)

SAAMSTECH இன் முற்றிலும் புதிய முறையிலான

ஆங்கில சிங்கள நேரடி வகுப்பு

இரண்டு மாத வகுப்புகளின் முடிவில் முழுமையாகக் கதைக்கலாம்

ஏன், எப்படி எப்படி என்ற முழுமையான விளக்கம்

நாம் ஒரு மொழியினை கதைக்க கற்றுக்கொள்வது இலகுவானதா?

இரண்டும் மூன்றும் ஐந்து என்று சொல்லத்தெரியாத இரண்டு, மூன்று வயதுக் குழந்தைகள் 250 வரையான சொற்களையும் சில அடிப்படையான வசன அமைப்புகளையும் தெரிந்துகொண்டு ஒரு மொழியைக் கதைக்கின்றன. வளர்ந்தவர்களாகிய நாம் ஒரு மொழியைக் கதைப்பதென்பது மிக இலகுவானது.

ஆங்கிலத்தைக் கதைக்கும் ஆங்கில குழந்தைகளை விட அதிகமான சொற்களைத் தெரிந்திருந்தும் நாம் ஆங்கிலத்தைக் கதைக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

நாம் அதிகமான சொற்களைத் தெரிந்திருந்தும் கதைக்க முடியாததற்குக் காரணம் நாம் கற்றுக்கொண்ட இலக்கண ரீதியான கல்வி. ஒரு மொழி முதலில் கதைக்கப்படவேண்டும். ஒரு மொழியினைக் கதைப்பதற்கு முன்னர் இலக்கணம் கற்பிக்கப்படின் கதைக்க முடியாத நிலை தோன்றும். அதாவது வசனங்கள் இலக்கணரீதியான சிந்தனை மூலம் உருவாக்கப்படும். சாதாரணமாக கதைத்தலின் வேகம் நிமிடத்துக்கு 250 சொற்கள். ஆனால், இலக்கண ரீதியான சிந்தனையில் நிமிடத்துக்கு 15 முதல் 20 இற்கு மேற்பட்ட சொற்களை சேர்த்து வசனங்களை உருவாக்க முடியாது. எனவே, ஒரு மொழியினைக் கதைப்பதற்கு முன்பாக இலக்கணத்தினைக் கற்பவர்கள் கதைக்க முடியாத நிலையில் இருப்பர். ஒரு மொழியினை முதலில் கதைத்த பின்னரே அந்த மொழியினை அதன் அமைப்புக்களைக் கற்பிக்க வேண்டும்.

ஆங்கிலம் கற்றுக்கொள்வது கடினமாக இருப்பது ஏன்?

இலங்கையில் இதுவரையுள்ள ஆங்கில மொழிக்கான கற்பித்தல் முறை தவறானது. ஒரு மொழியைக் கதைக்கும் ஒருவராலேயே அதன் இலக்கணத்தினைக் கற்க முடியும். தமிழை நன்கு கதைக்கும் குழந்தைகளுக்கு 3 ஆம் வகுப்புக்குப் பின்னரே அடிப்படை இலக்கணங்களாகிய எழுவாய் பயனிலை என்பன ஆரம்பிக்கப்படுகின்றன. அதேபோல் இங்கிலாந்தில் ஆங்கிலத்தினை நன்கு கதைக்கும் 4 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கே ஆங்கிலத்தின் அடிப்படை இலக்கணம் கற்பிக்க ஆரம்பிக்கப்படுகிறது. ஆனால், இலங்கையில் ஆங்கிலம் கதைக்கத் தெரியாதவர்களுக்கு இலக்கணம் ஆரம்பிக்கப்படுவதால் அது கடினமான ஒன்றாக இருப்பதோடு அதனால், கதைக்க முடியாத நிலை தோற்றுவிக்கப்படுகிறது.

ஆங்கிலக் குழந்தைகள் சரளமாகக் கதைக்கும் போது தெரிந்துள்ள சொற்களையும் அவர்கள் தெரிந்துள்ள வசன அமைப்புகளையும் மனனம் செய்வதன் மூலம் இலகுவாகக் கதைக்கலாமா?

இது இலங்கையில் உள்ள இன்னொரு தவறான கற்பித்தல் முறை. நாம் மனனம் செய்யும் சொற்களையோ புரிந்துகொள்ளும் வசன அமைப்புகளையோ வைத்து கதைக்க முற்பட்டால் கதைக்க முடியாத அளவுக்கு கதைத்தலின் வேகம் குறைந்து விடும். வசனங்கள் ஊடாக கிரகிக்கப்படும் சொற்கள் மற்றும் பழக்கப்படும் வசன அமைப்புகளை வைத்தே கதைக்க முடியும்.

SAAMSTECH இன் புதிய முறையிலான மொழிக்கற்கைநெறி பற்றி?

SAAMSTECH இன் பயிற்சி வகுப்புக்களில் இதுவரை 40,000 இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டுள்ளதோடு தொலைக்கல்வி பாடநெறியில் 700 இற்கு மேற்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் பயிற்சிபெற்று வருகிறார்கள். குழந்தைகள் தாய்மொழி கற்பதை அடிப்படையாகக் கொண்ட நேரடி வகுப்புகள் மூலம் இரண்டு மாதங்களில் ஒரு மொழியை முழமையாகக் கதைக்கலாம்.

யார் வகுப்புகளில் கலந்துகொள்ளலாம்?

விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், அரச தனியார் அலுவலர்கள், வங்கியாளர்கள், பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள், கணனி மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், 8 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள்.

எமது வகுப்புகளில் சேர்ந்து இரண்டு மாதங்களில் ஆங்கிலத்தையோ சிங்களத்தையோ சரளமாகக் கதைக்க முடியாவிட்டால்?

இப்பாடநெறியின் முடிவில் தமிழினைப போன்று ஆங்கிலத்தினையோ சிங்களத்தினையோ கதைக்கவோ அவை மூலமாக எந்த ஒரு கற்கைநெறியை மேற்கொள்ளவோ முடியும். சந்தேகம் இருப்பின் இதுவரை கற்கும் இலக்கண வகுப்புகளை முழுமையாக விட்டுவிட்டு எமது வகுப்புகளிறகு சேர்ந்து 24 வகுப்புகளின் முடிவில் சரளமாகக் கதைக்க முடியாத அனைவருக்கும் பாடக கட்டணத்தின் இரண்டு மடங்கினைத் திருப்பித்தர முழுமையான உத்தரவாதம்.

50 %

11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் பதிவு செய்யும் அனைவருக்கும் பாடக்கட்டணத்தில் 50 % சலுகை

ஆங்கிலம்: ரூபா 3000/- சிங்களம்: ரூபா 2000/-

யாழ்ப்பாண கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, மானிப்பாய், சாவகச்சேரி, ஆவரங்கால், பருத்தித்துறை, கோப்பாய் உட்பட யாழ்ப்பாணத்தில் பத்துக்கு மேற்பட்ட இடங்களில் வகுப்புகள் நடைபெறும்.

மேலதிக விவரங்களுக்கு:

யாழ். அல்லது கொழும்பு தலைமையகத்தில் அல்லது நேரடி வகுப்பு நடைபெறும் இடங்களில்.

(சி-37582)(23-42-13) SAAMSTECH

22 - 1/4 Galle Road,Dehiwala. 011 - 5540200 841, Hospital Road, Jaffna. 0773068968

விற்பனைக்கு

யப்பான் T.V., Sony 2093, புல்லுவெட்டும் மெசின், Water Cooling Fan, VCD/CD Player, Latest - Video Deck SD 225 என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 100, K.K.S. வீதி, சுன்னாகம்.

(36300)(29-13-42)

Sales & Repairs

100% உத்தரவாதம், விற்பனைக்குப் பிந்திய சேவைகளுடன் .

Pentium-IV, கணனிகளை கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளமுடியும்.

Pentium-II 18000/=

உங்கள் கணனிகளை நம்பிக்கையான முறையில் உடனுக்குடன் திருத்திக் கொள்ளமுடியும்.

அதிக்கிரமான சேவைகளுடன்

COMPUTER EXPRESS
Sales & Service Center
NO. 328 Stanly Road, Jaffna.
0777-222422 ,021-2227866

விற்பனையாகின்றன

கலாபூஷணம் அறாலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்

	ரூ.	ச.
1. யாழ்ப்பாணம்	50.	00
2. யாழ்ப்பாணமா? கொழும்பா?	50.	00
3. எங்கள் நாடு	75.	00
4. இலக்கியக் கட்டுரைகள்	125.	00
5. ஒரு காதலின் கதை	150.	00
6. இலக்கிய விமர்சனம்	40.	00
7. 'வீடற்றவன்' நாவல் விளக்கம்	25.	00
8. பொருளோ பொருள் விளக்கம்	25.	00
9. வானொலிநாடகம் எழுதுவது எப்படி?	150.	00

இந்நூல்களை ஸ்ரீலங்கா புத்தக சாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

(36298) (43-42-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைக்கோட்டின் கீழுள்ள

60 குடும்பங்கள் வீடுகள் அமைக்க வீடமைப்பு அதிகாரசபை உதவி

யாழ்ப்பாணம்,செப்.11

இல்லிடம் இல்லாது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 60 குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பதற்கு மானியமாக தலா 25ஆயிரம் ரூபா நிதியினைத் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்.மாவட்ட அலுவலகம் வழங்கியுள்ளது.

இத்தகவலை தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எஸ்.மாசிலாமணி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுடாகத் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இல்லிடம் அற்ற 60 குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பதற்கு இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 10 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் கட்டமாக 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

30 குடும்பங்களுக்குத் தலா ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது எனவும் ஏனைய 30 குடும்பங்களுக்கும் முதற்கட்டமாக 10 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது எனவும், இரண்டாம் கட்டமாக 15 ஆயிரம் ரூபா நிதி விரைவில் வழங்கப்படும் என்றும் மாசிலாமணி மேலும் தெரிவித்தார். (8-7)

சைவசித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சை முடிவுகள்

யாழ். சைவ பரிபாலன சபையினரால் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட சைவசித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

சைவ சித்தாந்தப் பிரவேச பண்டிதர், சைவ சித்தாந்தப் பால பண்டிதர், சைவ சித்தாந்தப் பண்டிதர் என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் பட்டப் பரீட்சைகளில் சித்தி பெற்றவர்களின் பெயர் விவரம் சித்தி பெற்ற தரம் முதலியவை வருமாறு:-

சைவசித்தாந்தப் பிரவேச பண்டிதர்

- இரண்டாம் பிரிவில் சித்தி அடைந்தோர்:- சபாநாதன் பாரதி (சுன்னாகம்) , சிவரூபி நமசிவாயம் (காரைநகர்), மு.அருள்செல்வ நாயகம் (கொடிகாமம்)
- மூன்றாம் பிரிவில் சித்தியடைந்தோர்:- அ. வேதவித்தியாசாரர் (கந்தர்மடம்), நிஷாந்தினி பரராஜசிங்கம் (காரைநகர்), க. சிவனேசன் (கொடிகாமம்).

சைவ சித்தாந்த பால பண்டிதர்

- இரண்டாம் பிரிவில் சித்தியடைந்தோர்:-

சுகாஜினி கிருஷ்ணபிள்ளை (சாவகச்சேரி), வைத்திலிங்கம் இரகுநாதமுதலியார் (யாழ்ப்பாணம்), தவராசா விக்கினேஸ்வரன் (யாழ்ப்பாணம்).

சைவ சித்தாந்த பண்டிதர்

- இரண்டாம் பிரிவில் சித்தியடைந்தோர்:-

சுவாமிநாதபிள்ளை தேவ மனோகரன் (இணுவில்), சசிலேகா கனகசுந்தரம்பிள்ளை (அச்சுவேலி), வா.சாந்தினி (சுழிபுரம்), குஞ்சிதபாதம் சுரேஷ்குமார் (யாழ்ப்பாணம்), புஷ்பலதா இராமலிங்கம் (கிளிநொச்சி).

பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெறுபேறுகள் தபால் மூலம் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என சைவ பரிபாலன சபையின் தலைவரும் பரீட்சைச் செயலருமான சைவப் புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

பஸ்சேவை சீரில்லை பயணிகள் சிரமம்

தென்மராட்சி,செப்.11

சாவகச்சேரியிலிருந்து தினமும் பி.ப.4.45 மணிக்கு பருத்தித்துறைக்கு நடைபெறும் பஸ் சேவை திடீர் திடீரென நிறுத்தப்படுவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரியிலிருந்து செல்லும் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்கள் இந்த பஸ் சேவை இல்லாத வேளைகளில் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும்

நீண்ட நேரம் பஸ்நிலையத்தில் காத்திருந்து அடுத்த பஸ்ஸில் பயணஞ்செய்து இரவு 8.00 மணியளவில் வீடு திரும்புவதாகவும் கூறப்பட்டது.

765 மார்க்கத்தில் ஒரு பஸ்ஸே சேவையில் ஈடுபடுவதால் அதனை நிறுத்தாமல் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்துமாறு பயணிகள் உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (எ-117)

மீட்பு நிதிக்கடன் தொடர்பான சந்திப்புகள்

யாழ்ப்பாணம்,செப்.11

2004 ஆம் ஆண்டில் தமிழீழ மீட்பு நிதிக்கடன் கிடைக்கப்பெற்ற போதும் சான்றிதழ்களைத் தவறவிட்டவர்களுக்கு நிதித்துறையினருடனான சந்திப்புகள் நாளையும், நாளைமறுநாள் திங்கட்கிழமையும் நல்லூர் அரசியல் துறைச் செயலகத்திலும் வீரசிங்க மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 4.30 மணிவரை நல்லூர் அரசியல் துறைச் செயலகத்திலும் -

திங்கட்கிழமை 11.30 மணி தொடக்கம் ஒரு மணிவரை வீரசிங்கம் மண்டபத்திலும் சந்திப்புக்கள் இடம்பெறவுள்ளன. (10)

நல்லூர்க் கந்தன் ஆலயச்சூழலில் இன்று நடப்பவை

நல்லூர்க்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இந்து கலாசார திணைக்களத்தின் யாழ்மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் இன்று சனிக்கிழமை மாலை 7 மணிக்கு வசாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் செ.பரமேஸ்வரன் தலைமையில் இந்து சமயத்தின் இன்றைய சூழ்நிலையில் கலாசார விழிப்புக்கொள்வது அவசியமா? தத்துவ விழிப்புக்கொள்வது அவசியா? என்ற தலைபில் பட்டிமன்றம் இடம்பெறும். (8-13)

* * *

நல்லூர்க்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டப அரங்கில் தினமும் 6 மணிக்கு நடைபெற்றுவரும் கம்பராமாயணத் தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் இன்று சனிக்கிழமை காலை கதாவாதிரி பிரம்மஸ்ரீ சி.வை.நித்தியானந்த சர்மா விபீஷணன் சரணாகதி என்னும் காட்சி பற்றி உரை நிகழ்த்துவார். (8-13)

* * *

யாழ்ப்பாணம்,செப்.11

நல்லூர்க்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினர் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு எஸ்.நாகராசவின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக்காரர்களாக வயலின் கே.பத்மநாதன், மிருதங்கம் டானியல் வரதராஜன், கொஞ்சிரா எஸ்.சிவராம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (8-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்க்கந்தன்

பெருந்திருவிழாக் கோலச் சிறப்பிதழ்

(22ஆம் திருவிழா)

காண்பன் கந்தன் கோலம்

இரா: கல்யாணி தா: ஆதி

பல்லவி

காண்பதெல்லாம் கந்தன் கோலமையா – மார்பில்
பூண்பதெல்லாம் அவன்புகழ் ஆரமையா (காண்)

அனுபல்லவி

மாண்பதெல்லாம் உலகில் அவன் மதிப்பாமையா – மற்றோர்
வழுத்தல் எல்லாம் அவன் கீர்த்தியையே (காண்)

சரணம்

தேங்கருள் கந்தன் நல்லையிலே – கூட்டம்
தீரஞுமையா என்றும் கடல்போல
ஓங்குதையா அவன் புகழ் உலகெங்கும்
தேங்குதையா பக்தி சித்தத் தேனாக (காண்)
நீலம் எழுமே மயிலில் வேலும் எழுமே – ஆடும்
சூலம் எழுமே சுருணைக் குறிப்பும் எழுமே
சீலம் எழுமே அடியார் சேவை எழுமே – யார்க்கும்
மேலும் எழுமே மேற்கதி பின் தவறாதே (காண்)

பண்டிதர் சி.கா.சேந்தன்.

திருநல்லை வாசா!

பாரெல்லாம் சென்று
படைக்கலம் வாரிவந்து
போரொன்றை ஊக்குவிக்கும்
போக்கினைப் - பாரடா
தீராதி தீரா
திருநல்லை வசாவுன்
பேர்சொல்லப் பாறுமே போர்

அங்குசன்

விதியினை வெல்லும் வழிகளைச் சொன்னாய்

அடுத்தால் உன்னைப் பெறலாமென்றார்
அடுத்தேன்ஆனால் பெற்றிடவில்லை
தொடுத்தால் உன்னைத் தொடலாமென்றார்
தொடுத்தேன் ஆனால் தொட்டிட வில்லை
எடுத்தேன் இதற்கொரு முடிவுகாண
எடுத்தது தெளிவு என்னுள் நன்றாய்
விடுத்தேன் உன்னடி சரணாகதியாய்
விதியையும் வெல்லும் வழிதனைச் சொன்னாய்

மு.க.சிவானந்தம்

நல்கிடுவான் நற்பேறின்பத்தை

வாருங்கள்... வாருங்கள்
வந்து பாருங்கள்
கந்தன் புகழ் பாடும்
தலம் நல்லையம் பதிக்கு
வந்து பாருங்கள்
பாடுங்கள் பாடுங்கள்
பாவினால் பாடுங்கள்
பாலனவன் திருநாமத்தை
நாவினால் பாடுங்கள்
நம்புங்கள் நம்புங்கள்
நல்லை முருகனவனை
நாளும் சிந்தையில் வையுங்கள்
நலந்தருவான் பாருங்கள்
நாடுங்கள் நாடுங்கள்
நல்பொழில் சூழ்ந்திடும்
நல்லூரான் திருவடியை
நல்கிடுவான் நல்கிடுவான் ~ என்றும்
நற் பேறின்பத்தை...

க.நாகேஸ்வரா.

வெற்றிக் கொடியோடு வருக முருகா

கந்தனே வருக கடம்பனே வருக
எந்தையே வருக எம்குறை தீர்க்க வருக
நல்லையில் நாமும் நாளும் வழிபடுவோம்
எல்லையில் புகழ் எழில் குறிஞ்சிக் குமரனே
அண்ணலே வருக அமரரிடர் தீர்த்தவனே
வண்ண மயிலேறி வடிவேலுடன் வருக
திருப்புகழ் பாடினேன் கேட்டிட வருக
விருப்புடன் வந்தே அருள்தந்திட வருக
நேர்த்திகள் செய்தோம் நல்லைப் பதிக்கரசே
கார்த்திகை மைந்தனே கீர்த்திகள் தருவாய்
வள்ளலே வருக வெற்றிக் கொடியோடு வருக
வள்ளி தெய்வ யானையுடனே வருக வருகவே

சைவப் புலவர்
செ.கந்த சத்தியதாசன்.

மௌன வேல்

மரபை மாற்றும் வீர வேல்
மனதை ஆற்றும் ஈர வேல்
உருவை நீட்டும் ஞான வேல்
உரிமை காட்டும் மௌன வேல்

பு.திலிப்காந்த்.

குழந்தை வேலன்

பல்லவி

குழந்தைவேலா குமரகுருபர அரகர சிவசிவ

சரணங்கள்

குன்றுங் குன்றுஞ்சென் றெங்கும் அடிபட நடமிடு
(குழந்தைவேலா)
தொழுந் தெய்வமும் நீ சுற்றம் நீ துணை நீ துன்ப இன்பமும் நீ
(குழந்தைவேலா)
கொன்றுங் கொன்றுங் கொன்றும் விதிமுறை
நின்றும் நின்றும் நின்றும் வெகுவுறச்
சென்றுஞ் சென்றுந் திசை திசை வலம் வரு
(குழந்தைவேலா)
எழுந்து என்னிடம் விரைந்துவந்து இடர்களைந்து
காத்திடவருவாய் (குழந்தைவேலா)
கண்டுங் கண்டுங் கண்டுங் கனமுறை
வென்றும் வென்றும் வென்றும் வியுதர்கள்
பொன்றும் பொன்றும் படிவலமிடம் நடமிடு
(குழந்தைவேலா)
அளந்து யாவரும் அறிந்மிட அரியநின்
செழுந் திருப்பத மலரடி தந்திடு
(குழந்தைவேலா)
அஞ்சும் அஞ்சும் அஞ்சும்படி
நெஞ்சும் நெஞ்சும் கெஞ்சக் கிரிபடத்
துஞ்சும் துஞ்சும் அசுரர்கள் துகள்படத்
தஞ்சம் தஞ்சம் எனநடமிடு
(குழந்தைவேலா)
பழந்தமிழர்கள் பரிந்து செந்தமிழ்
அறைந்து சிந்தை நொந்து உருகவந்திடு
(குழந்தைவேலா)
வளைந்த சூரர்கள் தளங்கெடக்கிரி உடைந்து போகவே
சிவந்தவேல்விடு (குழந்தைவேலா)
எங்குஞ் சங்குமுழங்கச் சிந்துகலங்கப் புதர்நடுங்கத்
தேவர்கள் பரிவோடு அரகரசிவசிவ எனும் கடல்
ஒலிபோல் நீலக்கோல மாமயில் மீது
நிறுநிறு என நெஞ்சம்அஞ்ச வஞ்சக்கெஞ்ச
அஞ்சல் அஞ்சல் அஞ்சல் எனவரு (குழந்தைவேலா)

- யோகர்சுவாமிகள்.

புலிகளின் இடைக்கால வரைபு குறித்து அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது

அமைச்சர் மைத்திரிபால நாடாளுமன்றில் தகவல்

கொழும்பு,செப்.11

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளில் சேர்க்கப் படவேண்டிய விடயங்கள் மற்றும் அகற்றப்படவேண்டிய விட யங்கள் குறித்து அரசு ஆராய்ந்து வருவதாக அமைச்சரும் சபை முதல்வருமான மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன் தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் தேரர் ஒருவர் கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இப்படித் தெரிவித்தார். அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

புலிகளுடனான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முன் னேற்பாடுகளை மேற்கொள்வதற்கு என ஜனாதிபதியால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்குச் செல்வதற்கு முன் னர் அவர்கள் முன்வைத்திருக்கும் யோசனை குறித்துப் பரிசீலனை செய்துவருகின்றோம்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளுட னும் கலந்தாலோசனை செய்து உரிய முடிவை எடுப்போம். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டைக் காட்டிக் கொடுக்கும் வகையிலோ அன்றி நாட்டைப் பிரிக்கும் வகையிலோ எந்தத் தீர்வையும் மேற்கொள்ள மாட்டார்.

விடுதலைப் புலிகளின் யோசனைகளை ஆராய்ந்து பேச்சுக்களை முன் நகர்த்திச் செல்வதற்கு நாடாளுமன்றில அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் சார்ந்த பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்படும். அதன் ஆலோசனையின் பேரில் அடுத்த நகர்வு மேற்கொள்ளப்படுவதோடு, சர்வதேசத்துக்கும் நாட்டு மக்களுக்கும் அது பற்றி விளக்கமளிக்கப்படும்.

இதேசமயம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளும் இந்தப் பேச்சுக்களில் உள்ளடக்கப்படுவது குறித்து அரசு ஆர்வம் கொண்டுள்ளது. அவர்களின் ஆலோசனைகளையும்பெற்றுக்கொள்ள அரசு விரும்புகிறது - என அவர் மேலும் தெரிவித்தார். (க)

மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்

IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.

உத்தரவாதம் உண்டு

விலை 14,000/= மட்டும்

IDD ரூபா 25/= மட்டும்

அழைப்புக்களுக்கான கட்டண விவரம்	
மாதாந்தக் கட்டணம்	150/=
வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்)	11/=
வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு)	6/=
உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்)	4/=
உள்வரும் அழைப்பு (இரவு)	முற்றிலும் இலவசம்

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்று முழுதான துணைநிறுவனம்.

கையிருப்பு முடியுமுன் உடனே விரையுங்கள்!

மேலதிக விவரங்களுக்கு:

பவர் செலூலர் ரேடிங் கம்பனி

OFFICE:- இல. 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 7070, 0712 399 220, 0777 281 521.

SHOP:- 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (37617)

Jayoda ஜயோதா ஜயோத

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7368978 முதல் 7380720 வரை

சீட்டிழுப்பு இல. 66 திகதி 09-09-2004

வெற்றி எண்கள் 436487

சுப்பர் எண் 18

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,75,13,125/- வெல்லப்படவில்லை

வெற்றி எண்கள்	வெற்றி பெற்றோர்	பரிசுத் தொகை	முழு பரிசுத் தொகை
6 எண்களுடன் சுப்பர் எண்	-	1,75,13,125/-	-
இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள்	01	10,00,000/-	10,00,000/-
இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள்	11	50,000/-	5,50,000/-
இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள்	105	5,000/-	5,25,000/-
இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள்	1,030	500/-	5,15,000/-
இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள்	10,331	50/-	5,16,550/-
இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண்	1,02,358	10/-	10,23,580/-
வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள்	12	5,000/-	60,000/-
வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள்	101	1,000/-	1,01,000/-
வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள்	1,034	100/-	1,03,400/-
வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள்	10,231	20/-	2,04,620/-
மொத்தம்	1,25,214		45,99,150/-

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 45,99,150/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட் ரூ. 1,78,00,325/-

தொடர் இல. 6409451 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 13 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

737383-31-53
7375882-8-67
7374709-5-77
7372938-6-80
7374514-8-27

LIONS CLUB OF INTERNATIONAL DISTRICT 306 B

We Serve

மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத்தாரால் நடத்தப்பெறும்

மாபெரும் இலவச மருத்துவ முகாம்

இடம்: நவாலி YMCA மண்டபம்.

காலம்: நாளை (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை.

நேரம்: காலை 9.00 மணி தொடக்கம் மாலை 1.00 மணி வரை.

S.M.பெனாண்டோ ஸ்தாபனத்தாரால் கண்பரிசோதனை செய்து வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு கண்ணாடி வழங்கப்படும். இரத்த அழுத்தம், நீரிழிவு வியாதி மற்றும் ஏனைய வியாதிகளுக்கும் பரிசோதனை செய்யப்பட்டு மருந்து வழங்கப்படும்.

சுகாதாரத் திணைக்களத்தினால் 21 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் சனி, ஞாயிறு இருதினங்களும் (11/09, 12/09) "ருபெல்லா" ஊசி வழங்கப்படும்.

லயன் சி.சிவராஜேஸ்வரன். தலைவர். (36302)(43-29-12-15)

லயன் A.C.தவரஞ்சித் செயலாளர்.

லயன் சிவயோகம். செயற்றிட்ட செயலாளர்.

மரண அறிவித்தல்கள்

சுப்பிரமணியம் குமாரசிங்கம்

(ஓய்வுபெற்ற லிகிதர், கச்சேரி)

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குமாரசிங்கம் நேற்று 10.09.2004இல் காலமானார்.

அன்னார் இரத்தினாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற துரையப்பா சரஸ்வதிபிள்ளையின் மருமகனும் கணநாதன் (இந்தியா), மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் செ.குகநேசனின் (யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூ.சங்கம்) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கந்தசாமி, தையல்நாயகி, விக்னராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானாம்பிகை (கனடா), பரமேஸ்வரி, காலஞ்சென்ற நாகநாதன் காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.09.2004) சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செ.குகநேசன் (மருமகன்).

முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம். (36311)(29-12-15)

கந்தையா ஆனந்தராஜா

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆனந்தராஜா 07.09.2004 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - இராஜமணியின் புதல்வரும் காலஞ்சென்ற மனோன்மணி நாகலிங்கம், யோகராஜா, ஜெகராஜா (மலேசியா) ஆகியோரின் சகோதரரும் இரஞ்சிதமணி சோமசுந்தரம் (இளைப்பாறிய ஆசிரியை, வயாவிளான் ம.ம.வி.), திருமணி பஞ்சலிங்கம் (U.S.A) ஆகியோரின் மாமனாரும் முகுந்தன், வைகுந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.09.2004 புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: யோகராஜா (சகோதரன்).

'மனோவாசா', பலாலி வீதி, உரும்பிராய். (36310)(43-29-12-15).

பொறியியல் வெற்றிடங்கள்

வடபகுதியில் நடைபெறும் (வன்னிப் பகுதி உட்பட) சகல அரச, கூட்டத்தாபன, குடிசார் ஒப்பந்த வேலைகளின் தரக்கட்டுப்பாட்டைப் பேணுவதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்குமாகக் கிளிநொச்சியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு இயங்கும் நிறுவனத்தில், பின்வரும் வெற்றிடங்களுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. குடிசார் பட்டையப் பொறியியலாளர்கள் - வெற்றிடம் 01

தகைமைகள்: பட்டையப் பொறியியலாளர்களாகக் குறைந்தது 10 வருடங்கள் அனுபவம். (நீர்ப்பாசனம், வீதிகள், கட்டட நிர்மாணப்பு, பாலங்கள் கட்டுதல் போன்ற துறைகளில் ஆகக் குறைந்தது 5 வருடங்கள் அனுபவம்).

சம்பளம்: ரூபா 40,000 தொடக்கம் 60,000 வரை (சம்பளம், அனுபவம் தகுதிக்கு ஏற்றவாறு நிர்ணயிக்கப்படும்).

2. குடிசார் பொறியியலாளர்கள் - வெற்றிடம் 03

தகைமைகள்: பட்டதாரி பொறியியலாளர்கள் (குடிசார்) ஆகக் குறைந்தது 05 வருடங்கள். நீர்ப்பாசனம், வீதிகள், கட்டட நிர்மாணம், நீர் வழங்கல், பாலங்கட்டுதல் போன்ற துறைகளில் அனுபவம் - இவற்றில் இரு துறைகளில் சிறந்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

சம்பளம்: ரூபா 25,000 தொடக்கம் ரூபா 40,000 வரை (சம்பளம், அனுபவம் தகுதிக்கு ஏற்றவாறு நிர்ணயிக்கப்படும்)

3. குடிசார் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் - வெற்றிடம் - 4

தகைமைகள்: N.D.T.யுடன் அல்லது இதற்குச் சமனான தகைமைகளுடன் குறைந்தது 10 வருட அனுபவம் அல்லது S.L.T.S. தரம் I அல்லது அதற்கு மேற்பட்ட தரம், நீர்ப்பாசனம், வீதிகள் கட்டட நிர்மாணம், நீர் வழங்கல், பாலங்கட்டுதல் போன்ற துறைகளில் குறைந்தது ஒரு துறையிலாவது சிறந்த அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம்: ரூபா 20,000 தொடக்கம் 30,000 வரை (சம்பளம் அனுபவம் தகுதிக்கு ஏற்றவாறு நிர்ணயிக்கப்படும்).

4. கணனி இயக்குநரும் இலிகிதரும்

தகைமைகள்: G.C.E. (O/L) இல் 6 பாடங்களில் இரு முறைகளில் சித்தி. கணனியில் குறைந்தது 02 வருட அனுபவம் M.S.Office இல் சிறந்த அனுபவம்.

சம்பளம்: ரூபா 7,000 தொடக்கம் 9,000 வரை (சம்பளம், தகுதிக் கேற்ப நிர்ணயிக்கப்படும்).

மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு வயதெல்லை பார்க்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்துடன் பூரணமான சுயவிவரக் கொத்தையும் முடிவு திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 18.09.2004

விளம்பர இல. 2374

மே/பா - உதயன்.

(சி-37615)(33-29-12-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு தீவிரவாதிகளால் கொலை மிரட்டல்!

அமெரிக்கர்களுக்கெதிரான தாக்குதல்கள் தொடருமாம்

கட்டார்,செப்.11

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினைக் கொலை செய்யப் போவதாக 'பிரிட்ஜ் ஆப் இஸ்லாமிக்' என்ற தீவிரவாத அமைப்பு நேற்றுத் தனது இணையத்தளத்தினூடாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த எச்சரிக்கை அரபு மொழி மூலமே அந்த இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

செச்சினிய முஸ்லிம்களுக்கு எதிராகவும், உலக முஸ்லிம்களுக்கு எதிராகவும் ரஷ்ய அதிபர் புடின் செயற்பட்டுவருகிறார். உலக முஸ்லிம்களின் விடயத்தில் அவரின் கொள்கை அதிபர் புஷ்ஷின் கொள்கையோடு ஒத்ததாயுள்ளது.

அவரின் செயற்பாடுகள் உலக முஸ்லிம்களுக்கு எதிராக அமைந்துள்ளன. இதனால், அவரைக் கொலைசெய்யத் தீர்மானிக்கப்பட்டது என்று அந்த இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கை விடுத்துள்ள இந்தத் தீவிரவாத அமைப்பு அல்-கெய்டா இயக்கத்தோடு தொடர்புடையது எனத் தெரிவிக்கப்படுகிறது. எகிப்திய அதிபரைக் கொலை செய்ததும் இந்த அமைப்பினரே.

அண்மையில் ரஷ்யாவில் பெஸ்லான் நகரப் பாடசாலையில் இடம்பெற்ற பணய நாடகமூலமான அனர்த்தத்திற்கும் இந்த அமைப்பினரே உரிமை கோரியுள்ளனர்.

'பிரிட்ஜ் ஆப் இஸ்லாமிக்' என்று தலைப்பிடப்பட்ட இந்தத் தீவிரவாத அமைப்பின் இணையத்தளத் தகவலைக் கட்டாரைத் தளமாகக் கொண்டு இயங்கும் அல்-ஜெஸீரா அரபுத் தொலைக்காட்சி செய்தியாக வெளியிட்டுள்ளது.

இந்தத் தகவலையடுத்து ரஷ்யாவில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்கா, அந்த நாடுகளை விட்டு வெளியேறாவிட்டால் பெரும் ஆபத்தான நிலையை உலகில் அந்நாடு சந்திக்க நேரிடும் என அல்-கெய்டா அமைப்பின் தலைவராக உள்ள ஒஸாமா பின்லேடனுக்கு அடுத்தபடியாகச் செயற்படும் பிரதித் தலைவர் இணையத்தளமொன்றின் ஊடாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தத் தகவலையும் அல்-ஜெஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அமெரிக்கப்படையினரின் அட்டகாசங்கள் இஸ்லாமிய நாடுகளை விட்டும் நீக்கப்படாத விடத்து அந்நாட்டவர்கள் உலக நாடுகளின் பாதுகாப்பு இன்மையை எதிர்கொள்ள வேண்டிவரும்.

அவர்களுக்கெதிரான தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணம் இருக்கும். உலக முஸ்லிம்களின் விடுதலைக்காக நாங்கள் போராடி வருகின்றோம். அமெரிக்கா எண்ணெய்வளத்தைச் சூறையாடவும், இஸ்லாம் மதத்தை அழிக்கவும் கங்கணம் கட்டிக்கொண்டு பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

புடினின் தலைக்கு ரூ.-200 கோடி பரிசு

மொஸ்கோ,செப்.11

ரஷ்ய அதிபர் புடினை உயிருடன் பிடிப்பதற்கு உதவி செய்பவர்களுக்கு 200 கோடி ரூபா பரிசு வழங்கப்படும் என்று செச்சினியத் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். செச்சினியத் தீவிரவாதிகளால் சிறைப்பிடிக்கப்பட்ட பாடசாலைச் சிறுவர்களை மீட்பதற்காக நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள்.

இதைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் கொல்லப்பட்டதற்கு காரணமான செச்சினியத் தீவிரவாதிகள் அஸ்லான் மஸ்கடோவ், ஷமீல் பசயேவ் பற்றி தகவல் கொடுப்பவர்களுக்கு ஒரு லட்சம் கோடி ரூபா பரிசு அளிக்கப்படும் என்று புடின் அறிவித்தார். இதற்குப் போட்டியாக செச்சினியத் தீவிரவாதிகள், புடினை உயிருடன் பிடித்துக்கொடுப்பவர்களுக்கு 200 கோடிரூபா பரிசு அளிக்கப்படும் என்று அறிவித்துள்ளனர்.

தீவிரவாதிகளின் இணையத்தளத்தில் இந்த அறிக்கை இடம்பெற்றுள்ளது. செச்சினியா மீது புடின்தான் யுத்தம் நடத்துகிறார். பெஸ்லான் நகரப் பாடசாலையைக் கைப்பற்ற புடின்தான் காரணம். செச்சினியா விடுதலைப் போராட்டத்திற்கு கெட்டபெயர் ஏற்படுத்தும் நோக்கத்தோடு பல தாக்குதல்களை அவர்தான் நடத்தினார் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆஸி. தூதரகம் தாக்கப்படும் என்று 45 நிமிடங்களின் முன்னரே தெரியுமாம்!

அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

ஜகர்த்தா,செப்.11

இந்தோனேஷியத் தலைநகர் ஜகர்த்தாவில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்திற்கு வெளியே நடத்தப்பட்ட கார்க் குண்டுத்தாக்குதலுக்கு 45 நிமிடங்களுக்கு முன்னதாக மேற்குலகத் தூதரகங்கள் தாக்கப்படும் என்ற அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தோனேஷியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள இஸ்லாமியப் போராளி ஒருவர் விடுதலை செய்யப்படாவிட்டால் மேற்குலகத் தூதரகங்கள் தாக்கப்படும் என்று தொலைபேசி மூலம் எச்சரிக்கப்பட்டதாக ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலக்ஸாண்டன் டவ்னர் தெரிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்திற்கு வெளியே நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலுடன் சம்பந்தப்பட்டார் என சந்தேகிக்கப்படுகின்ற அல்-கெய்டா இயக்கத்தோடு தொடர்புடைய ஜெம்மா இஸ்லாமிய அமைப்பின் ஆன்மீகத் தலைவரான அபூபக்கர் பஷீர் என்பவரே இவ்வாறு இந்தோனேஷியாவில் பொலீஸாரால் தடுத்துவைக்கப்பட்டவராவார்.

இவருக்கும், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதலுக்கும் தொடர்பிருப்பதாக இந்தோனேஷியப் பொலீஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை - ஜகர்த்தாவிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்திற்கு வெளியே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதலுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை இந்தோனேஷியா தீவிரப்படுத்தியுள்ளது.

இந்தப் பயங்கரவாதச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்யும் பொருட்டு நேற்றுமுன்தினம் இரவு முதல் பொலீஸாரும், நியாயாதிக்கச்சபை நிபுணர்களும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றார்கள்.

ஜமைக்காவை நோக்கி 'இவான்' புயல் நகர்கிறது

ஜமைக்காவை நோக்கி இவான் என்றழைக்கப்படும் பெரும் சக்தி வாய்ந்த சூறாவளி நகர்வதாக அந்நாட்டு வழிமண்டலவியல் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தத்தீவின் தாழ்நிலப்பிரதேசங்களில் வசிக்கும் ஐந்து லட்சம் மக்கள் தமது வீடுகளை விட்டும் வெளியேற வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜமைக்காத் தீவில் 27 லட்சம் மக்கள் உள்ளனர். பலர் இந்த அறிவிப்புக் கிடைத்தும் வெளியேற அச்சம் வெளியிட்டுள்ளனர்.

திருட்டு மூலம் தமது சொத்துக்கள் சூறையாடப்படும் என அவர்கள் அஞ்சுகின்றனர். ஆனால், இவான் சூறாவளி பேரழிவு ஏற்படுத்தியிருக்கும் விடயத்தை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்

மணித்தியாலத்திற்கு 150 மைல் வேகத்திற்கு நகரும் இப்புயல், அமெரிக்காவின் தீவுப்பகுதிகளில் மூன்று பேரையாவது பலிகொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்கிழக்குக் கரிப்பியன் பகுதியில் 20 பேர்வரை இறந்துள்ளனர் என மற்றொரு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சூடான் அரசுமீது அமெ. குற்றச்சாட்டு!

சூடானின் மேற்குப் பிராந்தியமான தார்பூரில் இனப்படுகொலையை நடத்தியது தொடர்பாக சூடான் அரசையும், அதன் ஆதரவு ஆயுதக் குழுவையும் அமெரிக்க அரசுத்துறை செயலர் கொலின் பவல் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அந்தப்பகுதியில் இனப்படுகொலை நடத்தப்படுவதாகவும், இந்நிகழ்வுகள் தற்போதும் அங்கு தொடர்ந்துகொண்டிருக்கலாம் என்றும் தமது புலனாய்வுக்குழுவினால் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களில் இருந்தே தான் முடிவுசெய்தார் என்று வாஷிங்ரனில் உள்ள செனட் வெளியுறவுக் குழுவிடம் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

ஆயிரக்கணக்கானோர் கொலைசெய்யப்பட்டு, 10 லட்சம் பேர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய தார்பூர் பகுதியில் நடைபெற்ற அக்கிரமங்களுக்கு காரணமான ஜான்ஜாவித் அமைப்பின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த போதுமான நடடிக்கைகளை மேற்கொள்ளாதது குறித்து அவர் சூடான் அரசைக் குறைகூறினார்.

சூடான் அரசிடம் இருந்து வெறும் பேச்சுக்களை அல்லாமல் நடவடிக்கைகளையே சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பதாகவும் கொலின் பவல் கூறினார்.

உலக அரங்கில்

உலகில் ஆண்டுதோறும் 10 லட்சம் பேர் தற்கொலை!

உலகம் முழுவதும் ஆண்டுதோறும் 10 லட்சம் பேர் தற்கொலை செய்துகொள்கின்றார்கள். மன நிலைக்கோளாறு, தீராத நோய், போரினால் ஏற்படும் இழப்பு உட்படப் பல்வேறு காரணங்களால் இந்தத் தற்கொலைகள் நிகழ்கின்றன என்று அறியப்பட்டுள்ளது.

இந்தத்தகவலை உலக சுகாதார நிறுவனத்தின் மருத்துவத்துறைப் பிரதிநிதி காதரின் லி கால்ஸ் ஐக்கிய நாடுகள் சபைக்குத் தெரிவித்திருக்கிறார். நாளுக்குநாள் இந்த எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. உலக தற்கொலைத் தடுப்பு தினத்தை இன்று முதல் பல்வேறு அமைப்புகள் தற்கொலைத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன.

திறைஞ்சனாலம் சங்கானை

விஜயகாந்த் (இருவேடம்). குஷ்பு. ரோஜா நடித்த வீரம் விளைந்த மண்ணு

வெள்ளி, சனி, ஞாயிறு. (நீள்வி)

STRIKE FORCE (இரவு 8.45புநே) தினமும் 11.00, 2.45, 6.00(புநே)

லக்சுமி இணுவில்

தனுஷ், சாயாசிங், கருணாஸ் மற்றும் பலர் நடிப்பில்

திருடா திருடி (நீள்வி)

காட்சிநேரம் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேநே வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த மதுர

பு.நே.:10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்

தனுஷ். சிந்துநுலானி. கருணாஸ். மணிவண்ணன். நடிப்பில்

Kathirkamam (நீள்வி)

(தி-36415) காட்சிநேரம்: 11.00,3.00, 7.00 (புதிய நேரம்)

மரண அறிவித்தல்

பண்டிதர் அப்பாப்பிள்ளை ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை ஆறுமுகம் 08.09.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அற்புதமலர் அவர்களின் கணவரும் இராசம்மா, பொன்னம்மா, இராமசாமி, மனோன்மணி, பொன்னம்பலம் ஆகியோரின் சகோதரரும் விவேகானந்தன், சிவானந்தன், முருகானந்தன் வசந்தமலர், மங்கையர்க்கரசி, திலகவதியார் ஆகியோரின் தந்தையும் பாலராணி, மகாராணி, குணலட்சுமி, துரைலிங்கம், கணவதிப்பிள்ளை, செந்தில்நடராஜா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் திருவடிநிலை மயானத்திற்கு பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம்,
சுழிபுரம். (36274)(30-11-18)

தகவல்:
அ. இராமசாமி (சகோதரன்).

மரண அறிவித்தல்கள்

திருமதி கருணைநாதன் மெற்றில்டா ஞானசீலி

வயாவிளான கிழக்கு, ஒட்டகப்புலத்தைப் பிறப் பிடமாகவும் இல.84, கொழும்புத்துறை வீதி, யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கருணை நாதன் மெற்றில்டா ஞானசீலி 08.09.2004 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருதிருமதி வைத்தியாம்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், கருணைநாதனின் அன்பு மனைவியும், நிமலறோஜினி, ஸ்ரனிஸ்லஸ் ஞானறாஜ் (தபாலக ஊழியர் - யாழ். பிரதம தபால் நிலையம்), மேரி சுகிந்தினி (விக்னா கல்வி நிறுவன பகல் நேர வகுப்பு மாணவி), ஆன் நிரோசா (திருக் குடும்பக் கன்னியர்மட மாணவி - ஆண்டு-9) ஆகியோரின் அன்புத தாயாரும் மேரி மனோன்மணி, மேரி திரவியம், மற்றில்டா ஞானமணி, அன்ரன் அமலநாதன் (பிரான்ஸ்), மேரி றஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று பிற்பகல் 3 மணிக்கு (பு.நே.) பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுப் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 84, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 077-7240478
(36312)(30-18)

தகவல்:
பொ.கருணைநாதன்
(கணவர்).

வலத்திசார் மரியதாஸ் (காந்தி)

குருநகரைப் பிறப்பிடமாகவும் 54, மவுண்கார்மேல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வலத்திசார் மரியதாஸ் (காந்தி) 08.09.2004 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வலத்திசார் - தங்கரட்டிணத்தின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சவுரியான் - சவுரியம்மாவின் அன்பு மருமகனும் றீற்றம்மாவின் அன்புக் கணவரும் குயின்ரஸ் (லண்டன), காலஞ்சென்ற றொசான் மற்றும் தர்ஷினி, நிறஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் றோஸ் (ஆஸ்திரேலியா), இராசநாயகம், அன்ரன் (இத்தாலி), வபி, வெள்ளையம்மா (கனடா), றெஜினா (கொலண்ட்), பொன்னம்பலம், ரஜனி (கனடா), ஸ்ரீபன் (பிரான்ஸ்) அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.09.2004) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரிசுத்த கொஞ்சேஞ்சமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.54, மவுண்கார்மேல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(36313)(30-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.தொ.காவின் முத்து சிவலிங்கம் அமைச்சரானார் அவருக்குக் கீழ் செல்லச்சாமி பிரதி அமைச்சர்!

தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சை நேற்று ஏற்றனர்

கொழும்பு,செப்.11

எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து ஆளும் கட்சித் தரப்புக்குத் தாவியதற்குப் பரிசாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு எதிர்பார்க்கப்பட்டபடி ஓர் அமைச்சர் பதவியும், ஒரு பிரதியமைச்சர் பதவியும் வழங்கப்பட்டன.

இ.தொ.காவின் நுவரெலியா மாவட்ட எம்.பியான முத்து சிவலிங்கம் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு, சமூக அபிருத்தி அமைச்சராகப் பதவியேற்றார்.

இ.தொ.காவின் மிக மூத்த உறுப்பினரும் முதிர்ந்த அரசியல்வாதியுமான எம்.எஸ்.செல்லச்சாமி, முத்து சிவலிங்கத்தின் கீழ் செயற்படும் பிரதி அமைச்சராக நேற்றுப் பதவியேற்றார்.

மூத்த அரசியல் பிரமுகரும், இ.தொ.கா. வரலாற்றோடு நீண்டகாலம் பின்னிப் பிணைந்தவருமான செல்லச்சாமிக்கு, கட்சியில் அவருக்குப் பிந்தியவருமான முத்து சிவலிங்கத்தின் கீழ் ஒரு பிரதி அமைச்சர் பதவி ஒதுக்கப்பட்டமை குறித்து அரசியல் வட்டாரங்களில் பலரும் புருவத்தை உயர்த்தினர்.

கட்சியின் தலைவரான ஆறுமுகன் தொண்டமான் இந்தத் தடவை அமைச்சர் பதவி எதையும் ஏற்காமல் ஒதுங்கி, தனது கௌரவத்தைப் பேணியது போன்று, கட்சியின் பழம் பெரும் தலைவர்களுள் ஒருவரான எம்.எஸ். செல்லச்சாமியும் பிரதி அமைச்சர் பதவியை ஏற்காமல் ஒதுங்கியிருந்திருந்தால் அவரது கௌரவம் மேலும் பேணப்பட்டிருக்கும் என்று பலரும் கருத்து வெளியிட்டனர்.

இதுவரை காலமும் தோட்ட உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சராக இருந்த சி.பி.ரட்ணாயக்காவிடம் நேற்றுக் காலை அப்பதவியை இராஜினாமாச் செய்யும்படி கோரப்பட்டது. அதையடுத்து அவர் இராஜினாமாச் செய்தார்.

அவருக்குப் புதிதாக அமைச்சுப் பதவி ஏதும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதை இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை அறியமுடியவில்லை.

இதேவேளை, இந்த அமைச்சின் செயலாளராக இதுவரை பணியாற்றிவந்த கலாநிதி பிரதாப் இராமானுஜம், இ.தொ.கா. அமைச்சர் ஒருவரின் கீழ் அப்பதவியைத் தொடர்ந்து வகிப்பாரா என்பதும் தெரியவில்லை.

நேற்று முற்பகல் ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சராகவும் பிரதி அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் செய்த முத்து சிவலிங்கமும், செல்லச்சாமியும் நேற்றுப்பிற்பகல் அமைச்சுக்குச் சென்று தமது பதவிப் பொறுப்புக்களை ஏற்றனர்.

ஆனால், அமைச்சின் செயலாளர் இராமானுஜம் அவர்களை வரவேற்க அங்கிருக்கவில்லை அவர் ஜனாதிபதி செயலகத்துக்குச் சென்றிருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. அவருக்குப் புதிய பொறுப்பு ஏதும் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

நேற்று முத்துசிவலிங்கமும், செல்லச்சாமியும் தமது அமைச்சுகளுக்குச் சென்று பொறுப்புக்களை உத்தியோகபூர்வமாக ஏற்ற நிகழ்வில் இ.தொ.கா.தலைவர் ஆறுமுகன் தொண்டமானும், ஏனைய எம்.பிக்களும், பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

(ஐ-6-9)

'ஸ்ரேறிங்' தாக்கி சாரதி காயம்

பின்புறமாக சேற்றுக்குள் புதைந்த உழவு இயந்திரத்தின் 'ஸ்ரேறிங்' சாரதியின் நெஞ்சில் பலமாக அடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்றுப் பிற்பகலில் கிளிநொச்சியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் விமலச்சந்திரன் (வயது-31) என்பவரே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (9)

மீனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்களின் படகுகளில் நெடுந்தீவு நோக்கிப் புறப்பட்டோம்.

ஒவ்வொருவரிடமும் தலா மூவாயிரம் ரூபா வீதம் பெற்றுக்கொண்டு நெடுந்தீவில் இறக்கி விடுவதாகக் கூறி அழைத்துவந்த மீனவர்கள் கச்சதீவில் எம்மை இறக்கிவிட்டுச் சென்றுவிட்டனர். எவரது தொடர்புகளும் அற்ற நிலையில் கச்சதீவில் தங்கியிருந்த நாம் உணவுக்காகவும் குடிதண்ணீருக்காகவும் பெருதும் கஷ்டப்பட்டோம்.

அவ்வப்போது கச்சதீவுக் கரைக்கு இந்திய மீனவர்கள் தொழில் நிமித்தம் வந்துபோனார்கள். அவர்களிடம் உதவி கோரினோம். ஆனால், அவர்கள் பெரிதாக உதவி எதனையும் செய்யவில்லை.

தமிழ்நாட்டிலுள்ள அகதிமுகாம்களில் எமக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் உணவுக்கே போதாது அங்கு இப்போது பல தொற்றுநோய்கள் பரவத்தொடங்கியிருக்கின்றன. அத்துடன், இந்திய கடலோரக் காவல் படையினரின் கெடுபிடிகள், தொந்தரவுகளும் அதிகரித்திருக்கின்றன.

இந்த நிலையில் அங்கு தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது என்பதனாலேயே ஆபத்துக்களின் மத்தியிலும் தாயகம்திரும்பத் தீர்மானித்தோம்-என்று அவர்கள் தெரிவித்தனர். (ஐ-4-12)

இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைப் படைகளின் வலிமையும், திறமையும், இராணுவப் பயன்பாடும் கணிசமாக அதிகரிக்கும் என இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றன.

உத்தேச ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்திய உயரதிகாரிகள் குழு ஒன்று அடுத்த வாரம் கொழும்பு வரவிருக்கின்றது.

அந்த அதிகாரிகளின் வருகையோடு ஒப்பந்த வாசகங்கள் பெரும்பாலும் இறுதி செய்யப்பட்டுவிடும் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன.

அதனைத் தொடர்ந்து அடுத்த மாத இறுதியில் இருநாட்டுக் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அப்போது இந்தியாவுக்கு விஜயம்செய்து அப்போதைய இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்த சமயம் இந்த ஒப்பந்தத்துக்கு கால்கோள் இடப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தியாவுடன் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வதன் மூலம் விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான அச்சுறுத்தலைச் சமாளிக்கலாம் என்று இலங்கைத் தரப்பு கருதுகின்றது.

இதனாலேயே, இலங்கை அரசுத் தரப்பில் மாற்றம் ஏற்பட்டுப் புதிதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிப்பீடம் ஏறிய பின்னரும் இந்த ஒப்பந்தத்தைச் செய்வதில் தீவிர முனைப்புக் காட்டப்பட்டுவருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-3-7)

கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் இந்தியத் தூதுவரைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழுவில் இடம்பெற்றிருந்த இரா. சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கனடா தூதுவரைச் சந்தித்த குழுவில் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஐ-7-9)

கச்சதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கச்சிமடம் என்ற இடத்திலிருந்து இந்திய மீனவர்களால் மீன்பிடிப்படகுகளில் ஏற்றிவரப்பட்ட இவர்கள் கச்சதீவுக் கரையில் இறக்கி விடப்பட்டிருந்தும் - பின்னர் அவர்கள் கச்சதீவில் ஐந்து நாள்களாக உணவு, குடிதண்ணீர் வசதிகள் இன்றி தவித்துக்கொண்டிருந்ததும் - தெரிந்தவையே. (ஐ-3-4-112)

ஈவினையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் சாட்சியம் அளித்தனர்.

எமது தந்தையாரை முன்பு சிலர் கொலை செய்ய முயன்றனர். அந்தக் கொலை முயற்சி தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

"சம்பவ தினம் வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நடந்தது. அதற்குப் போய் வந்து அவர் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்.

"அச்சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தந்தையை முதலாளி என அழைத்தனர். அவர்களுடன் அவர் கதைத்துக் கொண்டிருந்தார். திடீரென வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. தந்தையார் சரிந்து வீழ்ந்தார். அவர்கள் தப்பி ஓடிவிட்டனர்." என்று சாட்சியத்தில் அவர்கள் தெரிவித்தனர்.

சடலத்தில் ஐந்து சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. நெஞ்சில் மூன்றும், வாய், வலதுகை ஆகியவற்றில் ஒவ்வொரு காயங்களும் காணப்பட்டன என மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாட்சியங்களைப் பதிவுசெய்த நீதிவான் பிரேதபரிசோதனையின்பின், சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (ஐ-3)

புலிகளை ஆத்திரமூட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்படுகின்றது.

இராணுவத் தளத்தின் திசையிலிருந்தே தாக்குதலாளர்கள் புலிகளின் நிலையை நோக்கி வந்திருக்கின்றார்கள்.

இந்த இடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள கண்ணிவெடி ஆலோசனைக்குழு (Mine Advisory Group - MAG)வின் அறிக்கைகளின்படி -

தாக்குதலாளர்கள், புலிகளுடனான மோதலின் பின்னர் கண்ணிவெடி அகற்றும் 'MAG' பிரிவுக்குள் நுழைந்து, அங்கிருந்தோரைத் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி, தாக்குதல் நடந்த இடத்துக்குச் சென்று அங்கு உயிரிழந்து கிடக்கும் இருவரின் சடலங்களைத் தாங்கள் அகற்றுவதற்கு உதவும்படி பணித்துள்ளனர்.

'MAG' பிரிவிலிருந்த 'ஸ்டெச்சர்களை' அகற்றிய அவர்கள், சடலங்களைத் தூக்கிவரும்படி அந்நிறுவன ஆள்களை வற்புறுத்தினர். ஆனால், 'MAG' உறுப்பினர்கள் அதைச் செய்ய மறுத்தனர். அப்போது துப்பாக்கி முனையால் நடத்தப்பட்ட தாக்குதலில் 'MAG' நிறுவன ஆள்கள் நால்வர் காயமடைந்தனர்.

எனினும், துப்பாக்கிமுனை அச்சுறுத்தலில் அவர்கள், தாக்குதலாளரின் மிரட்டலுக்கு அடிபணிந்து 'MAG' அனுப்பு வாகனத்திற்கு சடலங்களைத் தூக்கிவந்தனர்.

தாக்குதலாளர்கள் 'MAG' வாகனத்தை இலங்கை இராணுவத்தின் தம்பட்டி முகாமை அண்மித்த பகுதிக்கு வழிநடத்தினர். அங்கு சடலங்களுடன் வாகனத்தை விட்டு இறங்கி இலங்கை இராணுவ முகாமுக்குள் நுழைந்தனர்.

இந்த விவகாரங்கள் குறித்து யாருக்கும் தகவல் கூறக்கூடாது என்று 'MAG' ஆள்களை அவர்கள் எச்சரித்தனர்.

காயமடைந்த இந்த 'MAG' நிறுவன ஆள்கள் நால்வரும் 8 ஆம் திகதி 8.30 மணிக்கு தங்கள் இடத்திற்குத் திரும்பினர். அவர்கள் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தாக்குதலாளர்கள் 'MAG' நிறுவனத்தின் 'ஸ்டெச்சர்களுடன்' அந்நிறுவனத்தின், கைத்தொலைபேசிகள் மற்றும் 'வாக்கிடோக்கி' தொடர்புக் கருவிகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

தம்பட்டி இராணுவ முகாமுக்கும், புலிகளின் நிலைக்கும் அண்மையில் உள்ள 'MAG' நிறுவனத்தின் ஆள்களின் சாட்சியமும் 'MAG' வாகனங்களில் தாக்குதலாளர்கள் வந்திறங்கி, உயிரிழந்த தங்களின் ஆள்களை இலங்கை இராணுவ முகாமுக்குள் கொண்டுசென்றதும் இந்தத் தாக்குதலில் இலங்கை இராணுவத்தின் தொடர்பைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பேணுவதற்கு வழிசெய்யாத வகையிலான இத்தகைய சம்பவங்களில் இது முதலாவதல்ல என்பது உங்களுக்கு நன்குதெரியும்.

தமிழ் மக்களினதும் அவர்களின் தலைமைகளினதும் பொறுமை எல்லை மீறுகின்றது என்பதும் -

புலிகளை ஆத்திரமூட்டுவதன் மூலம் முழுச் சமாதான முயற்சிகளையும் குழப்பலாம் என்ற எண்ணத்தில் இலங்கை இராணுவம் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுகின்றது என்ற பொதுவான அச்சமும், சந்தேகமும் நிலவுகின்றது என்பதும் -

உங்களுக்குத் தெரிந்தவைதான்.

சமாதானத்தைப் பேணும் நன்நோக்கத்துக்காக, இத்தகைய சம்பவங்கள் மீளவும் நிகழாமல் இருப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமாகும்.

- இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலையாள்கள் தேவை

★ சமையல்காரர்
★ உபசரிப்பாளர்
★ சுத்தம் செய்வோர்
★ வெயிட்டர்
★ தோட்டவேலை

இளைஞர்கள் விரும்பத்தக்கது.
12.09.2004 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.00–3.00 மணி இடையில் சமுகந்தரவும்.

மிலேனியம் உல்லாச பயணிகள் விடுதி
76/60, இராமநாதன் வீதி,
(36316) கல்லடி – யாழ்ப்பாணம்.

புத்தகப் பிரியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

நல்லூரில்
"புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்"
காலம்: 11, 12, 13, 14 வரை
நல்லூர், பருத்தித்துறை வீதி,
(செட்டித்தெருவுக்கு முன்னால்)
தொடர்புகளுக்கு: தெ.ரவீந்திரன்
"கௌரி வாசம்"
(36303) 0777 840318 இணுவில் மேற்கு.

முக்கிய அறிவித்தல்

AL 2005
★ நாள்தோறும் 6 p.m. இல் நடைபெறும் அலகுகள்
INORGANIC & ORGANIC
PHYSICAL & THERMO & PAPER CLASS
By: அன்பழகன் B.Sc.
இவ்வாரத்தின்பின் இப்பிரிவுக்கு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
(6-37409)
CHEMISTRY CENTRE
Temple Road, (Green Park முன்னே).

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சலுகை

இரு வருட உத்தரவாதமுடைய உயர்நுட்பம் வாய்ந்த PIV கணனியினை ரூ30,000 முதற் கட்டணத்துடன் இன்றே உங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். இச்சலுகை 11/09/04 லிருந்து 15/09/04 வரை மட்டுமே.

For more information Please contact our office (no telephone inquiries please)
Director
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kandarmadam, Jaffna

யாழ் நகரில் உங்கள் பயணத் தேவைகளை இலகுவாக்க

அறிமுகமாகிறது

புத்தம் புதிய "Pride PJ 125 DELUXE" மோட்டார் சைக்கிள்கள்

அறிமுக விலை ரூ. 117,000 மட்டுமே

- ஜப்பானிய இயந்திரத்தைக் கொண்டது.
- "Self & Kick Start" வசதிகளைக் கொண்டது.
- சிக்கனமானது.

உங்கள் அதி நவீன "Pride PJ 125 DELUXE" மோட்டார் சைக்கிளை இப்போதே பெற்றுக் கொள்ளுங்கள்.

Sky Electronic Systems
1C, Stanley Road,
Jaffna

அழையுங்கள் - 0777 305533

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கல்லூரி வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.